20

தணம் III

கணம்:

கணம் என்பது 'கர்ப்பச்சூடு' எனச் சொல்லப்படும். மாந்தத்தின் தொடர் நோயே கணமாகும். குழந்தைக்கு மாந்த நோய் ஏற்பட்டு முறையாகக் குணமாகாமல் உடலில் இருந்தே முற்றி வரும்நோய் கணமாகும். குழந்தைகள் பாலும் குடித்துச் சோறும் உண்ணும்பருவத்தில் உண்டாகும் நோயாகும். மூன்று ஆண்டு முதல் ஏழாண்டு வரை துன்பத்தைத் தரும்.

நோய்வரு வழி:-

உள்ளம் தெளிவற்றிருக்கும் தாய்மை உடல்நிலை பாதிக்கப்படும் போது அவளை அண்டி வாழும் குழந்தையினது உடலும் பாதிக்கப்பட்டு அழிவுறுகிறது. அதிகமான சூடேற்படும் போது சிலேத்துமம் அதிகமாகச் சேர்வதாலும் தாய்க்கு அதிகமான துயரம் ஏற்படுவதாலும் பல நீர்களைப் பருகுவதாலும் அதிகமான சலதோடம் ஏற்படுவதாலும், பசித்திருக்கும் தாயின் பாலை உண்பதாலும் குழந்தைக்குக் கணநோய் ஏற்படுகிறது. (476-59), (477-130)

நோய் வருவழி:-

தாய் தொகுதிகளை அதிகமாக உண்ணல், தாகம், பசி, துன்பம் ஆகிய துன்பங்களைச் சகித்தல், தாய் தந்தையரின் குற்றங்கள், தோடங்கள் ஆகிய காரணங்களால் குழந்தைக்கு கணை ஏற்படுகிறது. (பை. பி. போ... -181)

சன்னிதோடம், தாய், தந்தை அதிபோகம் பாவம், தாய் முலையுண்ட தோடம், முன் செய்த தோடம், சலதோடம் ஆகிய தோடங்களால் 16 கணங்களும் வந்து சேரும். (கை. பி. 98-165) (ரு 798-22)
(ரு 109-206)

கணத்தின் குறிகுணம்:-

வயிறு நோதல், நாக்கு புண்ணாகும், மேல் மூச்சு வாங்கும். 'கர்கர்' என்ற ஒலியுடன் இருமல் ஏற்படும், சொல்லமுடியாதபடி பலவிதமான வேதனை உடம்பில் ஏற்படும். பொருத்துப் பொருத்துச் சிறங்காயும், கண்ணின் நிறம் மஞ்சள் நிறத்தில் மாறிக் காணப்படும்.

கண் வெளுத்து பார்த்தல், உச்சியில் குழி விழுதல், தொண்டை கம்மலாகப் பேசல், முகத்தில் சிறிய வியர்வை உண்டாதல் வயிறு கழிதல், காய்தல் என்பவை பொதுக்குறிகுணங்களாகும்.

அனல் அதிகமாகி வாயுவைப் பற்றி அதைத் தீக் கொள்ளும். அதனால் அனல் வெளியேற வழியில்லாமல் குழந்தைக்கு அதிகமாகச் சூடுண்டாகி உடல் களைப்பு ஏற்படும். குழந்தை தாயைவிடாமல் பிடித்துக் கொள்ளும் வாய் உலரும், நீர் வேட்கை அதிகமாயிருக்கும், பேதியாகும், மலம் எவ்வளவு கசிவுள்ளதாக இருக்கும். அத்துடன் மலையாளத்து எப்பொழுதும் கடுமையான நீரின் நிறத்தைப் போன்ற நீர் கசிந்து கொண்டேயிருக்கும். (477-131)

சில குழந்தைகட்குச் சீதமாகவும், இரத்தமாகவும் சீதமும் இரத்தமும் கலந்த பேதியாகும். சில குழந்தைகட்கு வெள்ளை நிறத்துடன் தண்ணீர் போல மலம் வெறாகவும் கழியும், சில குழந்தைகட்கு கடுமையான தண்ணீர்

போலப் பேதியாகும். வயிறு உப்பும், கைகள், கால்கள், முகம் இவை கறுத்துச் சில சமயத்தில் எரிந்தும் குளிர்ந்தும் வெதுப்புண்டாகும், இருமலுண்டாகும்.

கணத்தின் அனல் வீசுவது போன்ற உட்சுரம் இருக்கும். கண சுரத்தில் மலம் உள்ளே தங்கியிருக்கும். மார்பு கூம்புபோல் எழும்பி வாய் மிகவும் நாற்ற மெடுக்கும், மலம் கெட்டியாகும் என்பன போன்ற குறிகள் உண்டாகும்.

மலம் தீய்ந்தும் நீர் சுருங்கியுமிருக்கும் மார்பில் அதிகச் சூடிருக்கும். வயிறும் மலத்துவாரமும் மிகவும் எரியும், மயக்கமுண்டாகும், நா வறளும், பசியுங் குறையும், உட்சுரமிருக்கும் இப்படிக் குழந்தையின் பன்னிரண்டு வயது வரையில் தொடர்ந்து வரும். (57?-11), (476-60-61)-(477-132)

பொதுக்குறிகள்:-

உடலில் கதகதப்பு, சில சமயங்களில் உட்சுரம், முறித்த பாலைப் போன்ற பேதி, வயிறு பெருத்து கைகால் மெலிந்து குச்சியைப் போலாதல் சில சமயங்களில் சீதரத்தங்காணல், கை, கால் குளிர்ந்திருத்தல், இருமல், கண் குழிந்திருத்தல், உடல் வெளுத்திருத்தல், உடல் வற்றி மெலிந்து மார்பு கூம்பு போலெழும்பியிருத்தல், வாயில் நாற்றம், சில சமயம் மலம் தீய்ந்திருத்தல், உடல் மற்ற பாகங்களைப் பார்க்கிலும் அதிகச் சூடாயிருத்தல் வயிற்றிலெரிச்சல், ~~தலை~~ மயக்கம், தண்ணீர் சிறுத்து இறங்குதல், மார்பிலுந் தலையிலும் கூம்புபோல் வீங்குதல் முதலியனவைகளாம்.

இந்த குறிகள் எல்லா வகைக்கண நோய்களுக்கும் பொதுவானவைகள்.

இவை எல்லாம் ஒரேநேரத்தில் இருக்க வேண்டுமென்பது அவசியமல்ல. சிற்சில குணங்கள் சிலருக்கு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவுமிருக்கும் ஆகையால் முதன்மையான குறிகளைக் கருத்தில் கொண்டு தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும்.

பத்தியம்: வெப்பத்தை அதிகரிக்கச்செய்யும் கபத்தை உண்டாக்குங் கடிய உணவு வகைகள், புளி முதலியவைகளை நீக்க வேண்டும்.

(வை.பி. போதினி -182-183)

கணத்தின் வகைகள்:-

கணம் 16 வகைப்படும். வாதகணம், பித்தகணம், கபகணம், மாந்தகணம், தீச்சகணம், பிரளிக்கணம், சூலிக்கணம், சுளிக்கணம், ஆமக்கணம், வெட்சிக்கணம், கர்க்கா கொதிக்கணம், பிறக்கணம், தேரைக்கணம், மூக்குகணம், அதிக்கணம், பேரிக்கணம், விடக்கணம், இரத்தகணம், ஜலகணம், மந்தாரகணம் ஆகியன இருபத்தொன்றில் 16 மட்டும் குழந்தைக்கு வருவனவாம்.

(ரு 798-23), (வை.பி. 98-166)

கணங்களின் தொகுப்பு:-

வாதகணம், பித்தகணம், சிலேத்துமகணம், மாந்தகணம், நீர்க்கணம், பிரளக்கணம், ஜலகணம், சுரகணம், மகாகணம், மது கணம், வறட்கணம், கொதிப்பு கணம், விக்கல்கணம், பிதக்கணம், அந்தகல் கணம், மந்தாரகணம், வாதகணம், நீராம கணம், ஆமகணம், மூர்க்கணம், மூலகணம், பேராம கணம், ரத்தகணம் ஆகிய இருபத்தி மூன்று வகைகள் உள்ளன. -(476-60)

எல்லைக் கணங்களாவன:-

மகாகணம், சுரகணம், சுரகணம், வறட்கணம், நீர்க்கணம், மூக்கு கணம், மூலகணம், ஆமகணம் ஆகியவையே எட்டு கணங்களாகும்.

உதடு வெடித்தால் அது மகாகணம், வயிறு கழிந்தால் சுரகணம், விலா எலும்பும் சுருக்கி வலித்தால் சுரகணம், உடம்பில் சுரம் ஏற்பட்டால் அது வறட்கணம், வேர்வை அதிகமாக வந்தால் நீர்க்கணம், மூக்கலரின் மூக்குகணம், சீதரத்தம் கழியின் அடி தள்ளினால் மூலகணம், நோயாளி அலறினால் ஆமகணம்.
(வ. 362-5)-(476-11)

வில்வமிலைக் குடிநீர்:-

வில்வயிலை, தந்திலை, வெள்ளை வெங்காயம் இம்மூன்றையும் வகைக்கு 9கி. எடுத்து ஒன்றாக அரிந்து சிதைக்க நசுக்கி அதில் 3கி. வெந்தயமும் 3கி. சீரகமும் வெள்ளைக்கு 15மி.லி சேர்த்து 165 மி.லி. நீர் வார்த்து அதை 80மி.லி. யாகக் காய்ச்சி, 3 அல்லது 5 நாட்களுக்கு காலையிலும், மாலையிலும் கொடுக்க வேண்டும்.
(476-63)-(477-134)

மணத்தக்காளிக் குடிநீர்:-

ஒருபிடி மணத்தக்காளியிலையும் ~~[illegible]~~ (395மி.லி.) எருக்கிலையும் எடுத்து அரிந்து சிதைக்க நறுக்க வேண்டும். பின்பு 140கி. வெந்தயத்தை அதனுடன் சேர்த்து பொன்நிறமாக வறுத்துக் கொள்க. அதில் 2.6கி. நீர்விட்டு 32.5 மி.லி. யாகக் காய்ச்ச வேண்டும். அதைக் காலையிலும் மாலையிலுமாக மூன்று நாளைக்குக் கொடுக்க கணம் குணமாகும்.
(482-77).(476-65).(477-135)

நீர்முள்ளிக் குடிநீர்:-

சங்கம்வேர், நீர்முள்ளி, நெல்லி, கடுக்காய்த்தோல், நெல்லிக்காய், தான்றிக்காய்த் தோல் ஆகிய இந்த பொருட்களை வகைக்கு 9கி. எடுத்து இடித்து 650மி.லி. பசுவின் மோரில் சேர்த்து 165 மி.லி. குடிநீராக்கி மூப்பும் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. அதனை ~~[illegible]~~ 15-30மி.லி அளவாக இருவேளையும் 3 அல்லது 5 நாள் கொடுக்க அணைத்து கணமும் தீரும்.
(482-76).(477-174)

குடிநீர்:-

நாவல் பட்டை, வெண்ங்கேர், அவரி, வல்லாரை கத்தாழம்பூவின் இரசம், முத்தக்காசு ஆவாரை இவைகளைக் கைப்பிடியாக எடுத்துக் கொள்க. எட்டொன்றாகக் காய்ச்சிக் கொள்க. பிறகு சாதிக்காயை அதிலரைத்து 15-30 மி.லி அளவு கொடுக்கக் கழிச்சல் நீங்கிப் போகும். (ஏடு 435-4)

குடிநீர்:-

அத்தி, ஆல், அரசு மொட்டுகள், மருதம்பட்டை, அத்திப்பிஞ்சு, பருத்திப் பிஞ்சு, நத்தைச்சூரிவேர், முத்தக்காசு, ஆகியவற்றைச் சமனெடுத்து இடித்து வைத்துக் கொள்க. சிராம்பு, அதிமதுரம், சாதிக்காய், ஓமம் ஆகியவற்றை சமமாய்ச் சுட்டு பொடித்த இடித்தத் அதில் முதலில் போட்டுத் தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி 15-30 மி.லி அளவு கொடுக்க கழிச்சல் நீங்கிப் போகும். (ஏடு 435-43-44)

~~[illegible]~~ குடிநீர்:-

வல்லாரை அமுக்கராங்கிழங்கு எடை அளவு எடுக்க. கோரைக்கிழங்கின் மேல் தோலை நீக்கி விடுக. ஒன்றிரண்டாக அரிந்து கொள்க. 35கி. ஓமம் எடுக்க. இம்மூன்று மருந்துகளையும் ஆறு பங்காய் வைத்து முதலில் சட்டியில் மூன்று பங்கு மருந்தைவிட்டு வெவ்வேறாக வறுத்துக் கொள்க. மறுபடி மூன்று பங்கு மருந்தைப் பச்சையாகச் சட்டிக்குள்ளேவிட்டு வறுத்த மருந்தையும் கூட சேர்த்துக் கொள்க. அதிலே 495 மி.லி. தண்ணீர் விட்டு இறக்குக. நீர் வெளியாகக் காய வைத்து 40 மி.லி. யாகச் சுண்ட வைத்து வடிகட்டிக் கொள்க. அந்தக் குடிநீரிலே நெல்லிக்காயளவு பசுவின் வெண்ணெயைப் போட்டுக் கொடுக்க குழந்தைகளுக்கு வரும் கணைகள் தீரும்.

ள/ பசுவின் வெண்ணெய் கிடைக்காவிட்டால் ஒரு ~~[illegible]~~ 1488மி.லி. சாதிக்காயை சுட்டு மேற்கூறிய குடிநீரில் உரைத்துக் கொடுக்கவும்.

-(ஏடு 601-99)

கக்கம்:-

கொச்சக்காய், நல்லாதி, வாழைப்பூவின் இரசம், மருதப்பட்டை, சாதி சீரகம், அதிமதுரம், சாதிக்காய், ஆகியவைகளைச் சம அளவெடுத்து இடித்து தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க. காய்ச்சிய பிறகு வெந்நீருக்கும் அம்மருந்தினை அரைத்துக் கொடுக்க கணைநோய் நீங்கிப்போகும். -(ஏடு 435-43)

(வல்லாரை) நெய்:-

வல்லாரையிலை, மாசிப்பத்திரி, வில்வயிலை, விஷ்ணுகிரந்தி, இந்நான்கின் சாறெடுக்க. ஆலம்பால், அத்திப்பால், வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, தாய்ப்பால், பசுவின் பால், நெய், வெள்ளாட்டுப் பால், கொம்புத்தேன், கோவை சாறு இவைகளை வகைக்கு 650 மி.லி. எடுக்க தேங்காய்ப்பால் 1.3.லி. எடுத்து இவைகளையும் ஒன்று சேர்க்க. மண்சட்டியிலூற்றிக் கொள்க. அத்துடன் சந்தனத்தூள் அகங்கட்டை வெட்டிவேர், விலாமிச்சம்வேர் ஆகியனவற்றை வகைக்கு 35கி. எடுத்து இடித்து வேறு மட்பாண்டத்தில் போட்டு 1336 மி.லி. தண்ணீர் விட்டு 165 மி.லி.யாக

-காய்ச்சி வடித்த மேற்சொன்ன சாற்றுடன் கலக்க வேண்டும். அதில் சாதிக்காய் சாதிபத்திரி, ஏலரிசி, இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல் தான்றிக்காய்த்தோல், நெல்லிமுற்றல், சடாமாஞ்சில், அதிமதுரம், மாசிக்காய் ஆகிய இவற்றை வகைக்கு 35கி. வீதம் எடுத்திடித்து வடிகட்டி வைத்துக்கொண்டு மேற்படி கலந்த வைத்திரவங்களை அடுப்பிலேற்றி எரித்து நெய் போலாகும் பதத்தில் பொடி செய்து வைத்துள்ள சூரணத்தைத் தூவி கிண்டி நெய் போன்று குழம்பாகும் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்க. இதனைக் காலை, மாலை இருவேளை 5-10 மி.லி. நாற்பது நாள் கொடுத்து வந்தால் எல்லாக் கணங்களும் நீங்கும். ஊதுமாந்தால கணங்களும் அதனால் உண்டாகும் பிற நோய்களும் தீரும். தேரைக்கணத்திற்கும் இதனை நோய் தன்மைக்குத் தக்க அளவு கொடுத்து வந்தால் தீரும். இந்நெய்யைக் கொடுக்கும் காலத்தில் புளியையும் புளிப்புப் பொருட்களையும் வளிநோயை விளைவிக்கும் பொருட்களையும் கசப்புப் பொருட்களையும் கட்டாயமாக நீக்கிவிட வேண்டும். (476-62-63)-(477-133-134),(572-11-13)

~~[illegible]~~ சண்பகப்பூ நெய்:-

அவுரிச்சாறு, நிலக்குமிழ்ச்சாறு ஆகிய இரண்டையும் வகைக்கு 325 மி.லி. எடுத்து ஒரு மண் சட்டியில் விட வேண்டும். பின் நல்லெண்ணெய் ~~[illegible]~~, பசுவின் நெய் வகைக்கு 325 மி.லி. எடுத்து இவ்விரண்டையும் மண் சட்டியிலூற்றிக் கலந்த ~~[illegible]~~ உயர்ந்த சாதிக்கோட்டம், சண்பகப்பூ, சந்தனத்தூள், கடுகரோகணி, விளாமிச்சம் வேர், இராம்பு ஆகிய ஆறு பொருட்களையும் வகைக்கு 5கி. வீதமெடுத்து பொடிசெய்து பசுவின் பால்விட்டு அரைத்தும் கலந்து சிறுக எரித்துப் பக்குவமானவுடன் வடித்துக் கொண்டு இதை வேளைக்கு 15-30 மி.லி. அளவாக மூன்று அல்லது ஐந்து நாள் நோய்க்குத்தக்கவாறு கொடுக்க கணம் தீரும். (476-64),(4[illegible].170)

~~[illegible]~~ நெய்:-

புளியாரைவேர், புங்கு, கருஞ்சீரகம், சத்திச்சாரணை, ஆவாரை, மாதுளை, மலைதாங்கி, நாகதாளி, வல்லாரை, கரிசலாங்கண்ணி, சிறுநெருஞ்சி, பெருநெருஞ்சி, சிறு பூளைடி, அத்திப்பிஞ்சு, முத்தக்காசு, நுணலிலை, முருங்கைவேர், கீழ்க்காய் நெல்லி, செருப்படை, சிறுகீரை, ஆம்பல், முள்ளி, கொட்டி, நெய்தல் கிழங்கு, கண்டங்கத்திரி, சிறுகுறிஞ்சான், கருந்துளசி, சிவந்த நாயுருவி, செங்கழுநீர்க்கிழங்கு, விலாம்பு, சிறுகாஞ்சொறிப் பிஞ்சு, குருத்துக்கொட்டி, ஆடாதோடை, பருத்திப்பிஞ்சு, வாழைப்பூ, பொடுதலை, பிரமதண்டு, வெண்தாமரை, செந்தொட்டி, கற்றாழை, சிறுபூளை, ஆலம்விழுது, கஞ்சாங்கோரை, அமிர்தவல்லி, மதிப்பிட்டான், அம்மான் பச்சரிசி, விட்டுணுகிராந்தி, கரந்தை, பழம்பாசி, இறந்தை, தம்பலம், ஆகியவற்றைக்களை வகைக்கு 35கி. எடுத்துக்கொள்க. 21.3லி. தண்ணீர் சேர்த்து எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொள்க. அவ்வாறு காய்ச்சியதற்கு நாலிலொருபாகம் பசுநெய் சேர்த்துக் கொள்க. அதிமதுரம், கோட்டம், ஏலம், கூகைநீறு, குங்கிலியம், நறுக்குமூலம், திரிகடுகு, திப்பிலி, தக்கோலம், ஆவாரை அரிசி, நமைவேர், கலவை-

கொம்பு, குத்திராட்சம், கெருடப்பச்சை, சாத்திரபேதி ஆகியமருந்துப் பொருட்களை வகைக்கு 9கி. எடுத்துக் கொள்க. வெள்ளாட்டுப் பாலை அதில் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது இறக்கிக் கொள்க. ~~[illegible]~~ இறக்கி ~~கொள்க~~. அதனை ~~[illegible]~~ 5-10 மி.லி கொடுக்கவும்; அனைத்தும் நீங்கிவிடும். (ஏடு 362-74-75)

கலக்கிக் கொள்க அனைத்தையும் ஒன்றுசேர்த்து

கணத்துக்கு நெய்:-

புளியங்கொட்டைத் தோல், சிரங்கை எடுத்துக் கொண்டு பொடி செய்து கொள்க. தேங்காய் பத்தை உடைத்து அதை அதில் மேற்சொன்ன தூளைக் கலந்துக் கொள்க. அதனை வெயிலில் வைத்து எண்ணெய்ப் பிழிந்துக்கொண்டு அதில் பசுநெய்யை 1.3லி சேர்க்க.

தெத்திப்பு, இகந்திப்பட்டை, இகந்தியின் வேர்ப்பட்டை, காக்கலம்வேர்ப் பட்டை, அத்திப்பட்டை, சிலபினை, சுடைக்கி, குப்பைமேனி, கைளிழுதி, நல்கானி முருக்கு, பொருதலை, வல்லடை, சிறுசங்கடை, தூதுவளை, நல்வாரி, மலைதாங்கி, வேர்த்தோல், தென்னம்பூ, மாதனைப் பிஞ்சு, வெங்காயம் ஆகிய இவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க. இவற்றைக் கழுநீர் வார்த்து பிழிந்து சாறெடுத்துக் கொள்ள வேண்டும். செவ்விளநீர் 1.3லி., பசுவின் பால் 1.3லி. பசுவின் நெய் 1.3லி ஆகியவற்றை ஒன்று சேர்க்க இளநீர், பால்ஆகியவற்றைத் தேவையான அளவு ஆக்கவும்.

ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, கெருடப்பச்சை, மாசிக்காய், சாத்திரபேதி, கஸ்தூரி, மஞ்சள், ஓமம், அதிவிடையம், திரிகடுகு, அக்கிராக்காரம், வால்மிளகு, நன்னாரி, சந்தனம், அரிப்பு, அதிமதுரம், வசம்பு, தேற்றான், சிறுமிச்சம், கச்சோலம், நெல்லி, கடுக்காய், கூகைநீறு, குரோசானி ஓமம், ரத்த சந்தனம், கருஞ்சீரகம், சீரகம், விளாமிச்சம்வேர், செண்பகப்பூ [illegible] அரிசி, பூலாஞ்சட்டம், கோரோசனை ஆகியவற்றை வகைக்கு 4கி. எடுத்துக் கொள்க. அவற்றைப் பசுவின் பால் விட்டரைத்து முன்சொன்னவற்றில் கலக்கிக் கொள்க. அனைத்தையும் ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும் போது வடித்தெடுத்து ~~[illegible]~~ வைத்துக் கொள்க. அதில் காசெடை அளவு (4.4கி) காலை, மாலை கொடுக்க கணமனைத்தும் தீர்ந்துபோகும். (ஏடு 109-41-42)

கணைக்கு நெய்:-

காரம்பசுவின் நெய், எருக்கஞ்சாறு, புங்கமிலைச் சாறு ஆகியவற்றை வகைக்கு 1.3லி எடுத்துக் கொள்க. மாதுளம்பூவின் சாறு சமமாய்ச் சேர்த்துக் கொள்க. அதிமதுரம், கெருடப்பச்சை, சிற்றேலம், மாசிக்காய் ஆகியவற்றைச் சமமாய்எடுத்துப் பொடித்து அதில் போடுக. இலவங்கம், பஞ்சி, கல்நார் ஆகியவற்றை வகைக்கு 5கி. எடுத்து முன் சொன்ன சாறு விட்டாட்டி ஒன்று சேர்த்துக்கொள்க. பிறகு அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பதமாய்க் காய்ச்சுக பதம்திரிந்து அதில் சாதிக்காய் சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடயம், வசவாசி, முத்தக்காசு ஆகிய மருந்துச் சரக்குகளை வகைக்கு 10கி. வீதம் எடுத்து இளவறுப்பாய் வறுத்து பொடித்து கலந்து கொள்க. பிறகு ஒரு கலசத்தில் வடித்துக் கொள்க. அதனைக் காசெடை அளவு (13.2கி) குழந்தைகட்குக் கொடுக்க கணை தீர்ந்துபோகும். (வை.பி. 98-49-50)

இரைப்பு:-

கடுக்காய்ப்பிஞ்சு, அதிவிடயம், கசகசா, பதங்கிப்பட்டை, சீரகம், சந்தனத்தூள், சாதிப்பத்திரி, (இலுப்பைப் பூ நல்ல வத்தல்)? சித்தாமுட்டி, ஏலம், [illegible] செம்பருத்தி, இலாமிச்சம் ஆகிய இவைகள் 35கி. எடுத்துக் கொள்க.

இவைகளை இடித்துப் 6 மடங்குச் சீனியில் வடிகட்டி எடுத்துக்கொள்க. புதியதான சீனி கற்கண்டு 70கி. அதை இத்துடன் சேர்க்க. பசு நெய் 175 கி. இத்துடன் சேர்த்து லேகியமாக வரும் வரை காய்ச்சி சிறு பக்குவத்தில் இறக்கிக் கொள்க. இதனை பாக்களவு கொடுக்க கணைச்சூடும் நீங்கும். (கை.பி. 98-182)

குஷ்டரோக எண்ணெய்:-

நிலக்குமிழ் வேர்ப்பட்டை, அம்மான்பச்சரிசி வேர்ப்பட்டை, நுணாக்காந்தி வேர்ப்பட்டை, ஆவாரைவேர்ப்பட்டை, மருதமரம் வேர்ப்பட்டை, கடம்பு வேர்ப்பட்டை ஆகியவைகள் 35கிராம் வீதமெடுத்த தண்ணீர்விட்டு பசும்பால் அரைக்க வேண்டும். இதை 1.5லி நல்லெண்ணெயில் கலக்கி பக்குவமாகக் காய்ச்சி இறக்கிப் பின்பு [illegible] ஆறவைக்க வேண்டும். இத்துடன் சீரகம், அதிமதுரம் ஆகியவைகள் வகைக்கு 35கி. எடுத்த அரைத்துப் பொடியாக்கித் தூவிக் கலக்கி குலுக்கி வடித்துக் கொள்ளவும். இதை காலையில் மட்டும் ஒரு கரண்டி வீதம் தாய்ப்பாலில் கலந்து 3 நாள் கொடுக்க குணம் தீரும். (485-77)(476-62)(477-133)

பாரிசவாத எண்ணெய்:-

இம்பூறல், சிறுகீரை, முசுமுசுக்கை, கோவை, எலிச்செவிக்கீரை, தும்பை, பொன்னாங்கண்ணி, ஊசித்தொத்து உள்ளி, குப்பைமேனி, அருகு, பொடுதலை, ஆடாதோடை, கல்லுரை, துளசி, குதிரைவாலி, வாதநாராயணன், கோவையிலை, கொன்றை, நாவல், கரிசாலை, முருங்கையிலை, முருங்கைப்பட்டை, வெட்டிவேர் காந்தி, நிலத்தாமரை, பற்பாடகம், உப்பு, நிலவேம்பு, தீப்பவழம், வெங்காயம், இவைகளை இடித்து சாறு எடுத்து அதற்கு சமமான சாற்றுக்குச் சரியளவு நெய் சேர்த்து ஒரு மண்சட்டியில் ஊற்ற வேண்டும். பிறகு திப்பிலி, திரிபுட்பம், ஏலம், பாதிரி, வில்வம், சாதிக்காய், கருஞ்சீரகம், சாதிபத்திரி, [illegible], கோட்டம், அகில், தக்கோலம், இலவங்கப்பூ, [illegible], [illegible], காய்ச்சுக்கட்டி, கஸ்தூரி ஆகிய இப்பொருட்களை வகைக்கு 5கி. வீதமெடுத்துத் தண்ணீரில் அரைத்து மண்சட்டியில் விட்டு கலக்கி அடுப்பேற்றிச் சிறுக எரித்துக் காய்ச்சிப் பக்குவத்தில் வடிக்க. வேளைக்கு 16 மி.லி வீதம் காலையில் மட்டும் கொடுக்க வேண்டும். இதைக்கொடுக்க வாய்வு தீரும். பத்தியம் இருக்க வேண்டும். [illegible], முருங்கைக் கீரை இவைகள் சேர்க்கலாம். (452-75)-(477-167)

குமரி எண்ணெய் :-

1.3லி. அளவு சிற்றாமணக்கெண்ணெயையும் குமரிச்சோறு தேங்காயளவும் எடுத்து இவையிரண்டையும் ஒரு மண்சட்டியிலிட்டு அதில் தட்டெடை வெந்தயம் எடுத்துத் தண்ணீரில் ஊறவைத்து அரைத்துச் சேர்த்துக் கொண்டுஅத்துடன் 35கி. அரிந்த ஈருள்ளியைப் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்ச வேண்டும். வெங்காயம் வெந்து மிதக்கும் பதத்தில் வடித்துக் கொண்டு அதை ஒரு கரண்டியளவு வீதம் காலையில் மட்டும் 5 (அல்லது) 7 நாள் கொடுக்க 18 கணங்கள் நீங்கும். (477-169) (482-75).

வல்லாரை எண்ணெய் (கணச்சூடு தணிய):-

1.3லி., சிற்றாமணக்கு எண்ணெயையும் 650மி.லி. வல்லாரைச் சாற்றையும் ஒரு மண்சட்டியில் ஊற்றி 70கி. வெந்தயத்தைப் பசுவின் பால் விட்டு அரைத்துச் சட்டியிற் கலந்து சிறு தீயிட்டு எரித்துப் பக்குவமானவுடன்அதில் 70கி சர்க்கரை கலந்து வடித்து வைத்துக் கொண்டு அதைக் காலையில் மட்டும் 5 (அல்லது) 7 நாட்கள் கொடுக்கவேண்டும் இதனால் குழந்தைக்குண்டான கணச்சூடு தணியும்.
(482-77, 477-170) (476-65)

கருஞ்சீரக எண்ணெய் :-

ஒரு மண்சட்டியில் 325 மி.லி. சிற்றாமணக்கு எண்ணெய், ஏல், கடுக்காய்த்-தோல், கருஞ்சீரகம், கடுகரோகணி, காட்டு மல்லிகை, ஈயக்கொழுந்து, சிக்கராம் பட்டை ஆகியபொருட்களை வகைக்கு 9 கி. வீதம் எடுத்துப் பொடி செய்து மண் சட்டியிலுள்ளஎண்ணெயுடன் கலந்து 9கி. வெங்காயத்தைத் தூக்க அரிந்து அச்சட்டியில் போட்டு அடுப்பேற்றிச் சிறுக எரித்து வெங்காயம் நன்றாகச் சிவந்து வெந்த பக்குவத்தில் வடித்து வைத்துக் கொண்டு காலையில் மட்டும் ஒரு பாலாடை முலைப்பால் சேர்த்து மூன்று (அல்லது) ஐந்து நாள் அல்லது நோய் வன்மைக்குத்தக்க அளவு கொடுத்தால் கணம் விரைவில் நீங்கும். (476-64) (477-170)

பொன்னாங்காணி எண்ணெய் :-

பொன்னாங்காணி வேர், புளியிலை ஈர்க்கு, வேப்பிலை ஈர்க்கு, ஆகிய மூன்றையும் வகைக்கு ஒரு பிடி எடுத்து அத்துடன் கோவைவேரில் சேர்ப்பட்டை 16கி. எடுத்து இவைகளையெல்லாம் நன்றாய் இடித்துப் பொடியாக்கி ஒரு மட்சட்டியிலிட்டு அதில் 280கி. சிற்றாமணக்கெண்ணெயை ஊற்றி சட்டி வாயை ஒருமெல்லிய துணியால் கட்டி நாள்தோறும் வெயிலில் வைத்துக் காலையில் மட்டும் ஒரு உச்சிக் கரண்டி (16மி.லி) அளவாக 3 அல்லது 5 நாள் அல்லது நோய் வன்மைக்குத் தக்கநாளளவு கொடுத்தால் கணம் நீங்கி விடும். (476-64) (477-171). (ஏடு 362-51)

<u>உள்ளுக்கும் மேலுக்கும் சிறுபுள்ளடி எண்ணெய்:-</u>

சிறு புள்ளடி கருந்சிக்கொழுந்து, அவுரியிலை, நாவாக்கிலை, பொடுதலையிலை ஆகிய ஐந்து பொருட்களையும் வகைக்கு ஒரு பிடி எடுத்து சுத்தம் செய்து நன்றாகச் சிதைத்து ஒருமண்சட்டியில் 650 மி.லி. நல்லெண்ணெயை ஊற்றி அத்துடன் சிதைத்த சரக்குகளைப் போட்டுஒரு மெல்லிய வெள்ளைத் துணியால் அச்சட்டியின் வாயைக் கட்டி வெயிலில் வைத்துக் கொண்டு காலையிலும், மாலையிலும் ஒரு உச்சிக்கரண்டியளவு வீதம் 3 (அல்லது) 5 நாள் உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசினால் கணம் நீங்கும். (476-64) (477 171)

<u>வில்வ எண்ணெய்:-</u>

சித்தாமணக்கெண்ணெய், வில்வ இலைச்சாறு அருகிச்சாறு, வெள்ளை வெங்காயச்சாறு வகைக்கு 325 மி.லி எடுத்து இவையனைத்தையும் மண்சட்டியில் ஊற்றிக் கொள்க. அதில் கடுக்காய்த்தோல் 35கி. எடுத்துத் தூள் செய்து போட்டுபக்குவமாகத் தீயில் காய்ச்சி இறக்கி வடித்துக் கொண்டுகாலையில் மட்டும் சிறுகரண்டியளவாக 3 (அல்லது) 5 நாள் அல்லது நோயின்வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்து வந்தால் கணம் தீர்ந்துவிடும். (476-64) (477-171) (ஏடு 6218-39)

<u>சித்திரமூல எண்ணெய்:-</u>

சித்திரமூலவேர்ப்பட்டை, குந்தவேர் சங்கம்வேர்ப்பட்டை, முல்லைவேர், முன்னைவேர், சித்தாமல்லிவேர், பேராமல்லிவேர், காட்டகத்திவேர், ஆவாரை வேர், பொன்னாவரை வேர், மாந்தக்காளி வேர், கொன்றைக்காய் வேளை வேர் ஆகியவற்றை வகைக்கு 27கி. எடுத்து இடித்துப் பொடித்துக் கொள்க. (வெயிலில் 3 நாள் உலர்த்தி) இவற்றை ஒரு தோண்டியில் போடுக. அதில் நான்குமரக்கால் (6லி.) தண்ணீர் விடுக. பிறகு அதில் நன்கதச்சூரி, புலல்முருங்கை.

<u>தும்மட்டி எண்ணெய்:-</u>

1.3லி சித்தாமணக்கெண்ணெய், ஒரு வைக்கோல் போட்டுச் சுட்ட தும்மட்டிக் காயின் சாறு 325 மி.லி., 325மி.லி வெங்காயச்சாறு, 325 மி.லி. தக்காளிச்சாறு ஆகியவைகளை ஒரு மண்சட்டியில் கட்டிக் கொள்க. அத்துடன் வால் மிளகும், கோரோசனையும் 60மி.லி. எடுத்துக் கொள்க. கஸ்தூரி மஞ்சள், வெந்தயம் சித்தரத்தை, பேரரத்தை, கருஞ்சீரகம், சிறுலவங்கப்பட்டை பெரிய லவங்கப்பட்டை ஆகிய ஏழு பொருட்களையும் (வீசம்பலனெடை) எடுத்துப் பொடித்து எண்ணெயுடன் கூட்டிக் காய்ச்சிப் பக்குவத்தில்வடித்துக் காலையில் மாத்திரம் ஒரு கரண்டியளவு கொடுக்க வேண்டும். இவ்விதம் 5 அல்லது 7 நாள் கொடுக்க எல்லாக் கணங்களும் தீரும். தாய் மிளகு நீரும் சோறும் சாப்பிட வேண்டும்.

(477 - 173)

<u>புழுத்தெண்ணெய்</u> :-

350மி. சிந்தாமணிக்கெண்ணெய், 350மி. எலுமிச்சம்பழச்சாறு இலைகளை ஒரு மண்சட்டியில் தனி 35 கி வெந்தயத்தை நெகிழ அரைத்துக் கலந்து பதமாகக் காய்ச்சி வடித்துக் காலையில் மட்டும் வேளைக்கு 16மி.லி. அளவாக 3 (அல்லது) 5 நாள் கொடுக்க மண்ணீரல் கணக்கருப்பு நீங்கும். (482-78) (477-173)

<u>இன்டெண்ணெய்</u> :-

2.6லி. சிந்தாமணிக்கு எண்ணெயையும், வெள்ளெருக்கு தூதுளை, தக்கப்-பூண்டு, வேலிப்பருத்தி, பூவரசு, குப்பைமேனி, ஆடாதோடை, சாரணை, பூளா, நரிப்பயற்றங் கொடி, பிரமி, கையாந்தகரை ஆகிய இந்தப் பதின்மூன்று வகை வேர்களின் சாறு வகைக்கு 1.3லி எடுத்து ஒருமண்சட்டியிற்கலந்து கொள்க. அதில் கருஞ்சீரகம், பூண்டு, ஓமம், மஞ்சள், கோரோசனம், சன்பகப்பூ, சம்பு, சாதிக்காய், தான்றிக்காய் ஆகிய சரக்குவகைகளை வகைக்கு 18கி. எடுத்து தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துச் சட்டியில் வைத்திருக்க எண்ணெயுடன் கலந்து கலக்கி அடுப் பேற்றிச் சிறுக எரிக்க, காய்ச்சிப் பதமானவுடன் இறக்கி நாளொன் றுக்கு ஒரு கரண்டி வீதம் ஏழு அல்லது ஒன்பது நாள் கொடுக்க வர கணக்களைத்தும் தீரும். (482-75)-(477-174)

<u>செப்பு நெருஞ்சி எண்ணெய்</u> :-

செப்பு நெருஞ்சி, சிறு புள்ளடி, சிறு அம்மான் பச்சரிசி, தகரை ஆகிய 5 பொருட்களின் வேர்களை வகைக்குக் கழற்சிக்காயளவு அரைத்தெடுத்து நரிப்பயற்றங் கொடி அகத்திப்பட்டை, வெங்காயம் ஆகிய மூன்று பொருட்களையும் வகைக்கு ஒரு கழற்சிக்காயளவு அரைத்தெடுத்துக் கொள்க. 165 மி.லி. சிந்தாமணிக்கெண்ணெயை ஒரு மண்சட்டியில் ஊற்றி அதில் மேற்கூறப்பட்ட அரைத்தெடுக்கப்பட்ட பொருட்களைச் சேர்த்து நன்றாகக் கலக்கிக் கொள்க. பிறகு அச்சட்டியின் வாய்க்கு மெல்லிய வெள்ளைத் துணி கட்டி 6 மணி நேரம் வெயிலில் வைத்துக் காலை, மாலை இரண்டு வேளையும் வேளைக்கு கட்டெடை (165 மி.லி.) அளவாக 5 (அல்லது) 7 நாள் கொடுத்தால் எல்லாக் கணக்கும் தீரும் தாயும் குழந்தையும் பத்தியங்காக்க வேண்டும்.

(482-76)-(477-175)

<u>புள்ளடி எண்ணெய்</u> :-

புள்ளடியிலை, செப்பு நெருஞ்சில் இலை, வல்லாரையிலை, வரட்டுமாயிலை, கோழியவரையிலை, ஆகிய ஐந்தைந்து இலைகளின் சாறுகளை வகைக்கு 70மி.லி. வீதம் எடுத்து இவைகளுடன் 280 மி.லி. சிந்தாமணிக் கெண்ணெய் சேர்த்துக் கலந்து கொள்க. இதில் குரோசாணி ஓமம், கடுகரோகணி, வெளிச்சைப்பிசின் இரும்புல்லுருவி, சடாமாஞ்சில் ஆகிய பொருட்களை வகைக்கு 2 பணவெடை (975 மி.லி.) வீதமெடுத்து இடித்துப் பொடியாக்கிக் கலக்க வேண்டும். பின் எரித்துப் பக்குவமானவுடன் வடித்து வைத்துக் கொண்டு ஒரு தட்டெடை (165மி.லி) அளவு காலை, மாலையிருமாக வேண்டிய நாள் கொடுத்து வர கணக்கள் நீங்கிப்போகும்.

(வை 362-60).(ஏடு 6218-44). (477-290)

[illegible]

கணத்திற்கு எண்ணெய்:-

மாந்தக்காசியிலை, துளசி, நொச்சி, பிரமியிலை, வில்வம், வல்லாரை, கையாந்தகரை, பொடுதலை, சிவா, புளியிலை, இன்னிலை இவைகளைச் சமமாக எடுத்து இடித்துச் சாறு பிழிந்து கொள்க. தான்றிக்காய், சுக்கு, கடுக்காய், திப்பிலி, அரத்தை, முசம், வசம்பு, கஸ்தூரி மஞ்சள் இவைவகை 17கி. எடுத்துக் கொண்டு இடித்துப் பொடித்து அதில் போட்டு இச் சாற்றுக்காயையும் சேர்க்க விளக்கெண்ணெய் 1.3லி. எடுத்து அதில் விட்டு எரிக்க. மெழுகு பதமாக வரும்போது வடிகட்டி உடன் இறக்கி வைத்துக் கொள்க. அதனை ஒரு கரண்டியளவாகக் கொடுக்க கணம் தீரும். பெரியோர்க்கு கரண்டி 5 (அல்லது) 7 நாட்களுக்குக் கொடுக்க கணம் விட்டுப்போகும். (476-38)

கணக்கழிச்சல் சஞ்சீவியெண்ணெய்:-

விளக்கெண்ணெய் 1.3லி. எடுத்துக்கொள்க. அவுரி, வேலிப்பருத்தி, முடக்கொத்தான், தும்பை, கவிழ்தும்பை, திடைச்சி, பெருந்தும்பை, கிரந்திநாயகம், செம்முள்ளி ஆகிய இலைகளின் சாறு வகைக்கு 325 மி.லி. எடுத்துக் கொள்க. புளியம் பிரண்டைக் கிழங்கு, தொல்லைக் கோவைக்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, ஈருள்ளி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், சீரகம், வசம்பு, இவைகளை வகைக்கொரு எலுமிச்சங்காயளவு எடுத்துக் கொள்க அவற்றை அரைத்து சாற்றுடன் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்களவு (30மி.லி.) கொடுக்கவும் சகல கணமும் தீரும். (482-82)

சகல கணங்களுக்கும் எண்ணெய்:-

சீரகம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், தான்றிக்காய், ஏலம், இலவங்கம், அதிமதுரம் இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொள்க. முள்ளிச் சாரணைச்சாறு, ஈரவெங்காயச்சாறு, வேலிப்பருத்திச்சாறு, நொச்சியிலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, கிளிசிலைச் சாறு, பழம்பாசிச் சாறு, குப்பைமேனிச் சாறு, பசுவின் பால், பசுவின் நெய், இவற்றைத் தேவையான அளவு எடுத்துக் கொள்க. சாறுகளை வேறாயும், கொட்டைப்பாக்களவு ஆவின்நெய்யும் எடுத்தரைத்துக் கூட்டிப்போட்டு யாவற்றையும் ஒன்றுசேர்த்துக் காய்ச்சி அனைத்தும் மெழுகு பதத்தில் வரும்போது வடித்துக் கொண்டு அதனைச் சூரியன் உதயமாகும் முன்னர் உள்ளங்கையில் எடுத்து நக்க கணங்கள் தீரும். (ஏடு 612-6)

குழந்தைகளின் கணைக்கு வேறு கறிய எண்ணெய்:-

பேய்குமட்டிப்பழம், அதண்டைச்சாறு, கருஞ்சீரகம், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகிணி, தேசாபுதம், அக்கிராகாரம், திப்பிலி, சித்தரத்தை, கிராம்பு இவற்றைக் கட்டி விளக்கெண்ணெயில் வேகவைத்துக் கொடுக்கவும். பேதி ஆகும் பேதி கண்ட பிறகு மோர் சாதம் கொடுக்கவும். (ஏடு 612-6-7)

கணைக்கு எண்ணெய்:-

முடக்கொத்தானிலைச் சாறு 1லி., வில்வ இலைச்சாறு 1 லி. கரிசாலைச்சாறு 1லி. சிற்றாமணக்கெண்ணெய் 1.3லி., எடுத்துக் கொள்க. சீரகம், கடுகுரோகணி, சடமெக்காயம், அரைத்த சாறு 1.3லி., கற்றாழஞ்சோறு நாரத்தங்காயளவு, காரணவை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துக் கொள்க. கொட்டை நீக்கி கடுக்காய் 10கி எடுக்க. இவை எல்லாவற்றையும் பசுவின் பால் வார்த்தரைத்து சிற்றாமணக்கெண்ணெயில் கலந்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும் கணை உள்ளவர்க்கு ஒரு சிறிய எண்ணெய் கொடுத்தால் வயிறு கழியும் உப்பில்லாக் கஞ்சி கொடுக்கவும் தைலம் கழிந்தால் உப்பு போட்டு கொடுக்கவும்.
-(ஏடு 612-18-19)

குமரியெண்ணெய்:-

சிற்றாமணக்கெண்ணெயில் அகத்திக்கரை வேகவைத்து அவ்வெண்ணெயை 1.3லி எடுத்துக் கொள்க. பசும்பால் 2.6லி எடுக்க. கற்றாழைச்சாறு 675 மி.லி. எடுக்க. இவை மூன்றையும் சேர்த்து மெழுகு பத அளவாகக் காய்ச்சிக் கொள்க. சீரகம், மாசிக்காய், கோட்டம், அக்கரம், கிராம்பு ஆகியவற்றை 35கி. எடுத்துக் கொள்க. சுக்கு காசிடை (4கி) எடுத்துக் கொள்க. வெந்தயம் 9கி. எடுக்க கர்க்கத்திற்கான மேற்சொன்னசரக்குகளை இடித்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்ககணைமந்தம் விட்டுப் போகும். (ஏடு 362-34-35)

~~கணைகளைந்த~~

கணை சகலத்துக்கும் பாலெண்ணெய்:-

வெள்ளாட்டுப்பால் 2.6லி., விளக்கெண்ணெய் 1.3லி. எடுக்க. திருக் கள்ளி 35கி., இண்டங்கொழுந்து ஒரு பிடி, செண்பகப்பூ, அதிமதுரம், சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், ஏலம், வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், சீரகம் , வசம்பு, இலாமிச்சம், வெட்டிவேர், நன்னாரி, சிறுநாகப்பூ, கோரைக் கிழங்கு, புலாங் கிழங்கு, கோரோசனை, கடுகுரோகணி, கோட்டம், பச்சைக்கற்பூரம் ஆகிய இவற்றை சமஅளவாய் எடுத்து பொடித்து மேற்சொன்ன கலவையில் சேர்த்து சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. தினமாக ஒத்தெடுத்த பிறகு பாலெண்ணெயைக் கொடுக்க கணைமந்தம் நீங்கிப் போகும். (ஏடு 362-58-59)

கணத்திற்கு எண்ணெய்:-

மூக்கிரட்டை, சாரணை, முடக்கொத்தான், முத்தெருக்கஞ்செவி, சீப்பு நெருஞ்சில் இவைகளின் சாறு 1.3லி. எடுக்க. தாமரைச் சாற்றையும் 1.3லி. அளவே எடுக்க. விளக்கெண்ணெய் 2.6 லி. எடுக்க. இவ்வனைத்து கலவைகளையும் ஒன்று சேர்த்து பதமாய் காய்ச்சி பக்குவபதத்தில் இறக்கி வடித்து வைத்துக் கொள்க. அதனை நோயின் தன்மை குழந்தையின் வன்மை, மென்மையைஅறிந்து கொடுக்க கணங்கள் அகன்று போகும். (ஏடு 362-53)

சகல கணத்துக்குக் குளிகை:-

ஆவின் வெண்ணெய் எலுமிச்சங்காயளவு எடுத்து சட்டியில் இட்டுக்கொள்க. அது உருகிவரும் போது மணித்தக்காளியைக் கொட்டைப்பாக்களவு எடுத்து அரைத்து அதில் போட்டெரித்து நன்றாக வேகவைத்து இறக்கிக் கொண்டு அதனைக் காசளவு (4.4.கி.) ஐந்து நாள் கொடுக்க கணம் நீங்கிப்போகும். -(கை.பி. 98-181)

கணத்திற்கு உருண்டை:-

வெங்காரம், கோரோசனை இவற்றை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. கடுரோகணி 15கி. எடுக்க. இவற்றை ஒன்று சேர்த்துருண்டை செய்து அதனை முலைப்பால், வெந்நீர் ஆகியவற்றில் உரைத்துக் கொடுக்க கணங்கள் நீங்கிப் போகும். (ஏடு 6218-44)

கணத்துக்கு உருண்டை:-

விளங்கனசி, செம்பு ஓமம், வெள்வெங்காயம், பொருதலை, மிளகு, திப்பிலி, ஆமையோடு இவற்றைக் கனகாதிவையின் சாற்றை விட்டரைத்து கடலை அளவா உருண்டை செய்து கொடுக்க கணம் நீங்கும். (ஏடு 6218-46)

காரை ரசாயனம்:-

1.3லி காரைப்பழத்தின் சாறும் 1.3லி. சர்க்கரையும் 5.2லி. பசுவின் பாலையும் ஒரு மண் சட்டியில் ஊற்றிச் சேர்க்க. அதனை சிறுக எரித்துப் பாகு பதமானவுடன் அதில் 325மி.லி. பசுவின் நெய் விட்டுக் கிளறி காலை, மாலை சிறுகரண்டி அளவு 5 (அல்லது) 7 நாள் கொடுத்து வர அனைத்து கணமும் நீங்கும். (477-174)

கீழா நெல்லிப்பால்:-

கீழா நெல்லி வேர்ப்பட்டை, கறிவேப்பிலை, சீரகம், பச்சை நெல்லுமி ஆகிய இந்நான்கு சரக்குகளையும் வகைக்கு 4 கி. எடுத்து இடித்து அதை முலைப்பாலில் போட்டு ஓரிரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். மறுநாள் காலை அரைத்துப் பிழிந்து கொடுக்க வேண்டும். காலையில் மட்டும் மூன்று நாட்களுக்கு இதைக் கொடுக்க வேண்டும்.

மாலையில் பத்து மிளகைச் சாம்பலாக்கி சீரகம் 2கி. எடுத்துப் பொரிய விட்டு 80மி.லி. நீர்விட்டு இரண்டு சொட்டு வந்தவுடன் வடிகட்டிக் கொடுக்க வேண்டும். பத்தியம் செய்ய இளம் கணம் குணமாகும். (476-64,65). (477-134)

<u>கணம் 21க்கும் பொன்னாங்காணி எண்ணெய்:-</u>

பொன்னாங்காணியிலை, சிறுகீரையிலை, தகரையிலை, கீழ்க்காய் நெல்லியிலை, வெள்ளொச்சியிலை, சிற்றிலை, நாயுருவியிலை, அம்மான் பச்சரிசியிலை, கருநொச்சியிலை, நாவற்கொழுந்து, ஆவாரைக் கொழுந்து வேப்பங்கொழுந்து, மாதுளைக்கொழுந்து, முடக்கொற்றான் கொழுந்து, முருங்கைத்துளிர், புங்கன் கொழுந்து, மூசாந்தாமரை, புளியாரை, வல்லாரை, புள்ளடி, தரிப்பயற்றங்கொடி, இண்டந்தழை, முசுமுசுக்கை, அகத்திப்பருப்பு சீந்தில் கொடி, ஆடாதோடை, ஆடுதின்னாப்பாளை, விஷ்ணுகிராந்தி, முட்காவேளை ஆகிய பொருட்களையெடுத்து அவற்றின் தனித்தனியாகச் சாறு எடுத்துக் கொள்க. சாறின் அளவு 1.3லி. ஆக இருக்கட்டும். அத்துடன் ஆவாரஞ்செடி வேர், நெடுநாரிவேர், நிலக்குமிழ் வேர், சிறுகீரைவேர், வில்வம், உத்தாமணி, மிளகு தக்காளி, தைவேளை, சங்கம், கண்டங்கத்திரி, நாய்வேளை, ஓட்டுவிரா, சங்கங்குப்பி ஆகியவற்றின் வேர்களை ஒவ்வொரு பிடி வீதமாக எடுத்து 1.3லி. அளவாக எடுத்துக் கொள்க. அதனை மண் சட்டியிலிட்டுக் கொள்க. 1.3லி. சிற்றாமணக்கெண்ணெய் விட்டு அதனுடன் கலந்துக் கொள்க. இத்துடன் மூலிகைகள் சாறுகளை ஒன்று சேர்த்துக் கொள்க. அதில் ஆமையோட்டு ஓமம், கடல்நுரை, சீரகம், திப்பிலி, கருஞ் சோம்பு, கிராம்பு, கருஞ்சீரகம், பற்பாடகம், ஜாதிப்புஷ்பம் பழம், வசம்பு, பெருங்காயம், செங்கத்தாரிப்பட்டை ஆகிய பொருட்களை வகைக்கு 5கி. வீதம் எடுத்து பொடி செய்து போட்டுச் சிறுகக் காய்ச்சிப் பக்குவமானவுடன் இறக்கிக் கொள்ள வேண்டும். அதை 10 நாளைக்கு ஒருதடவை 2 அட்டெடை (330மி.லி.) காலையில் கொடுக்க வேண்டும். இப்படி 5 (அல்லது) 7 தடவைகள் கொடுக்கவும் நோய் நீங்கும்.

மீன், புளி, இறைச்சி, கரப்பான் பண்டங்கள் இவற்றை நீக்க வேண்டும். மிளகுநீர், சோறு சாப்பிடப் பலனுண்டாம். (477-168-169)

(476-105-107).(482-76)

<u>பதினெண்கணத்திற்கு மாதுளை நெய்:- (தந்தீஸ்வரர் சொற்படி)</u>

325 மி.லி. மாதுளைச்சாறு, 90கி. சீந்தில்சர்க்கரை ஆகிய இவ்விரண்டுபொருட்களையும் மண்சட்டியில் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்க. 325 மி.லி. பசுவெண்ணெயையும் அதனுடன் கூட்டிக் கொள்க. அதைப் பக்குவமாய்க் காய்ச்சிக் கொள்க. அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம் ஆகிய மூன்று சரக்கு-களையும் வகைக்கு 18கி. எடுத்து நயமாய்ப் பொடித்துப் பொடி செய்து சேர்த்துக் கொள்க. அதனை அடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து காலை, மாலை ஒருகரண்டியளவாக குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறே 41 நாள் கொடுக்க பதினெண்கணங்களும் நீங்கிப் போகும். சிறு குழந்தை பெரிய குழந்தைகட்கு இந்நெய்யைக் கொடுக்கலாம். (476-105) (482-76).

(477-167-168)

கணை 18க்கும் நெய்:-

சிற்றாமணக்கு கொட்டையை 2.6லி. எடுத்து, 2.6லி. பசுவின் பாலில் அரைத்து வெகுவைத்து காயவைத்து இடித்துக் கொள்க. அதனுடன் இளநீர் 6.5லி. விட்டு ஒன்றுசேர்த்து காய்ச்சி எண்ணெயை வடித்துக் கொள்க.

சாதிக்காய், கடுரோகணி, சாதிப்பத்திரி, கிராம்பு, சீரகம், வசம்பு, ஏலம், திப்பிலி, அதிமதுரம், மாயக்காய் ஆகிய இவற்றை 1½ கி. எடுத்துக் கொள்க. இவற்றை அரைத்துச்சாறு வல்லாரைச் சாறு இவற்றை வகைக்கு 16 மி.லி. எடுத்து ஒன்றுசேர்த்து அரைத்து காய்ச்சிக் கொள்க மெழுகு பதமாக வரும் போது வடித்து காசெடை (4.4கி.) கொடுக்க கணை 18ம் தீர்ந்து போகும். (ஏடு 601-57)

பதினெண் குட்டத்திற்கும் பாவசஞ்சீவியெண்ணெய்:-

இம்பூரல், சிறுகீரை, முசுமுசுக்கை, கொல்லை, எலிசெவி, தும்பை, இரு வகை பொன்னாங்காணி (வெள்ளை, சிவப்பு) குப்பைமேனி, அருகு, பொடுதலை, ஆடாதோடை, வல்லாரை, துளசி, குதிரைவாலி, தூதுவளை, கோழியவரை, கொல்லை, தகரை, கையாந்தகரை, முருங்கை விலைப்பட்டை, விஷ்ணுகிராந்தி, ஓரிதழ்த்தாமரை, பற்படாகம், வேம்பு, ஆனை நெருஞ்சில், நரிப்பயறு, வெங்காயம், நாவல், ஆகிய இந்த மூலிகைகளின் சாற்றை எடுத்துக் கொள்க. சாற்றுக்கு இரட்டிப்பாக ஆமணக்கெண்ணெயைச் சேர்க்க. சுக்கு, செவ்வியம், பேரரத்தை, சித்திரமூலம், கண்டுபாரங்கி, கோசலம், தயிர், நெய், பால், சாரம், சாதிக்காய், புதிய கருஞ்சீரகம், சாதிபத்திரி, பூண்டு, கோரோசனை, காசுக்கட்டி, கட்டிக்கம்பி, பிசின் ஆகிய இவற்றை 5 கி. எடுத்து அரைத்துக் கொள்க. அடுப்பேற்றி காய்ச்சி மெழுகு பதமாக வடித்துக் கொள்க. அதனை நோயின் தன்மைக்கேற்ப காலை மாலை இருவேளையும் கொடுத்திட கணம் 18ம் தீர்ந்து போகும்.

(476-104-105)

எண்கணம் ஒன்பது கணத்திற்கு வல்லாரை நெய்:-

நன்றாக வடிகட்டிய நீர் 10.4லி. எடுத்து ஒரு மண்பானையில் வார்த்து அதில் 3.5கிலோ வல்லாரையைப் போட்டு அதை எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்து 1.3லி. பசுநெய் சேர்த்து சுக்கு, ஏலம், மான்கொம்புப் பற்பம், சாதிக்காய், தாளிசபத்திரி, கோட்டம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், சீரகம், தான்றிக்காய்த் தோல், தக்கோலம், மஞ்சள், சந்தனம், வெண்காரம், வில்வவோடு, அக்கராகாரம், செண்பகப்பூ, குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், இம்பூரல்வேர், (கச்சோலம்) கிச்சிலிக் கிழங்கு, கொத்தமல்லி, அகுரோகணி கடுரோகணி, ஆகிய இந்தச் சரக்குகளை வகைக்கு 4கி. எடுத்து 1.3லி. பசுவின் பாலாலரைத்து மண்பாண்டத்திலுள்ள பொருட்களுடன் சேர்த்துக் கலக்கி 1.3லி நெய்யையும் கலக்கி அடுப்பேற்றி நெய்ப பதமாய்க் காய்ச்சி இறக்கி வைக்க. பீங்கானில் எடுத்து வைக்க. அதைத் தினமும் காலையிலும், மாலையிலுமாக இரண்டு வேளை முன்பு வந்தால் எண்கணமும், ஒன்பது கணமும் தீர்ந்து போகும். (482-74-75)-(477-164-165)

(476-102-103)

கிருமி எண்ணெய்:-

1. 3வி. சிற்றாமணக்கெண்ணெயையும், 1. 3வி. வெள்ளாட்டுப் பாலையும் ஒரு மண்சட்டியிலாவது இட்டு கலந்து அதில் ஒரு பிடி சவுளியையும் ஒரு பிடி நன்றாம் கொழுந்தையும் நுண்க அரிந்து சிதைத்துச் சேர்த்து விருவைப்பட்டை, கடுவம்பட்டை, நிலவாய்ப்பட்டை ஆகிய மூன்றையும் வகைக்கு ஒரு பிடி வீதம் எடுத்துப் பொடியாக்கிப் போட்டு அத்துடன் 35வி. சீரகத்தையும் 35வி. காய்ச்சுக் கட்டியையும் பொடித்து எண்ணெய்க்கலவையில் சேர்த்து கனமான அடுப்பில் கொண்டெரித்து மெழுகு பதமாக வரும் வரை காய்ச்சி பக்குவமாக வடித்தெடுத்துக் கொள்க. இதனைக் குழந்தைக்குக் கரண்டி அளவாகக் கொடுக்க எக்கைக் கணம் தீரும்.

(பு. 477-166) (பு. 476-10?)

(அஷ்டகணம்) என்னும் எக்கணத்திற்குப் பாலசஞ்சீவி மாத்திரை:-

கல்நார், கிராம்பு, இலவங்கப்பத்திரி, செவ்வியம், திப்பிலி, அதிவிடயம், நாக்கிக்காய்த்தோல், கருஞ்சீரகம், அக்கராகாரம், கடுகுரோகணி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கற்கடகசிங்கி, குரோசாணிஓமம், கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், சீரகம், கோரோசனம், இந்துப்பு ஆகிய மருந்துப் பொருட்களையும் சரிபாகமாக எடுத்து அவற்றை இஞ்சிச்சாறுவிட்டு 3 மணிநேரம் அரைக்க வேண்டும். ② இதன் பின் நாரத்தம் பழச்சாறு விட்டு மூன்று நாழிகை (நாழிகை) அரைத்து பயறளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்க. இதனை முலைப்பாலிலாவது பசும்பாலிலாவது உரைத்து காலையிலும், மாலையிலும் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் மூன்று நாள் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய எக்கணமும் தீரும். (476-101),(482-74)-(477-165)

(வை.பி. 98-181)

அமிர்த சஞ்சீவி குளிகை:-

சாத்திரபேதி, உயர்ந்த கோட்டம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடுகுரோகணி, இலுப்பைப்பூ, சிறு நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், திப்பிலி, அதிமதுரம், கோரைக்கிழங்கு திராட்சைப்பழம், பேரீச்சம்பழம் ஆகிய பொருட்களைச் சமவெடையாக எடுத்துக் கருப்பஞ்சாறு விட்டு 12 மணிநேரம் வரை நன்றாக அரைத்துக் கடலையளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை ஆகிய இருவேளையும் வேளைக்கொரு மாத்திரையாக முலைப்பாலில் அல்லது வெந்நீரில் அனுபானித்துக் கொடுக்க எக்கணம் தீரும்.

(476-101).(482-74) (477-165-166)

② தூதுவளைச்சாறுவிட்டு மூன்று மணிநேரம் அரைக்கவேண்டும்

பூபதி மாத்திரை:-

சந்தனம், நன்னாரிவேர் புன்னம்பூந்தேன் ஏரு, சாதிரபேதி, கோரைக் கிழங்கு, தாமரைவளையம், சிறுநாகவேர், நாயுருவி வேர், கல்லாரைக் கீரை, சாதிக்காய், சாதிப்பத்திரி, சம்பகப்பூ, கல்நார், திப்பிலி, நெல்லிக்காய் வேர், சீரகம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, ஏலம், உருத்திராட்சம், கோரோசனம், பொன்னாங்காணி வேர், வெட்டிவேர், மான்கொம்பு ஆகிய மருந்துப் பொருட்களைச் சரி நிறை எடுத்துச் சேர்த்திடித்துப் பொடியாக்கி அவற்றை ஒன்று சேர்த்து குழிக்கல்லிலிட்டு கல்லாரைச்சாறு விட்டு 12 மணி நேரம் அரைக்க வேண்டும். பின் அதில் பொன்னாங்காணிச் சாறு விட்டு 12 மணிநேரமரைத்து அவ்வரைப்பொருளை கேந்நாள் விதையளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு தக்க அனுபானத்தில் வேளைக்கொரு மாத்திரை வீதம் இரு வேளையும் கொடுக்க மேகங்களும் நீங்கும். (476-101-102) (482-74) (477-166)

கணை நீக்கு சிகிச்சை:-

காராம்பசுவின் நெய், வெங்காயசாறு, பூலாங்கிழங்குச்சாறு ஆகிய மூன்றை வகைக்கு 1.3லி. எடுத்துக்கொள்க. பூக்களையுடைய மாதுளையின் பூவின் சாற்று 1.3லி அளவு எடுக்க. அதிமதுரம், கொடிப்பச்சை, சிற்றேலம், மாசிக்காய் ஆகிய இவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க. இலவங்கம், பச்சை, கல்நார், ஆகிய இவற்றை 5கி. எடுக்க. இச்சரக்குப் பொருட்களை முன் சொன்ன சாறை விட்டு அரைத்து அதனை அடுப்பிலேற்றி பதமாய்க்காய்ச்சி மெழுகு பதமாக இறக்கிக் கொள்க.

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடயம், கசகசா, முந்திரிக்காய் ஆகியவற்றை 10 கி. எடுத்து இளநீர்ப்பால் விட்டு அரைத்து பொடித்து அதில் சேர்த்துக் கொள்க. பல்லுவரும் குழந்தைக்கு காசெடை அளவு [illegible] கணங்களுக்கு கொடுக்க கணம் 5 நீங்கும். (ஏடு 109-50-51)

[illegible]

மத்தக்கணம்

மத்தக்கணக் குறிகுணம்:-

சுரம் ஏற்படும், அக்கரமான முதலில் உச்சியில் ஏற்பட்டு மூளையையும் பற்றி உடல் முழுவதும் பரவும். நா அதிகமாக உலரும். இரண்டு கண்களும் வெளுத்துப் போகும். பச்சை மஞ்சள் அல்லது பசும் போன்றிரும் போல முகம் மினுமினுக்கும். ஆகிய குறிகள் காணப்பட்டால் அந்தக் கணமாகும்.
(476-86).(477-152).(482-71)

பொன்னாங்கண்ணிக் கற்கம் பற்று:-

பொன்னாங்கண்ணிக்கீரை, சிறுகீரை, அவுரிவேர்ப்பட்டை, தேத்தான் கொட்டை, கடுக்காய்த்தோல் இவைகளை வகைக்கு 3கிரா. எடுத்து சேர்த்து அரைத்து ஆவின் வெண்ணெயுடன் கட்டிக் கொள்க. அதைக் கொட்டைப்பாக்களவு மூன்று நாள் காலை, மாலை இருவேளையும் கொடுத்தால் அந்தகக் கணம் தீரும்.

அரைத்த மருந்தை வெண்ணெயுடன் கலக்காமல் முலைப்பாலிற் கலந்து தலையில் பற்று போடவும். அது உலர்ந்துவிட்டால் அதை நீக்கி மீண்டும் போட்டு வந்தால் மூன்று நாளில் அந்தகக் கணந்தீரும்.

(477-152), (476-86-87), (482-71)

ஆமைகணம்

ஆமைகணக் குறிகுணம்:-

சுரம் உடலில் தோன்றும். சுரம் ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பதோடு 3 மணிநேரம் விடும் 3 மணி நேரம் காய்ச்சலுமாக இருக்கும். தண்ணீர் வேட்கையுண்டாகும். உடம்பு மிக இளைக்கும். சீதச் சீதமும் பசி ஏற்படாது, சிந்தையாகும், உடல்தளரும். [illegible] வயிற்றில் வாயு போகும். அதிகமாகி சிறு பொருமி [illegible] பேதியாகும். [illegible] இரைப்பு உண்டாகும். முறைநோய்க்கும் [illegible] தலையை தூக்க முடியாத அளவுக்கு அசதியிருக்கும். இரைச்சலுடன் [illegible]. கை, கால் குளிரும். கண் மூடி இருக்கும். இத்தனை அதிக சுரம் தோன்றி சீறித்திருக்கிறும்.

(ஏடு 941-33), (ஏடு 6218-34), (கை.பி. 98-179)
(ஏடு 169-226-227), (476-12)

காமாலையும் ஆமைகணமும்:-

மார்பு அடைத்தல், சிறுநீர் மஞ்சள் நிறமாயிருக்கல், அந்நீரில் புகையைப் போல் அடி ஆறு தோன்றல், உடம்பு கறுத்தல், கவந்த உடம்பு இவ்விடங்களில் இயற்கை நிறமாறி வெண் நிறமாகக் காணும். சிலவேளை உடம்பு கனத்து மிகவும் வலித்தல், உடம்பு முழுதும் அதிகமாக நோவுண்டாகும். வயிறு இரையும், அதிகமாகக் கலைநோவும். நீர் மேலுக்குக் கிளம்பிக் காட்டும். அதிகமாக மேல்மூச்சுண்டாகும். தோல் வரளும். உடம்பு துவைத்த துரும்பு போலாகும். இக்குறிகள் காணப்படின் ஆமைகணமாகும். இக்கணம் நான்கு வருடம் தொடர்வதாகும். (477-154-155) (கை.பி.போ.187)
(476-88)

இண்டெண்ணெய்:-

இண்டம் வேர்ச்சாறு, இண்டந்தழைச் சாறு ஆகிய இரண்டும் வகைக்கு 1.3லி. எடுக்க. குமிழ், மாசிப்பத்திரி, புங்கு, நிலத்துளசி, உள்ளி, முடக்கத்தான், தூதுவளை, நணாயிலை, வல்லாரை, கஞ்சாங்கோரை ஆகிய இலைகளின் சாறு வகைக்கு 3.5 மி.லி. எடுத்து இச்சாறுகளையெல்லாம் ஒரு மண்சட்டியில் ஊற்றி அதில் 1.3லி. சிற்றாமணக்கு எண்ணெய் சேர்த்துக் கொள்க. அத்துடன் சாதிக்காய், சிராம்பு, ஏலம், கடுகுரோகணி, கடுக்காய்த் தோல், வால்மிளகு, ஓமம், வசம்பு, சுக்கு, இவ்வொன்பதை வகைக்கு 35கி. எடுத்த இவைகளைத் தனித்தனியாக நீரை மைபாக அரைத்து இடித்துத் தூளாக்கி வடிகட்டி அவ்வெண்ணெயிற் சேர்த்துக் கொள்க. பிறகு அடுப்பேற்றி எரித்துப் பக்குவமாகக் கருதிரிப் பதத்தில் இறக்க வேண்டும். இதை நாள்தோறும் காலையில் மட்டும் ஒரு வேளைக்கு ஒரு உச்சிக்கரண்டி வீதம் 5 நாளைக்குக் கொடுக்க வேண்டும். மாலையில் போதுமான நிலத்தினைப் பிட்டவித்துப் பிழிந்த நீரை வடிகட்டி 2 உச்சிக்கரண்டி (32மி.லி.) கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் ஆமகணம் நீங்கும்.

பத்தியம்:-

இயந்தை வளர்ச்சியடையச் செய்யும் பண்டங்கள், வாயு பண்டம் இவை-களை நீக்க வேண்டும். (482-72) (476-88-89) (477-155)
(கை.பி. 98-179-180) (ஏடு 109- 27-228)

ஆமகணத்திற்_கெண்ணெய்:-

சிற்றாமணக்கெண்ணெய் 289மி.லி. , காட்டுமல்லிகை வேர், மஞ்சட்கடுக்காய்த்தோல், கருஞ்சீரகம், உலர்ந்த மஞ்சிட்டி கருகுரோகணி, வெள்ளைப்புண்டிதந், செம்முள்ளிவேர், குட்டிவிளா வேர், புரசம் விதைப் பருப்பு இவை வகைக்கு 45கி. எடுத்துக் கொள்க. சாதிக்காய், காசிப்பத்திரி இவை வகைக்கு 6 கி. எடுத்துக் கொள்க.

மேற்கண்ட மருந்துச்சரக்குகளைத் தண்ணீர் வார்த்து மைபோலரைத்து எண்ணெயிற் கலக்கி மூன்றுநாள் வெயிலில் வைத்து நான்காம் நாள் அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சருகு திரள்பதத்தில் வடிகட்டிப் பத்திரப்படுத்த வேண்டும். (4கி. 2கி. 1கி.,)

வீராகனெடை 1, ½.¼ என்றஅளவில் ஆமகணம் உள்ள குழந்தைகட்குக் கொடுக்க தீரும். (கை.பி.போ[illegible]-187-188)

ஆமகணத்திற்கு வேலிப்பருத்தி எண்ணெய்:-

வேலிப்பருத்தி வேர், கோவைக்கரைவேர், திருக்கள்ளிவேர், பொடுதலை, விடத்தை, கள்ளி, பச்சைவெள்ளரிக்காய், வசம்பு, வள்ளி, கடுகுரோகிணி, சீரகம், கருஞ்சீரகம் ஆகிய இவைகளை வகைக்கு 5கி. வீதமெடுத்து நசுக்கி வெள்ளாட்டுப் பாலையும் நன்றாய்க் கலந்து மண்சட்டியிலிட்டு அதில் மேற்படி அரைத்த மருந்துகளைக் கரைத்து சித்திராமணக்கெண்ணெய் அடுப்பேற்றிச் சிறு தீயால் எரித்து பக்குவமாக இறக்கி வடித்து பால்குடிக்கும் பருவத்தில் நடக்கும் குழந்தையைப் பால் குடிக்கும்படிச் செய்தால் 3 (அல்லது) 5 நாளில் ஆமகணம் தீரும். இவ்வெண்ணெயைக் கர்ப்பமாயிருப்பவர்களுக்குக் கொடுத்தால் பிறக்கும் குழந்தைக்கு ஆமகணம் உண்டாகாது.

(482-72),(476-89) (477-156),(கை.பி. 98-179-180)
(மூ 109-227-228)

ஆமகணத்திற்கு மருந்து:-

பேய்மிரட்டி, நெல்லி, வசம்பு, புளி, ஆகிய இவற்றைச் சமபங்கு எடுத்துக் கொள்க. தாமரைவேர்க்கு அதிகமாக எடுத்துக் கொள்க. அனைத்தையும் சீரகம், கிராம்பு, திப்பிலி ஆகியவற்றை நன்கு சேர்த்து முடித்து போட்டுக் காய்ச்சி பக்குவமாக எடுத்துக் கொள்க. அதனைச் சிறுவர்களுக்குக் கொடுக்க. ஆமகணம் தீரும். (மூ 941-33)

நீராமகணம் - குறிகுணம்:-

தண்ணீரும் சீதமும் கலந்த கழியும், அத்தண்ணீர் பச்சை மஞ்சளை அரைத்து கலக்கிய நீர் போலிருக்கும். சீதம் வெண்மை நிறமாயிருக்காமல் அத்தண்ணீரின் நிறமான மஞ்சளையே அடைந்து தெளிவாயிருக்கும். கண்கள் பீளை சேர்ந்து நீர்வடியும், வயிறு கடுக்கும், உடல் சோர்வடையும். குடிக்கின்ற தண்ணீர் அப்படியே குடித்தது போலவே நீராய்க் கழியும். இவை கண்டால் நீராமகணமாகும். இது தீராத நோயாகும். (476-89),(477-154)

மணத்தக்காளி நெய்:-

பசுவின் வெண்ணெயை எருமைச்சாணத்தளவு எடுத்து ஒருமண் சட்டியிலிட்டு உருக்க வேண்டும். அவ்வெண்ணெய் நன்றாய் உருகும்போது மணத்தக்காளியிலையைக் கொட்டைப்பாக்களவு அரைத்துக் கலக்கி எரித்து இளம் பதத்தில் இறக்கி இறுத்து ஆறவைக்க வேண்டும். அதைச் சிறு பிள்ளைகளுக்கு அரைக்காசளவு வீதமும் பெரிய பிள்ளைகளுக்கு தட்டெடை வீதமும் காலையும் மாலையும் 5 (அல்லது) 7 நாட்கள் கொடுக்க நீராமகணம் தீரும். (476-89-90),(477-154)

பேராம கணக்குறிகுணம்:-

கை, கால்கள் குளிர்ந்திருக்கும், கண் எட்டமிரும், சுரமடிக்கும், பால் செரிக்காத, குழந்தைபடுவேனாந்திராகும். மூத்திரம் திருக்கும், எங்கும் சோர்வடைந்து ~~வயிறு பொருமும்~~ கழியும், சில குழந்தைகளுக்கு வயிறு பொருமிப் பின்னால் மலம் வெளிப்படும். சிலருக்குச் சாதாரணமாக ~~வயிறு பொருமும்~~ கழிச்சல் ஏற்படும். நெற்றியில் வலி எடுக்கும். பால் சரியாகக் குடிக்காது, பயந்த பார்வையாய்ப் பார்க்கல் என்றும் நூக்குறிகள் பேராமகணத்திற்குரிய தெக்க.

(477-160) (476-93). (482-72)

பேராமக்கணைகள்:-

உடம்பில் நீர் அதிகமாகக் கோர்க்கும். உடலெங்கும் பொருமலேற்படும். தப்பம் அதிகமாக ஏற்படும். தூக்கில் கொண்டிருக்கிற கண்ணும் அடிக்கடி திறக்கும். வெளுச்சக்காதம் தாகம் ஏற்படும் இதுவே பேராம கணமாகும்.

(சு 392-72) (சு 6218-51)

பேராம கணத்திற்கு அம்பைப்பல்லு மோர்:-

தும்பைவேர், பொருதலைவேர், உத்தாமணிவேர் ஆகிய மூன்று பொருட்களையும் வகைக்கு ஒரு பலம் (35கி) எடுத்து இடித்து ஒரு மண் சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்துக் கருகச் சாம்பலாக்கி, அச்சாம்பலைக் கொட்டியிட்டு அதில் 1.3லி. எருமை மோர் விட்டுக் கொஞ்சி வேர்ப்பட்ட சிறு திப்பிலி, சீரகம், சுக்கு, இந்துப்பு ஆகிய 5 பொருட்களையும் வகைக்கு 5கி. வீதமெடுத்து மேற்கூறப்பட்டுள்ள மோரால் அரைத்துக் கலக்கி வடிகட்டிக் காலை, மாலை ஒரு வேளையும் குழந்தைகட்கு ஒரு 8 சங்களவாகக் கொடுக்கப் பேராமகணம் தீரும். (476-93). (477-160). (482-72)

ஆமகணத்தில் வரும் சுரத்திற்குக் குடிநீர்:-

கோரோசனை சுக்கு, சுக்கு, பாவட்டை, வெள்ளிப்பருத்தி வேர், நன்னாரி ஆகிய சிற்றேரண்டம் இவைகளைச் சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்க ஆம கணத்தில் சுரம் நீங்கிப் போகும். (சு 362-42) (சு 6218-34)

குடிநீர்:-

சதுப்பி பத்தை எடுத்துக் கொண்டு பொடியதாய் நறுக்கி எடுத்துக் கொள்க. வில்வம், நுவாரை, நிலவிளா, தென்னி ஆகிய மூலிகைகளைச் சிதைக்க வைத்து காய்ச்சி குடிநீர்க்கு மூன்று நாள் கொடுக்க கணம் நீங்கி விடும்.

(சு 6218-35)

இரத்தகணம்:-

குழந்தை இடைவிடாமல் அழும். அப்படி அழும்போது இருமலேற்படும். தொண்டை, இருப்பு ஆகிய இடங்களில் தடிப்புண்டாகும். நீர் வேட்கை அதிகமாய் [illegible] இறங்கும். மலம் கட்டியிருக்கும். பசி கெடுதல், சோறு தின்ன முடியாமை, மலத்துடன் இரத்தம் விழுதல், மூலத்தில் அருண்டாதல், நாடிநடை தளர்ந்து மெலிந்து காட்டல். [நாக்கில் அட்சரம் தோன்றி (நாவில் மாப்படிந்து)] இக்குறிகள் காணப்பட்டால் இரத்த கணமென்றறிக.

(476-97-98) (477-160)

இரத்தகணவிஷ குணம்:-

புறங்கால் வீங்கும். உடம்பு வற்றும், கருப்போல் [illegible] ஏற்படும், மூர்ச்சிக்கும், உடம்பு எரியும், சுரங்காயும், முன்னை, நாக்கை [illegible] கொண்டிருக்கும். இவையே இரத்த கணத்தின் குறிகுணங்களாகும். -(அபி 601-54)

உதிரகணம்:-

வயிற்றில் வலியுண்டாகும். உடம்பெல்லாம் வலிக்கும். இத்தகைய குணம் ஏற்பட்டால் இரத்த கணமாகும்.

சாறு:- [illegible], புளியிலை இவற்றைச் சேர்த்து இடித்து நன்றாய் தண்ணீர் விட்டு பிழிந்து கொண்டு அதில் சீரகம், [illegible] இவற்றைச் சேர்த்து அரைத்து அதனைக் கொடுக்க இரத்த கணம் நீங்கிப் போகும்.

-(அபி 424-20)

குடிநீர்:- சிறு [illegible] புல்லடி, வெந்தயத்தைச் சட்டி வறுத்து இதனைக் குடிநீராக்கிக் கொள்க. சாதிக்காயைச் சேர்த்து குடிப்பி கொடுக்க இரத்தகணம் நீங்கிப் போகும். (அபி 424-21)

செங்கழுநீர்க் கற்கம்:-

செங்கழுநீர்ப்பூ சீரகம், [illegible], செண்பகப்பூ, அதிமதுரம், சாதிக்கோட்டம், [illegible], நன்னாரிவேர் ஆகிய இவ்வெட்டுப் பொருட்களையும் சரியாக எடுத்து தாய்ப்பால் விட்டு அரைத்து வேளைக்கு [illegible] காலை, மாலை இரண்டு வேளையும் தேனில் குழைத்து உள்ளுக்குள் வைத்து கொடுக்க வேண்டும். இதை 3 (அல்லது) 5 நாள் சாப்பிட வேண்டும்.

(482-81), (476-98), (477-161)

வில்வ இலைக்கற்கம்:-

வில்வ இலை, எல்வேர், கருவேலங்கொழுந்து, வேப்பங்கொட்டைப்பருப்பு, சீரகம், கிராம்பு, ஏலரிசி, சாதிபத்திரி, சாதிக்காய், இலவங்கம் ஆகிய இப்பத்துப் பொருட்களையும் வகைக்கு 1கி. எடுத்து தாய்ப்பால் விட்டரைத்து ஒரு வேளைக்குக் ~~கொட்டைப்பாக்களவு~~ வீதம் காலையிலும், மாலையிலுமாக 3 (அல்லது) 5 நாள் கொடுத்தால் இரத்தகணம் தீரும்.

(482-81). (476-98) (477-162)

இரத்தகணத்தினால் உண்டாகின்ற -- சுரசாலைக்கற்கம்:-

காஞ்சாங்கோரைவேர், புளியம்புளி இலை இரண்டையும் சரிஎடை எடுத்து அரைத்து வேளைக்குப் ~~[illegible]~~ 5கி. ஏழு நாள் (அல்லது) எட்டுநாள் காலை, மாலை இரண்டு வேளையும் கொடுக்க மேற்கூறியுள்ள நோய் நீங்கும். ~~[illegible]~~. (477-161) பெரியவர்களுக்கும் வழங்கலாம் (கிச்சாபத்தியத்துடன்)

சாதிக்காய்வெண்ணெய்:-

420கிராம் சிற்றாமணக்கெண்ணெய், 21கிராம் பசுவெண்ணெய், 500கிராம் முருங்கையிலைச்சாறு ஆகிய இம் மூன்று பொருட்களையும் ஒரு மண்சட்டியிலிட்டு அதில் சாதிக்காய், சாதிபத்திரி இலவங்கம் இலவங்கப்பட்டை, கொத்தமல்லி, சாதிக்கோட்டம், கோரோசனம், அதிமதுரம், கார்போகரிசி, அக்கிரகாரம், இலவங்கப்பத்திரி, சீரகம், செங்கழுநீர்க்கிழங்கு, ஏலம் ஆகிய இப்பதினான்கு பொருட்களையும் வெந்நீர் விட்டரைத்துப் போட்டு பக்குவமாக எரிக்க வேண்டும். மெழுகுப் பதத்தில் வடித்து அதை வேளைக்கு 35மி அளவினதாக காலையில் மாத்திரம் கொடுக்கவேண்டும். இவ்வாறு மூன்று நாள் கொடுத்து வந்தால் இரத்தகணம் தீரும். (482-81). (477-161)

குமரிவெண்ணெய்:-

325 மி.லி. முத்தெண்ணெய், விளாங்காயளவு சோற்றுக்கற்றாழைச்சோறு, இரண்டு அம்மட்டிக்காயின் சோறு, அரிந்த வெள்ளை வெங்காயம் பத்து ஆகிய இந்நான்கு பொருட்களையும் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்ச வேண்டும். மெழுகுபதமாக இறக்கி வடித்து நாளொன்றுக்கு ஒரு நடவை கொட்டைப்பாக்களவு (   ) காலையில் மட்டும் கொடுக்க இரத்த கணம் தீரும்.

(482-81). (476-99) (477-160)

இரத்தமேல கணக்குறிகுணம்

இரத்த மூல உரட்சணம்:- பதற்ல் மேலும் கணமும் கொண்டிருப் வரும் நோய் இரத்தவொழுக்குநிறுத்தி

சாதிக்காய், மாசிக்காய், கிராம்பு, கோரோசனை, சீரகம், -புராவ. நெற்பொரு, புளிக்காய், திப்பிலி ஆகியவற்றைச் சமமாக எடுத்தரைத்து வாகைவேர்ப்பட்டை திருவிலைத்தி தாய்ப்பாலில் கலந்து கொடுக்க இரத்த ஓட்டம் நீங்கிப் போகும். (ஆ. 476-99) (ஆ. 477-162)

(24)

இரத்த கணத்திற் கெண்ணெய் :-

செப்பு நெருஞ்சி, தகரை, பழம்பாசி, முசிலைத்தாமரை, நல்வாதி, சங்கு, தொட்சி, சாரணை, ஆடாதோடை, சிறுவழுதலை, நிம்புரல், பற்படாகம், கந்தாரை, நாயுருவி, சங்கங்குப்பி, கேழ்ப்பருத்தி, சீதாசெங்கழுநீர், பூசுரண்டி, சிந்தாமுட்டி, ஆடு அவணை, கண்டங்கத்திரி, விஷ்ணுக்காந்தி இலைகளின் வேர் வகைக்கு 9வி. எடுத்துக் கொள்க.

விஷ்ணுக்காந்தி, வல்லாரை, கரிப்பான், துளசி, செம்முள்ளி, வில்வப்பத்திரி, அகத்தி, மொசுமொசுக்கை, முடக்கொற்றான் சமூல, [illegible] கரந்தை கருவேல், தகரை, வெருப்படக்கி, பேய்மருட்டி, இலைகளிலையைச் சாறெடுத்து 1.3லி. எடுக்க.

திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், கருங் கோரோசனை, வசம்பு, சீரகம், மாசிக்காய் அரத்தை ஆகிய [illegible] வகைக்கு 12வி. எடுத்துக் கொள்க. திப்பிலிமூலம், [illegible], சித்திர மூலம், தேசாபுரம், ஓமம், கருஞ்சீரகம், கடுக்காய், இலங்கபம் 70வி. இவைகளை [illegible] 1.3லி சிற்றாமணக்கெண்ணெயிற் போட்டு மேலே கூறப்பட்டுள்ள [illegible] காய்ச்சி [illegible] கொடுக்க உப்பு, புளி தள்ளிப் பத்தியமாயிருக்க இரத்தகணம் தீரும்.
(482-82)

கிராம்பு சாதிக்காய் [illegible] 4.வி எடுக்க [illegible] 20வி .. சாறு [illegible] பதமாய்க் கலந்து கொள்க

எண்ணெய் :-

கந்நாவச்சாறு, [illegible] சாறு, நீர், ஆவின் பால் வகைக்கு 1.3லி. எடுத்துக் கொள்க. வேப்பஞ்சாறு 675 மி.லி. சிற்றாமணக்கெண்ணெய் 3.9லி. எடுக்க. அனைத்தையும் ஒன்றாகச் சேர்க்க. சந்தனம், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு 35வி. சண்பகப்பூ 17½ வி. பச்சைப் புலாங்கிழங்கு [illegible], விலாமிச்ச, வெட்டிவேர், நன்னாரி, சாதிக்காய், பத்திரி, கொத்தமல்லி, மதுரம், கோட்டம், கருங், கோரோசனை, கிராம்பு, முத்தக்காசு, சல்லவங்கம், கருஞ்சீரகம், நச்சுக்கம், சிறுநாகப்பூ, வகைக்கு 4வி. எடுத்து அரைத்து எண்ணெயிற் கலந்து பதமாய்க் காய்ச்சிக் கொள்க. அதனை காசெடை ( ) இருவேளை கொடுக்க இரத்தகணம் தீரும். -(482-100)

உடைக்கு கண[வீன் குறிகுணம்]

ஒரு நாளிலே தேகம் வற்றிவிடும். கண்ணும் வெளுத்துப்போகும். சுரம் காயும். ஒவ்வொரு நாளும் வெடலைப் புரட்டி மிக மந்தம் ஏற்படும். கண்கள் மஞ்சளாக இருக்கும். இக்குறிகுணங்கள் ஏற்படில் அது உடைக்கு (உள்) கணமாகும். (ஏடு 601-69)

25

உஷ்ணக் கணைக்கு மருந்து:-

சர்க்கரைச் சீனியைவெண்ணெயுடன் கலந்து கொண்டு அதனைக் காலை, மாலையில் கொள்ள உஷ்ணக் கணை நீங்கிவிடும். பசுவின் நெய், நல்லெண்ணெய், சித்தாமணக்கெண்ணெய் ஆகிய மூன்றும் கலந்த முக்கூட்டெண்ணெயைத் தலைமுழுகி வந்தால் உஷ்ணக் கணை நீங்கிப் போகும். (ஏடு 601-70)

உஷ்ணக்கனம்:-

தாகமும் அதிகமாக ஏற்படும். மலசலங்கள் மஞ்சளாக ஆகும். மிக அதிகமான சூடு ஏற்படும், ஆகாரம் ஏற்காது, உடலும் மெலிவாகும், கடைவாய் புண்ணாகும். உலர்ந்த ரோகம். (ஏடு 424-12)

பத்தியம்:-

வெள்ளைச் சீரகம் நெல்லிவற்றல் ஏழுபடி எடுத்துக் கொள்க. வெள்ளாட்டுப்பாலில் கலந்து பிழிந்து எடுத்துக் கொள்க. பனைவெல்லத்தைச் சேர்த்துக் கொள்க. அதனைப் பத்தியமாக உட்கொள்ள உஷ்ண காய்ச்சல் விட்டுப் போகும். (ஏடு 424-13)

உள்ரோகக் கணை:-

உடம்பு பதறும், உடம்பு சாய்ந்த நிலை, உடல் வற்றும், வாய் வெந்தல், நாக்கு வெடிக்கும், உள்ளுக்குள்ளேயே தொக்கல் உண்டாகும். சுரம் ஏற்பட்டு உடல் வெளுத்த ஈரல் வற்றிவிடும். இரத்தம் குறையும். தலையில் சுற்றி வரும். சுரம் சிற்சில வேளையில் இருமலுமுண்டாகும். உடல் வெளுத்துவிடும். இரத்தம் அதிகமாகச் சிவந்து உடல் பதறும். இரத்தம் வற்றி உடல் சுகமானதி அயர்ச்சியாகும். இரத்தம் வற்றும். இவையே உள்ரோகக் கணையின் குணங்கள்.
-(ஏடு 601-55)

உள்ரோகக் கணை தீர்க்கும் தைலம்:-

பிரமி, வல்லாரை, நெருஞ்சி சில், விழுதி, வெட்சி, முத்தாமி, பாசி, புன்னை, பொன்னாங்காணி பாதசொற்றி, தகரை, துவரை, மாசிக்காய், காந்தள், கருமாதளை, தனி, கொல்லை, நக்கு, கொத்தான் ஆகிய மூலிகைகளை எடுத்து சாறு பிழிந்து வகைக்கு 325 மி.லி. எடுக்க ஆமணக்கெண்ணெய் சேர்த்துத் சாற்றின் அளவே எடுக்க.

முக்கடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், மண்டகம், அதிமதுரம், கோட்டம், கிராம்பு, வசம்பு, உள்ளி, கொடிப்பச்சை, ஆகிய இவை சரக்குப் பொருட்களை 5கி. எடுத்துக் கொள்க. வெங்காயத்தை 325மி.லி. எடுத்து அதனை அரிந்த போட்டு அனைத்தையும் ஒன்று சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. முதிர்வான பதமாக வரும் போது நெய்யை எடுத்து கரண்டியளவு (   ) கொள்ள உள்ளு ரோகங்கள் 18ம் தீரும். -(அடு 601-56)

உள்ளுரோகம் தீர்க்கு நெய்:-

[illegible]

விந்நாவனைக்கு முத்து 2.6லி. எடுக்க பசுவின் பால் 2.6லி. எடுக்க. ஈ பாலில் கோட்டையை அழித்து பிறகு அதனைக் காயவைத்து இடித்துச் கொள்க. அதனுடன் இளநீர் 6.5லி. சேர்த்துக் கொண்டு ஒன்றாகக் காய்ச்சிக் கொள்க. அதில் சாதிக்காய், குரோசாணி சாதிபத்திரி, கிராம்பு, சீரகம், வசம்பு, ஏலம், திப்பிலி, அதிமதுரம், மாயக்காய் ஆகிய சரக்குகளை வகைக்கு 1½கி. எடுக்க. அதனைத் தாய்ச்சாறு வல்லாரைச்சாறு வகைக்கு 162மி.லி. எடுத்து அதில் சரக்கு வகைகளை அரைத்துக் கொள்க. அரைத்த கலவையை ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது எடுத்துகாசெடை (   ) குடிக்க உள்ளுரோகம் எட்டும்தீரும். (அடு 601-57)

உள்ளுரோக கணைக்குப் பசுவின் நெய்:-

கொடும்பை, நகரை, பழம்பாசி, கிச்சி, அகத்திஇலை, கீழ்காய்நெல்லி, கொவ்வை, அமிர்தவல்லி சித்திரப்பாலை ஆகிய நன்பது இலைகளை எடுத்துக் கொண்டு சாறெடுத்து வகைக்கு 162மி.லி. எடுக்க. வெள்ளை வெங்காயம் 5கி. எடுத்து சாறு பிழிந்துக் கொள்க.

மூஞ்சு, அதிமதுரம், ஏலம் இலவங்கம், கடுக்காய், கல்நார், தேற்றான், மாயக்காய், திப்பிலி, கொடிப்பச்சை, சீரகம், கடுகு, கிராம்பு, சாத்திரபேதி, சுக்குநீர், சந்தனம், நன்னாரி, கருஞ்சீரகம், இலாமிச்சம் ஆகிய-வற்றின் வேர்களை வகைக்கு 5கி. எடுத்து மேற்கூறிய சாறு விட்டரைத்துக் கொள்க. ஈரவெங்காயத்தை எடுத்து அரைத்து ஒன்றாக வழித்துக் கொள்க. வழித்த மருந்துடன் சாறுகளையும் சேர்த்து 1.3 லி.நெய்யையும் சேர்த்து கலக்கி அடுப்பேற்றி காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது இறக்கி சீலை கொண்டு வடிகட்டி குடிக்க உள்ளுரோகக் கணை நீங்கிப் போகும். (அடு 601-58-59)

ஊதுகணக் குறிகுணம்:-

காது, கண், உடம்பு இவைகள் பசுமையாக வீங்கி பின் வற்றும். நாக்கு புண்ணாகும். அதனால் சுரம் உண்டாகும். உணவு செல்லாது. கை, கால் சோர்ந்து விழும். உடல் வெளுக்கும் மலம் சிக்கும். இருமல் ஏற்படும். இக்குறிகுணங்கள் காணப்படின் அது ஊது கணம் என்றறியலாம். -(477-148). (476-85)

நீர்முள்ளி, நாய் வேளைக் கற்கம்:-

நீர்முள்ளிச் சமூலத்தைச் சுட்டெடுத்த அக்கரியைக் காடிசாராயம்விட்டரைத்து வேளைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்துக் காலையிலும், மாலையிலுமாக மூன்று நாள் வெந்நீரில் கலக்கிக் கொடுக்கலாம்.

நாய்வேளை, வேர்ப்பட்டையைக் காடிசாராயம்விட்டரைத்து வேளைக்குக் கொட்டைப் பாக்களவு வீதம் காலையிலும் மாலையிலுமாக மூன்று நாட்களுக்கு முலைப்பாலில் கலக்கிக் கொடுத்தாலும் ஊது கணம் தீரும்.
(477-148). (476-85)

எண்ணெய்:-

செப்பு நெருஞ்சி, தகரை, பழம்பாசி, இலைத்தாமரை, நன்னாரி, சங்கு, நொச்சி, சாரணை, ஆடாதோடை, சிறுகுறிஞ்சா, அம்பரம், பற்பாடகம், கற்றாழை, நாயுருவி, சங்கங்குப்பி, வேலிப்பருத்தி, சீதா செங்கழுநீர், முக்குறண்டி, சிற்றாமுட்டி, ஆவாரை, கண்டங்கத்திரி, மிளகு தக்காளி இவைகளின் வேர் வகைக்கு 9கி. எடுத்துக் கொள்க. சாறாக்கிக் கொள்க. மிளகு தக்காளி, கல்லாரை, கரப்பான் துளசி, செம்முள்ளி, வில்வபத்திரி, அகத்தி, மொசுமொசுக்கை, முடக்கொத்தான் சமூலம், வெள்ளைகரந்தை கருவேர், தகரை, வெதுப்படக்கி, பேய் மருட்டி, இவைகளின் சாறு வகைக்கு (படி மாகாணி) எடுத்துக் கொள்க.

திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், கோரோசனை, வசம்பு, சீரகம், மாசிக்காய், அரத்தை வகைக்கு 12கி. திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம், தேசாவரம், ஓமம், கருஞ்சீரகம், கடுக்காய், கிராம்பு, சாதிக்காய் வகைக்கு 4கி. பூண்டு 20கி., வெங்காயம் 70கி., எடுத்துக் கொண்டு இவைகளெல்லாவற்றையு மரைத்து 1.3லி. சிற்றாமணக்கெண்ணெய்யுடன் மேற்குறித்துள்ள சாறு வகைகளையும் கலந்து கொண்டுபதமாய்க் காய்ச்சிக் கொள்க. மாதம் ஒன்று முறை கொடுத்து உப்பு, புளி தள்ளி பத்தியமாயிருக்க ஊதுகணம் தீரும். (பு. 482-82)

ஊதுகணக்கு நெய்:-

தேங்காய் நாலை எடுத்துக் கொண்டு துருவி பாலாக 5.2லி. எடுத்துக் கொள்க. பிறகு முந்திரிகைப்பழம், அதிமதுரம், சிறுநாகப்பூ, கிராம்பு, சுக்கு, அரத்தை ஆகிய சரக்குப் பொருட்களை 7கி. எடுத்துக் கொள்க. இவற்றை தேங்காய் பால் விட்டரைத்து கரைத்துக் கொள்க. அதனைக் காய்ச்சி வேகவைத்து நெய்யாக

28

வடித்தெடுத்துக் கொள்க. இதனைத் தட்டு காசெடை உள்ளுக்கு கொடுக்க இந்த கணம் நீங்கிப் போகும். (ஏடு 601-64)

ஆமணக்கெண்ணெய்:-

ஆமணக்கெண்ணெய் 1.3லி., காட்டெருமைப்பால் 162 மி.லி., எடுத்துக் கொள்க. மஞ்சிஞ்சா, வேலிப்பருத்தி, நாகிலவை, பிரம், நொச்சி, குப்பைமேனி, வேம்பு (விதை) தக்காளி, சங்கம்பப்பி, ஆகியவற்றின் சாறு 335 மி.லி., எடுக்க. பெருங்காயம், மூலம், சதகுப்பை, கிராம்பு, ஏலம், கருஞ்சீரகம், வசம்பு, இந்துப்பு, திப்பிலி, வெங்கடுக்காய், சாரம் இந்த ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் கொள்க. அனைத்தையும் வகைக்கு 5கி. எடுத்தரைத்து கரைத்து வைத்து எரிச்சிப் பதமாக வடித்துக் கொள்க. வடித்துக் கொண்ட இதனைக் காசெடை கொள்ள ஜூர கணம் நீங்கிப் போகும். (ஏடு 601-64-65)

ஜலமாந்தகணம்:- உதிரம்:-

ஜலமாந்தக் கணத்தில் கால், கண், உடல் இவை துளிகளைபோல் வீங்கும். உடலில் வீக்கம் உண்டாகும். நாக்கு புண்ணாகும். சுரங்காயும், உணவும் தண்ணீரும் ஏற்காது, காலம் தையும் சோரும். மேல் மூச்சுண்டாகும். இந்நோய் 12 ஆண்டுகாலம் வரை இருக்கும். (கை.பி. 98-168), (476-68).
(477-148), (ஏடு 798-28), (ஏடு 109-212)

எண்ணெய்:-

துளசி, நீர்முள்ளி, இண்டுவேர், கையாந்தகரை, சிவதந்தை, கண்டங்கத்திரி, கத்திரி, மாதளம்பழம், செங்கத்தாமரை, தாமரை, செங்கழுநீர், முருக்கு, வல்லாரை ஆகிய இலைகளின் சாறு வகைக்கு 325 மி.லி. எடுக்க. தேங்காய்ப்பால் 325 மி.லி. எடுக்க. 1.3லி. விளக்கெண்ணெயையும் அத்துடன் கலந்து கொள்க. பெருங்காயம், வசம்பு, ஏலம், வெட்பாலையரிசி, வெட்டித்திப்பிலி, பற்பாடகம், கோரைக்கிழங்கு, கோத்தாவரை, சிறாம்பிசின், வாகைப்பிசின், மக்காரைப்பிசின், இலவம்பிசின், செக்கத்தாரி, மாசிக்காய், கடுக்காய் அதிவிடயம், வால்மிளகு, சாதிபத்திரி இவைகளை வகைக்கு 9கி. வீதமெடுத்துப் பொடித்து மேற்படி சாறுவிட்டரைத்து மேற்சொன்னவைகளில் கலக்க வேண்டும். பின்பு அடுப்பேற்றிக் காய்ச்சி பக்குவமாக வடிக்க வேண்டும். இதில் ஒரு குட்டெடை (உள்ளுக்கு) அளவு வீதம் காலையில் கொடுத்து மூன்று நாள் கொடுக்க வேண்டும். அப்படிக் குழந்தைக்குக் கொடுத்தால் ஜல கண மாந்தம் நீங்கிப் போகும். புளிப்பு, உப்பு, புகை, எண்ணெய், கசிந்த இலைகளைத் தாயும் குழந்தையும் நீக்க வேண்டும். (476-69). (477-149), (கை.பி. 98-169-170), (ஏடு 109-212-213), (ஏடு 798-28-29)

எரிகணம் - குறிகுணம்:-

உடல் முழுவதும் படுக்க முடியாதபடி எரிச்சலுண்டாகும், அவ்விகாரண-மாக குழந்தை அழுதிருக்கும். வாய்வழியே மூச்சு விடும், வாயில் நுரைகை வெப்பு நாற்றமுள்ள உமிழ் நீர் வடியும். இந்நோய்களைத் தாங்கமுடியாமல் அழும், தலைவலித்து நோக்கல் முகத்தை நேரே வைக்க முடியாமல் சாய்ந்த வைத்துக் கொள்ளும். இக்குறிகள் காணப்பட்டால் எரிகணமாகும்.

(477-153)

குரும்பைவெண்ணெய்:-

315மி.லி. தென்னங்குரும்பைச்சாறு, 325 மி.லி. நகரைச்சாறு, 650 மி.லி பழம் பாசிச்சாறு, 650மி.லி அரைப்பட்டைச்சாறு, 650 மி.லி. வெள்காயச்சாறு, 650 மி.லி. குமரிவேர்ச்சாறு 650 மி.லி. வல்லாரைச்சாறு ஆகிய இவ்வேழு வகைச்சாறுகளையும் ஒரு மண்சட்டியில் விட்டு 650மி.லி. வெண்ணெயையும் கலக்க வேண்டும். அத்துடன் ஏலம், இலவங்கப்பட்டை, கோட்டம், சீரகம், சந்தனம், அதிமதுரம் ஆகிய இப்பொருள்களையும் வகைக்கு 2.5 கி. வீதமெடுத்து இடித்து மேற்படி சாற்றுகலவைத்தச் சேர்த்துப் பக்குவமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ள வேண்டும். இவ்வெண்ணெயை ஒரு காசெடை வீதம் காலையில் கொடுக்க வேண்டும். இவ்விதம் 5 (அல்லது) 7 நாள் கொ[illegible]த்தால் எரிகணம் நீங்கும். (482-71), (477-154)

எலும்பு அக்கினை வெட்டைக்கு:-

கொத்து மல்லி 9கி., வெந்தயம் 9கி., சீரகம் 9கி., கருவெங்-காயம் 17கி., சாதிக்காய், தான்றிக்காய் கைக்கொண்டு மாசிக்காய்-2 அதிமதுரம், கோட்டம் சிறுதேக்கு, சித்தரத்தை, சுக்கு, திப்பிலி, கோரோசனை, ஏலம், கிராம்பு இவைகளை எடுத்துக் கொள்க. வீழுதி இலைச்சாறு 325மி.லி. வெள்பூசணிச்சாறு 325மி.லி., கிரந்திநாயகம், குப்பைமேனிச்சாறு 325மி.லி., பசுவின் பால் 650 மி.லி., எலுமிச்சம்பழச்சாறு 650மி.லி., இளநீர்த்தண்ணீர் 650 மி.லி., ஆகிய சாறு வகைகளை இணைத்துக் கொள்க. மருந்துச் சரக்குகளைச் சேர்க்க. அனைத்தையும் ஓட்டி விளக்கெண்ணெயில் மெழுகைத்து உள்ளுக்குக் கொடுக்க எலும்பு அக்கினை வெட்டை நீங்கி சுகமாகும். (ரு 612-7-8)

கரப்பான் சுரணை குணம்:-

உடல் வெட்சியாகும், நாக்கு உலர்ந்த போதும், சிரசும் சொதி அதிகமாக ஏற்படும். தாக வெட்கையேற்படும், தண்ணீர் குடிக்க வேண்டுமென்றிருக்கும் உடலில் புண்போல் ஏற்பட்டு எரிச்சல், நோவுண்டாகும். இவையே கரப்பான் சுரணை குறிகுணங்களாகும். (வை 601-66)

கரப்பான் கணைக்கு நெய்:-

சிலைப்பால் 70வி., வசம்பு, திரிகடுகு, கார்கோலம், கருஞ்சீரகம், கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், ஏலம், கஸ்தூரி மஞ்சள், அத்தம், அதுசு, வெம்பாடம்பட்டை ஆகிய இவற்றை வகைக்கு 5வி. எடுத்துக் கொள்க. சங்கங்குப்பி, குப்பைமேனி, கழுதைவிட்டை, தகரை, 5வி. எடுக்க. மோர்மோரகல்லைச் சாறு 1.3வி., ஆவின் நெய் 1.3வி. எடுக்க. இத்திரவத்தில் அந்த மருந்துச் சரக்குகளை இடித்துப் போட்டு காய்ச்சி வடித்துக் கொள்க. அதைக் கரண்டியளவு எடுத்துக் கொடுக்க கரப்பன் கணை நீங்கிப் போகும். (ஏடு 601-66-67)

கழிகணை குணம்:-

சீதம் கழியும், கெட்டுப்பால் போல மலங்கழியும், கருந்தண்ணீர் போல் கழியும், கால் குளிர்ந்து விடும், ஒரு சமயத்திலிருந்து ஏற்படும். இந்தக் குணங்கள் ஏற்படின் இது கழிகணையாகும். (ஏடு 362-30), (ஏடு 6218-23)

கழிகணைத்திற்குக் குடிநீர்:-

இலந்தை, நாரத்தை, புளி, கொப்பூழ், நெல்லி ஆகிய இவற்றை ஒன்று சேர்த்து காய்ச்சி உண்ண கழிகணை, வெட்டை காய்ச்சல், தாகம், இவைகளை நீங்கும். (ஏடு 6218-23)-(ஏடு 362-30)

கழிகணைக்கு மருந்து:-

வெங்காயம் பத்து, ஒருபிடி கருவேலந்தளிர் சீரகம் (காசெட்டிப்பருப்பு) வெந்தயம், ஆகியவற்றை பசுவுடன் சேர்த்து பதமாக நீர் விட்டுக் காய்ச்சி அளவறிந்து கொடுக்க இக் கழிகணை தீரும்.
(ஏடு 6218-23), (ஏடு 362-30) -(ஏடு 941-24)

குடல் சோகைக்கணையின் குணம்:-

இரைக்குறைவுடன் மூச்சுடன் பார்க்கும், வயிறு பொருமும், வலி ஏற்படும், கல் நாக்கு உலர்ந்து விடும், உடம்பு வற்றும், உடம்பில் ஒரு அதிகமாகி சுரங்காயும், கண்களிரண்டு வெளுக்கும்.

இவையே குடல் சோகைக் கணையின் குறிகுணங்களாகும்.
(ஏடு 601-60)

குடலேற்ற கணையின் குணம்:-

குடல் பொருமி குத்தலேற்படும், வயிறு இரையும், மலந்திறக்கும், உடலைக் கலக்கும், குடல் வெளிவிட்டு வருவது போல வலிக்கும், ஈரல் வலிக்கும், வேம்பு போல் மலங்கழியும். இவையே குடலேற்ற கணையின் குறிகுணங்களாகும்.
(ஏடு 601-60)

குடிநீர்:-

கருவேம்பின் காம்பு, முருங்கை, வேம்பு இவற்றின் காம்புகள், நாரை, கொடிஞ்சி, பெரியதும்பை, ஆகியவற்றின் வேர்கள், சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி, வசம்பு, மஞ்சள், பொடுதலை, வெள்ளைப்பருத்தி ஆகிய இவைகளை எடுத்துக் கொள்க. அனைத்தையும் நன்றாக இடித்துக் கொண்டு தண்ணீர் விட்டுக் காய்ச்சி கொடுத்திட உடலெரிச்ச கணை விட்டுப் போகும். (ஏடு 601-60)

கணைக்கெண்ணெய்:-

நல்லெண்ணெய் 650 மி.லி., எருக்க வெள்ளைப்பருத்தி, தும்பை, பிரமி, கொன்றை, பேய்ப்பீர்க்கு, முருங்கை, ஆதளை, தக்காளி, பேரண்டம் ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 1.3லி. எடுத்துக் கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி, சிவதை, நேர்வாளம் ஆகியவற்றைச் சமனாக எடுத்து சாந்தில் அரைத்துக் கொள்க. அனைத்தையும் ஒன்றாக சேர்த்து கெடுவைத்து கொடுக்க உடலெரிச்ச கணை நீங்கிப் போகும்.

(ஏடு 601-61)

கொதிப்புக்கணம்:- குறிகுணம்:-

நெஞ்சு, விலா ஆகிய இடங்களில் ~~அதிகக் கொதிப்பு~~ குத்து இருக்கும். தெற்றி முழுவதும் வியர்வை யுண்டாகும். கண்கள் ~~[illegible]~~ பஞ்சடைந்து மங்கிய நிலையுடன் காதுகள் பார்க்கும் பார்வை பலவீனமாய்த் தோன்றும், தூக்கமுடியாமல் இருமல் உண்டாகும், அதனால் தலை தூக்கமுடியாத அளவு ~~[illegible]~~ வலி ஏற்பட்டுத் கம்பம் உண்டாகும். குரல் கம்மும், இவைகள் கொதிப்புக் கணத்தின் குறிகுணங்களாகும்.

(476-85) (477-150)

கொதிப்பு கணத்திற்குக் கற்றாழை எண்ணெய்:-

1.3லி. விளக்கெண்ணெய் எடுக்க. எலுமிச்சம் பழச்சாறு 325மி.லி. இலந்தைச் சாறு 325 மி.லி., வெள்ளரிச்சாறு 325 மி.லி. ஆகிய நான்கையும் கலந்து ஒரு மண் சட்டியில் ஊற்ற வேண்டும். பின் 9லி. கருஞ்சீரகம் எடுத்து அதை மேற்படி சாற்றாலரைத்து மண் சட்டியில் வைத்திருக்கும் கலவையோடு சேர்த்து கற்றாழைச் சோற்றை ஒரு துணி கட்டி அதில் 35லி. எடுத்துச் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவேண்டும். கற்றாழைச்சோறு சிவக்கும் போது வடிகட்டி தினம் காலை, மாலையிலிருவேளையும் ஒரு கரண்டி வீதம் சில நாள் கொடுக்க வேண்டும். அதனால்கொதிப்புக் கணம் நீங்கிப் போகும். இது பெரியோர்க்கும் சிறியோர்க்குமாகும். (476-85-86) (477-150-151)

சந்திக்கணையின் குணம்:-

உடம்பெல்லாம் வற்றும்; மாலையில் கண் சொருகிக் கொள்ளும். உலையில் வெதுப்புண்டாகும். எப்போதும் தண்ணீர் தாகம் ஏற்படும். நெடிமூச்சு, மயக்கம் மிகவுமேற்படும். (வை 601-54)

சர்ப்பக் கணையின் குணம்:-

கண்ணில் வெதுப்புண்டாம், வெப்பமுடன் வயிறு கழியும், உடல் தட்சியாகும். அடிவயிறு தள்ளும்; அகலமாக ஆகி மூலந்தள்ளும் (இதனை ஒன்றுமில்லை என்று எண்ணிவிடாதே. இதை ஐசாந்திய மெச்ச கூறவர் பெரியோர்.)
(வை 601-62)

சிங்கி மாந்தக் கணம் - குறிகுணம்:-

உத்தியிலிருந்து ஒருவகைக் கூடு மேலெழும்பும் அதனால் நாவில் வெந்த புண்படும். அதன் பயனாகக் கடுமையான மேல்மூச்சும் இருப்பும் உண்டாகி உடல் முழுவதும் இன்ப கெட்சியடைந்து சுரம் ஏற்படும். மூச்சுத்தடைகள் ஏற்பட்டு மயக்கம் வரும். இந்நோய் குழந்தைகளைப் பதின்மூன்று வயது வரை வதைக்கும்.
(477-163), (476-77), (482-66)

சிங்கி மாந்தக் கணத்துக்கு முதலில் குடிநீர்:-

(முதலில்) வக்கொட்டை, நன்னாரிவேர், வெங்காயம், சம்பு, [illegible], கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், நாரத்தம்வேர், எலுமிச்சம் வேர், வேலைவேர், மாவிலங்கவேர், சிறுவாய் நெல்லிவேர், திப்பிச்சனை வேர், பாதசொர்த்தி, வெட்டிவேர், விடத்தலை காந்தி ஆகிய சரக்குகளை எடுத்துக் கொள்க. தண்ணீர் எடுத்து அனைத்தையும் போட்டுக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்க. இதனைக் கொடுக்க சிங்கி மாந்த கணம் நீங்கிப் போகும். (477-179), (476-68)

சிங்கி மாந்தக் கணத்திற்கு அஜதாதிக் குளிகை:-

அதிமதுரம், கோட்டம், ஏலம், சாத்திரபேதி, சன்பகப்பூ, மாசிக்காய், இலவங்கப்பூ இவ்வெடு பொருட்களையும் வகைக்கு 9 கி., எடுத்துப் பொடி செய்து கல்வத்திலிட்டுப் பின்னர் கோரோசனம் கூட்டிக்கொள்க. வெட்டிவேர் மாசிப்பத்திரிவேர், கருந்துளசி, விலாமிச்சம்வேர் ஓட ஆகிய நான்கு வகைச் சரக்குகளையும் ஒன்றன் பின் ஒன்றாக இட்டு ஒவ்வொன்றில் 6 மணி நேரம் அரைத்து 130 மி.கி. அளவு உண்டை செய்து நிழலிலுலர்த்திக் கொள்க. இதனை மாசிப்பத்திரி குடிநீரில் ஒருமாத்திரை வீதம் காலையிலும், மாலையிலும் கொடுக்க சிங்கி மாந்தக் கணம் நீங்கும். (482-66), (477-164), (476-77)

~~நெல்:- செண்பகப்பூ, கோட்டம், கடுகுரோகணி, கிராம்பு~~, விளாமிச்சம் வேர், ~~ஏரவெண்காயம்~~,

சித்திரக் கணையின் குணம்:-

குரல் கரகரப்பாக இருக்கும். இருமலேற்படும், கை, உடல், விரல், கால் ஆகியவை குளிர்ந்திருக்கும். உடல் மெலிந்து போகும். எரிச்சல் விழும், ஆகிய இவ்வித குணங்கள் ஏற்படின் அது சித்திரக் கணையாகும். (ஏடு 601-65)

சிலேத்தும கணத்தின் குணம்:-

உடல் முழுவதும் தினவும் சொரியும் உண்டாகும். அது உடம்பில் ஊறி கை, கால்களில் வீக்கம் உண்டாகும், வாய் நாற்றம் ஏற்படும், சுரமிருக்கும், மார்பில் சளி கட்டும், தொண்டை புகைந்து அதனால் இருமல் உண்டாகும், மேல்வாய் வெடித்துப் புண்ணுண்டாகும், எப்பொழுதும் களைப்பாக இருக்கும். இவைகள் சிலேத்தும கணத்தின் குணமாகும். (கை.பி. 98-167).(482-63).(476-603).
(477-132).(ஏடு 798-25)

எண்ணெய்:-

கோட்டம், செண்பகப்பூ, வெண்காயம், அரளி, குன்றி, கிராம்பு, விளாமிச்சை, கடுரோகணி, ஆகிய இவற்றை 5கி. எடுத்துக் கொள்க. நெய் நல்லெண்ணெய் ஆகியவற்றைச் சமமாக எடுத்து மருந்துச் சரக்குகளைப் போட்டு காய்ச்சி வடித்துக் கொண்டு காசெடை ( ) உள்ளுக்குக் கொடுக்க சிலேத்தும கணம் நீங்கும். (கை.பி. 98-167-168) (ஏடு 798-25), (527-40)

சுரக்கணத்தின் குணம்:-

உடம்பு வற்றிவிடும், கால், கை ஆகியவற்றில் நீர்கட்டிக்கொண்டு வீங்கி வழுமையாகக் காட்டும். தேகம் வெதும்பும், பல்லைக் கடித்து அலறும், தலை குளிர்ச்சியாக இருக்கும் இருமல் ஏற்படும், சுரமும் வரும். (ஏடு 601-33)

சுரக்கணத்துக்கு குடிநீர்:-

ஆடாதோடை, [illegible], அமுதவல்லி, [illegible], சுக்கு, திப்பிலி, நன்னாரி, முத்தக்காசு, இவற்றை சிந்தாமணி, நிலவேம்பு ஆகிய இவற்றை சமமாக எடுத்துக் கொள்க. இதில் திப்பலி, செவ்வியம், திப்பலிமூலம், [illegible] ( ) சிறுதேக்கு, அக்கரகாரம், சீரகம், கொத்தமல்லி, மிளகு, நெல் பொரி ஆகிய இவற்றை வகைக்கு 5கி. எடுத்து இடித்துப் போட்டு காய்ச்சி எட்டிலொன்றாகக் குறுக்கிக் குடிநீராக்கி நாளொன்றுக்கு குடிக்க சுரக்கணம் தீரும்.
(ஏடு 601-34)

சுரக்கணத்துக்கு தைலம்:-

வாழைப்பூ, கருங்காலி, நெல்லிப்பூ, தாழம்பூ, தாமரைப்பூ, தண்ணீர்விட்டான்கிழங்கு, கவளை, கொடுப்பை, கல்லாரை, கொவ்வை இலை ஆகியவற்றைச் சமமாய்க் கட்டிக் கொள்க. பசு நெய்யை 1.3லி. அளவு எடுத்துக் கொள்க.

சாதிக்காய், மாயக்காய், கல்நார், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், சாந்திரபேதி, சீரகம், கொடுப்பச்சை, வகுளாசி (நிலமரம், வேங்கை) ஆகிய இவற்றை 5கி. ஆக எடுத்து பொடித்துப்போட்டுக் கொள்க. வெங்காயத்தை 325மி.லி. எடுத்து சாறெடுத்து மேற்சொன்ன கலவையுடன் சேர்த்து அரைத்துக் கொள்க. இக்கலவையைக் காய்ச்சிக் குழந்தைக்குக் கொடுக்க சுரக்கணை நீங்கிப் போகும். (ஏடு 601-34-35)

<u>தனிச்சுரக்கணையின் குணம்</u>:-

மலம் சிக்கிக் கொள்ளும், கண்ணிலிருந்து நீர் கசியும், உடம்பு அனலாகக் கொதிக்கும், தலையில் நோவும் கண்கள் சிவப்பாக இருக்கும், தலை, வயிறு இவற்றில் அனல் கொதிக்கும் தாய்ப்பாலில் உணவில் நாட்டமின்றி உண்ண மாட்டார்கள், பலப்பல குணங்கள் ஏற்படும். தண்ணீர் மட்டும் அதிக மாகக் குடிப்பர். (ஏடு 601-36)

<u>குடிமருந்து</u>:-

கற்பூரவல்லி, கைப்பூடு, உகாய், வெங்காயம் ஆகியவற்றின் சாறுகளை எடுத்துக் கொள்க. அதைக் காய்ச்சிக் கொள்க. அதில் முலைப்பாலையும் சேர்த்துக் கொடுக்க தனிச்சுரக் கணை நீங்கிப்போகும். -(ஏடு 601-36)

இக்குடிநீரைக் கொடுக்கவுமறைச் சுரம் நீங்கிப்போகும். உடம்பில் ஏற்படும் கொப்புளங்கள் மாறிப்போகும். தனிச்சுரக்கணை நீங்கும். -(ஏடு 601-37)

<u>ரத்தச் சுரக்கணையின் குணம்</u>:-

உணவில் நாட்டமிருக்காது, தாகம் மிக உண்டாகும், சுரங்காய்ந்து உடம்பு மெலியும், வாந்தியெடுக்கும், தலைச்சிவேதப்படும், இருமல் உண்டாகும், வெளிவரும் ~~வெளிவரும்~~ மலம் கறுக்கும், இவையே ரத்தச்சுரக் கணையின் குணங்கள். (601-38)

<u>குடிநீர்</u>:-

சிறுதலை கண்டங்கத்திரி, ஆடாதோடை, இசங்கு, குப்பைமேனி, ஆகிய மூலிகைகளைப் பிடியாக எடுத்துக் கொள்க. இஞ்சி, உள்ளி, மிளகு, சீரகம், அரத்தை, சுக்கு ஆகிய சரக்குகளை 5 கி. எடுக்க. இவற்றை இடித்துப்போட்டு பிட்டவியல் செய்து பிழிந்து கொடுக்கில் ரத்த சுரக்கணை நீங்கிப்போகும். -(ஏடு 601-38)

<u>நெய்</u>:-

அவிப்பிரிவை, முயல் ஆகியவற்றின் இரத்தம், வல்லாரை, கொடுப்பைச் சாறு, முசுமுசுட்டை, குப்பைமேனிச்சாறு, பொன்னாங்கண்ணி, ஆகியவற்றை ஒன்று சேர்த்துக் கொள்க. அதில் அதிமதுரம், ஏலம், கிராம்பு, வாலுழுவை, உப்பமேனி, இலவங்கம் ஆகிய சரக்குகளை 5கி. எடுக்க. ஆவின் நெய் 1.3லி. தேன் 325மி.லி. எடுத்துக் கொண்டு அதனுடன் சேர்த்து காய்ச்சி அதனைக் காசெடை உள்கொள்ள சுரக்கணை, இருமல் போன்றவை விட்டுப்போகும். உடல் தெளிவாகும். (ஏடு 601-39)

சில சமயங்களில் பெருமிச்சு

<u>சுழி கணத்தின் குணம்</u>:-

வயிறு, ஈரல், போன்றவை புண்ணாகும். ~~தக்கொரு சமயம் ஜ்வரம்~~ ஏற்படும். சுரம் வந்தது போல வருந்தமுண்டாகி மயக்கமேற்படும். இக்கால் ஏற்படின் சுழி கணமென்று கூறுவர். -(ஏடு 941- 22)

<u>சுழிகைக் குறிகுணம்</u>:-

மூச்சுத்திணறல், குளிர் காய்ச்சல், உண்டாகும். கண் பஞ்சடையும், உடம்பிலுள்ள மூட்டுக்கள் எல்லாம் முடக்கினாற்போல் [illegible] நோகும். மலம் [illegible] வகையாக வெளுத்துக் கலங்கும்படி நேர்ச்செறிதல், தலை உச்சி பள்ளமாய் குழி விழும். வாந்தி, இருமல் ஏற்படும், மூலம், மார்பு. கழுத்து இவைகள் வீங்கும் வயிறு, ஈரல், நெஞ்சு, தொண்டை, நாக்கு, இவைகள் வெந்த முறைப்பால் குடிக்க முடியாமல் அலறி அலறி அழுதல், தாரை சிவலம் போல் உடம்பு சிவக்கும், கை, கால்கள் குளிர்ந்த சில்லென்றிருத்தல், வயிறு பொருமி உதல், மிகவும் அதிகமாகச் சுரங்காய்தல், வாயில் நுரையாகவும் கோழையாகவும், நீர் வெளிப்படல், நாவறல், கண் சொருகுதல் முகம் மஞ்சள் போல் நிறம் மாறல், மயக்கம், தலைதொங்கி நோதல் இவைகள் ஏற்படின் சுழிகணமாகும். (ஏடு 362-31). (ஏடு 941-24-25). (477-143). (ஏடு 612-4)

<u>உள்ளி குடிநீர்</u>:-

உள்ளியையும் வசம்பையும் சீந்திற் பட்டையையும் எடுத்து அவற்றைத் தனித்தனியாகப் பொடியாக்கி அப்பொடியில் 35கி. எடுத்து அதை 1.3லி. நீரில் போட்டுக் காய்ச்சிக் கொள்க. அதை 170 மி.லி.யாக வற்றியவுடன் இறக்கி அதை வேளைக்கு 2 சங்களவு காலை, மாலை ஆகிய இரு வேளையுமாக ஐந்து நாளைக்கு கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்ய சுழிகணம் குணமாகும்.

(ஏடு 169-37). (477-144). (ஏடு 362-32)

<u>சுழிகை காசத்திற்கு கந்தக சிங்கி குடிநீர்</u>:-

கண்டங்கத்திரி, முசுமுசுக்கைச்சமூலம், தூதுவளை, சிறுதிப்பிலி, ஆடாதோடைச் சமூலம் இவைகளை வகைக்கு 9கி. வீதம் எடுத்துக் கூட்டி அரிந்து சிறக்க அத்துடன் கந்தக சிங்கி, சீந்தில்கொடி வில்வப்பழம். பதிமுகம் [illegible], முதலியவற்றை இடித்துப் போட்டு 650 மி.லி. நீர்விட்டு 170மி.லி.யாகக் காய்ச்ச வேண்டும். அதை வேளைக்கு 15 - 30மி.லி ~~இரண்டு சங்கு~~ வீதம் காலை, மாலை இருவேளையுமாக 3 (அல்லது) 5 நாள் கொடுத்து வந்தால் சுழிகணம் காசம் தீரும். (477-147)

<u>ஈருள்ளிக்கற்கம்</u>:-

35கி. ஈருள்ளி, 35கி. துளசி எடுத்து பொடித்து அதில் 650 மி.லி. நீர்விட்டு 170மி.லி. வற்றச் செய்து குடிநீராக்கி அதில் 10கி. துளசிப் புண்ணாக்கைக் கரைத்துக் குழந்தைக்குக் காலையிலும், மாலையிலுமாக மூன்று நாள் கொடுத்தால் சுழி கணம் தீரும். (ஏடு 362-32). (ஏடு 941-25). (ஏடு 169-38)

(477-145)

அ அவரை, சுக்கு, தனா சங்கு, கடுகு, பொடுதலை, செம்முள்ளி ஆகிய இவற்றின் சாறுகள் வகைக்கு 170 மி.லி. எடுத்து 650 மி.லி. பசுவின் நெய்யில் கூட்டி 9கி. சீரகத்தைச் சுத்தமாய்ப் பசுவின் பாலில் அரைத்துக் கூட்டிக் காய்ச்சிக் காலை, மாலை இருவேளையும் மூன்று நாள் உச்சிக்கரண்டி வீதம் கொள்ள சுதிகனம் தீரும். (ஏடு 169-38).(477-145).(ஏடு 941-25)

குப்பைமேனி எண்ணெய்க் கற்கம்:-

குப்பைமேனிச் சாறு எடுத்து அதில் போதுமான உப்பை அரைத்துக் குழைத்துக் குழப்பிக் கொஞ்சம் வேப்பெண்ணெய் கூட்டிக் கலந்து வேளைக்கு 520 மி.லி. வீதம் காலை, மாலை இரு வேளையும் 3 நாள் உச்சிக்கரண்டி வீதம் கொள்ள சுதிகனம் தீரும். (477-145)

உடைக் கொழுந்து கதிர்ப்புட எண்ணெய்:-

உடைக்கொழுந்து, கண்டங்கத்திரிவேர், ஆடாதொடைவேர், கடுக்காய்த்தோல் ஆகிய இந்நான்கு பொருட்களையும் வகைக்கு 18கி. எடுத்துப் பொடி செய்து அதை 325மி.லி. முத்தெண்ணெயில் கலக்கிப் பத்து நாள் கதிர்ப்புடம் வைத்து காலை வேளை மட்டும் கொடுக்க வேண்டும். இதை 3 (அல்லது) 5 நாள் கொடுக்க சுதிகனம் தீரும். (ஏடு 362-32) -(477-144), (ஏடு 169-38)

குன்றிவேர் கதிர்ப்புட எண்ணெய்:-

குன்றி, சிறுகீரைப்பை, முருங்கை, சங்கு, வில்வம் ஆகிய இவ்வேர் வகைகளை வகைக்கு 10கி., எடுத்துப் பொடியாக்கிக் கொள்க. 325மி.லி. முத்தெண்ணெயில் கலந்து 10 நாள் கதிர்ப்புடம் வைத்துக் காலையில் மட்டும் 3 அல்லது 5 நாள் கொடுக்க சுதிகனம் தீரும்.
(ஏடு 362-32).(ஏடு 169-38).(477-144).(ஏடு 941-25)

முலைப்பால் எண்ணெய்:-

கடுக்காய்த்தோல், காட்டுமல்லிகை, நன்னாரி, உடைக் கொழுந்து, எருக்கு ஆகிய இவ்வைந்து பொருட்களும் வகைக்கு 9கி. வீதம் எடுத்து இவற்றை முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து 325 மி.லி. ஆமணக்கெண்ணெயில் கட்டிக் காய்ச்சி காலையில் மட்டும் தக்க அளவில் கொடுக்க சுதிகனம் தீரும்.
(ஏடு 362-52) (ஏடு 169-36),(477-145)

கடுக்காய் எண்ணெய்:-

கடுக்காய்த்தோல், காட்டுமல்லிகை, கற்றாழை, வெந்தயம், சீரகம், சாரணைவேர், எருக்கு ஆகியவற்றை வகைக்கு 18கி. எடுத்து அதை வெந்நீர் விட்டு நன்றாக அரைத்து அரைப்படி 650 மி.லி. ஆமணக்கெண்ணெயில் கலந்து பக்குவமாகக் காய்ச்சி வடித்து அதை உச்சிக்கரண்டியளவு வீதம் காலையில் மட்டும் மூன்று (அல்லது) ஐந்து நாள் கொடுத்தால் சுதிகனம் விட்டுப் போகும்.
(ஏடு 362-53) (477-146)

சுர எண்ணெய்:-

அவரிச்சாறு, அரிவாள்மனைச்சாறு, ஆவாரைச்சாறு, நச்சுக்கொட்டைச்சாறு, மயக்கொழுந்துச் சாறு, பொடுதலைச்சாறு, செம்முள்ளிச் சாறு ஆகிய இவைகளை வகைக்கு 170 மி.லி. எடுத்து ஒரு மண்சட்டியிலிட்டு அதனுடன் 650 மி.லி. பசுநெய் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுக எரித்துப் பக்குவமாக இறக்கிக் காலை, மாலை இருவேளையும் 3 (அல்லது) 5 நாள் கொடுக்க சுரம் தீரும்.

(477-146)

நந்தியாவட்டை எண்ணெய்:-

நந்தியாவட்டைவேர், நாய்த்துளசி வேர், சிவதை வேர், காட்டு மல்லிகை வேர் என்ற இவைகள் ஒவ்வொன்றின் வேரையும் புன்னைக்காயளவு அரைத்துக் கண்டங்கத்திரி, தூதுவளை, சிங்கி, மணித்தக்காளி, கொட்டைக்கரந்தை, குப்பைமேனி, கோவைக்கொடியிலை இவைகளின் சாறு வகைக்கு 650 மி.லி. எடுத்துக் கொள்க. ஆ 1.3 லி. விளக்கெண்ணெயை உடன் சேர்க்க. இவ்வெல்லாவற்றையும் கலந்து அடுப்பேற்றி பக்குவமாக எரித்து வடித்துக் குழந்தைகட்கு ஒரு தட்டொடை ( ) வீதம் காலையிலும், மாலையிலும் 3 அல்லது 5 நாள் கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்ய சுரம் தீரும். தாய் இச்சாபத்தியம் காக்க வேண்டும்.

(477-146)

சுழிமாந்த எண்ணெய்:-

குட்டிவேல், முள்ளி, அம்மையார் கூந்தல், ( ) தேங்காய், மிளகரணை வேர், தகரை ஆவாரை, முடக்கொற்றான் குப்பைமேனி, நெருஞ்சில், செப்பு நெருஞ்சில், சிறுபுள்ளடி, வாத்தின் பூடு, சாதிக்காய், தாமரை இலையின் வகை பத்து ஆகியவற்றுக்கட்டு அனைத்தையும் நசுக்கிக் கொள்க. எண்ணெயை அதன் மீது விடுக்கவிட்டு பத்து நாள் வெயிலில் வைத்து அதனைக் குழந்தைக்கு நோயின் தன்மைக்குத் தக்கஅளவு கொடுக்க சுழிசுரம் குணமாகும். (ஏடு 169-35)

சுழிமாந்த எண்ணெய்:-

ஈருள்ளி, பெருஞ்சீரகம், கடுக்காய், நாட்டுக் கருஞ்சீரகம், இவைகளைச் சமமாக எடுத்துக் கொள்க. கச்சராப்பாலையும் அதனுடன்சேர்த்துக் கொள்க. இதனை எள்ளெண்ணெயில் சேர்த்தெரித்து சுழிசுரம் உள்ளவர்களுக்கு அளவறிந்து கொடுக்க அந்நோய் நீங்கிப்போகும். -(ஏடு 169-37)

சுழிமாந்த எண்ணெய்:-

1.3 லி. மத்தின் ஆவாக்கு எண்ணெய், தகரைச்சாறு 1.3லி., இதை ஒன்றுசேர்த்து நில்நாயுருவிவேர், தைவேளைவேர், நாய்வேளைவேர், கொடிஞ்சிவேர், மூக்குரட்டைவேர், இவ்வ இவைகளின் சரக்குகளும் வகைக்கு ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்துக் கலக்கிக் கொள்க. வசம்பு, ஏலம், கஸ்தூரி மஞ்சள், வாய்விடங்கம், வகைக்கு 20கி. வெள்ளுள்ளி 70கி., பெருஞ்சீரகம், வெந்தயம், கருஞ்சீரகம், வகைக்கு 35கி., எடுத்து எல்லாவற்றையும் நசுக்கி அரைத்துக் கலக்கி மண்சட்டியில் வைக்க. அனைத்துச் சரக்குகளை

-யும் ஒன்றா சேர்த்துச் காய்ச்சி வடித்து குழந்தைக்குக் காலையில் மாத்திரம் 3 அல்லது 5 வரை புகட்டிவர சுரம் நீங்கும். -(477-78-79)

<u>சுரத்திற்கு சண்பகப்பூ எண்ணெய்:-</u>

பச்சைக்காசெடை சண்பகப்பூ, ஒருகாசெடை வெற்றிலைப்பத்திரியையும், அரைக்-காசெடை கோரோசனையையும் எடுத்துப் பொடியாக்கி 1.3வி. விளக்கெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி பக்குவ பாகத்தில் இறக்கி காலையில் [illegible] வீதம் கொடுத்து வந்தால் சுரம் நீங்கும். (ஏடு 169-37), (477-144) (527-42)

<u>சளி கனத்திற்கு மருந்து:-</u>

வில்வப்பத்திரி, துத்தி, வெங்காயம், பெருங்காயம், வெந்தயம் ஆகிய-வற்றைச் சமபங்கெடுத்து நன்கு இடித்து தண்ணீர் வார்த்துக் கொதிக்கவிட்டு அதில் சீரகத்தைப் போட்டு குடிநீராக்கிக் குடிக்க சுரம் நீங்கிவிடும்.

(ஏடு 941-23)

<u>(கர்ப்பக்கணம்) குளிர்கணத்தின் குறிகள்:-</u>

சுவாசம் அதிகமாக எழும்பும், இருமல் அதிகமாக உண்டாகும். நெஞ்சடைப்பு, வாய் மிகவும் குளிர்ந்திருக்கும். தொண்டை, நாக்கு, வெந்து சோர்வடையும். பொங்கி எரிப்பட்டு வயிறு உப்பிக் கொள்ளும். குழந்தை முலைப்பாலை உண்ணாது. முகம் மிகவும் நாற்றமடிக்கும். உடல் சுருங்கும் நாக்கு, உதடு ~~[illegible]~~ வெந்துபோகும். தாய்ப்பால் அருந்தாது. நீர் எரிச்சலுண்டாகி சிவப்பாகி விழும், மலம் பச்சையாகிருக்கும். தரைத்தும் விழும், வயிற்றில் வெப்பம் அதிகமாகும் [illegible] குறிகள் ஏற்படின் அது கர்ப்பக்கணமாகும். (வை.பி.போ.-183), (வை.பி. 98-173) (476-81), (482-68)

<u>குளிர்கணத்திற்கு எண்ணெய்:-</u>

தாளி, நிலத்தாமரை, வில்வம், சாதிபத்திரிவேர், உள்ளி, கஞ்சாங்கோரை ஆகிய மூலிகைகளின் சாற்றைத் தேவையான அளவு எடுத்துக் கொள்க. விளக்கெண்ணெய் 1.3வி. எடுக்க. தேன் 8 வி. எடுத்து கலக்க. இவைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து அடுப்பேற்றி காய்ச்சி பதமாக வடித்துக் கொள்க. அதனை மூன்று நாளும் 8வி. அளவு உள்ளுக்குக்கொடுக்க குளிர்கணம் தீரும். -(வை.பி. 98-173)

<u>எண்ணெய்:-</u>

சிற்றாமணக்கெண்ணெய் 325மி.லி. எடுக்க. அதிமதுரச்சாறு நிலத்தாமரைச் சாறு, 160மி.லி. எடுக்க கஞ்சாங்கோரை, மாசிப்பத்திரியையும் எடுத்துக் கொள்க. இவற்றை ஒன்று சேர்த்துக் காய்ச்சி கருகு பதம் வரும் போது சுக்கு, மிளகு, திப்பிலி வறுத்து இடித்து உடன் சேர்க்க 8வி. தேனையும் கலந்து நன்றாகக் கிண்டி கருகு பதத்தில் இறக்கிக் கொள்க. அதனைக் காசெடை இரண்டு எடுத்து குழந்தையின் தன்மை அறிந்து கொடுக்க. இந்த மாதக் குழந்தைக்கு எண்ணெய் ஐந்து நாள் மட்டும் கொடுக்க. ஒரு வருடம் ஆன குழந்தைக்கு ஒரு மண்டலம் (40 நாள்) கொடுக்கக் குளிர்கணம் நீங்கும். மூன்று வருடம் வரை இக்கணம் தொடரும்.

(வை.பி.போ.-183), (476-82 (477-143) (ஏடு 424-19)

மருந்து:-

வல்லாரை, வெந்தயம், வெங்காயம் ஆகியவற்றை சமமாக எடுத்து ஒன்றுசேர்த்து நன்கு இடித்துக் கொள்க. அதற்கேற்ப நீர் சேர்த்து எட்டிலொன்றாகக் காய்ச்சி கொடுக்க கெர்ப்பசனம் நீங்கிப் போகும். -(ஏடு 424-19, 20)

குறி குணம்:-

உடல் மிகவும் பலவீனமாக இருக்கும். உடம்பு முழுதும் வெப்பமாக இருக்கும், கறுத்துக் காட்டும், குரல் குன்றி சொத்தல் ஏற்பட வரும்.

-(ஏடு 601-50)

நூ_ம்மணிணைக்கு_நெய்:-

காராவின் நெய் வகைக்கு 1.3லி. எடுத்துக்கொள்க. கடுக்காய், மஞ்சள், இஞ்சி, திப்பிலி, நெல்லி, உள்ளி, ஆகியவற்றை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. பிரமிச்சாறு 325 மி.லி. எடுக்க. 1.3லி. நெய் எடுத்துக் கொள்க. மேற்கூறிய அனைத்தையும்சேர்த்து காய்ச்சி மெழுகு பதம் வரும் போது வடித்துக் கொள்க. அதனை 5கி. அளவு கட்டியாய் எடுத்து ஏழு நாட்கள் அப்போல்தே உட்கொள்ள ஈழை, மாந்தம் ஆகியவை வெளியேறி நாள்கு கணம் நீங்கிப்போகும்.

(ஏடு 601-50)

குறிகுணம்:-

தெத்கத்திக்குறிக்கு_எண்ணெய்:-

வசம்பு, ஓமம், வெள்ளுள்ளி, பெருங்காயம் ஆகிய இந்நான்கையும் வகைக்கு 9கி. எடுத்து பொடித்து 675 மி.லி. இலுப்பெண்ணெயில் கலக்க. அதனை 25 நிமிடம் வரையிலும் தண்ணீரில் கொதிக்க வைத்தெடுக்க. பிறகு அந்தச் சட்டியின் வாயில் அடைப்பட ஒருநாள் காப்பிடம் வைத்துக் கருகுடன்எடுத்துக் கொள்க. குழந்தையின் நிலை அறிந்தும் தன்மையறிந்தும் கொடுக்க தெத்கத்தி கணம் நீங்கிப் போகும்.

தாய்க்கும் குழந்தைக்கும் மிகுந்த நீரும், சோமம் பத்தியம் வைக்க வேண்டும்.

(சு. 482-78). (சு. 477-175)

தெத்கத்த_மாந்த_கணத்துக்கு_எண்ணெய்:-

வெள்ளிகு, ஏர் அலவை, சங்கங்குப்பி வேலிப்பருத்தி, புரசு, குப்பைமேனி ஆடாதோடை, சாரணை, பூலா, நொச்சி, பிரமி, வேளை, கற்றாழை ஆகியவற்றுள் மூலிகைகளின் வேரை இடித்தெடுத்தசாறு 1.3லி எடுக்க. விளக்கெண்ணெய் 2.6லி. எடுக்க. சீரகம், புழு, திரி, புண்டு, சோரோசனை, அப்பகப்பு, வசம்பு, சாதிக்காய், நாகதிக்காய் ஆகிய ஏழ்மருந்துச் சரக்குகளை 17½கி. எடுத்து சாறுவிட்டு நன்றாக அரைத்து எண்ணெயிற் கலந்து கொள்க. நன்றாகக் காய்ச்சிப் பக்குவபதத்தில் இறக்கி ஒரு கரண்டி அளவு கொடுக்க தெத்கத்த கணம் நீங்கிப்போகும்.

(சு. 476-104)

எண்ணெய் :-

வேப்பெண்ணெய் 675 மி.லி., வெளிப்பருத்தி, குப்பைமேனி, வெள்ளெருக்க பழுப்பு ஆகிய இலைகளின் சாறு வகைக்கு 325 மி.லி. எடுக்க. வெள்ளெருக்கு, நொச்சி முருங்கை இலைகளின் பட்டை வகைக்கொரு பிடி ஒருக்கலைப்படி 35கி., வசம்பு, அரத்தை வகைக்கு 4கி. எடுத்து இதைத் தட்டி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி ஒரு கரண்டி வீதம் 3 நாள் கொடுக்க தெற்கத்து கனமாந்தம் தீரும். (482-78)

திரம்பக்கணம் :-

வயிற்றில் அதிகமாய் வலியுண்டாகும். நீராகவும் சீதமாகவும் இரத்தமாகவும் பச்சையாகவும் மஞ்சள் போலவும் கழிச்சல் ஏற்படும். கண்ணில் நீர் வடியும். பீனசமும் தள்ளும். கறுப்பாகி உளைச்சலுடன் வாடி இருக்கும். (கை.பி. 98-180)

நீர்க்கணையின் குறிகுணம் :-

கண்ணின் நிறம் வேறாகும். மருட்சியாகப் பார்க்கும். உச்சியில் வலிக்கும். கண்டத்தில் மாறுபாடுண்டாகும். குரல் கம்மி வார்த்தைகள் குழறும். முகத்தில் வீக்கமும் வேர்வையுமுண்டாகும். வயிறு சூடாக இருக்கும்.

(ஏடு 941-31) (ஏடு 362-38)

தலையில் நீரேறிக் கனமாகக் கொள்ளும், சளி பிடித்தாற் போல் நீரேறிக் கொள்ளும். உடம்பு, முலை இடத்தில் நீர் கோர்த்துக் கொண்டு நடக்க முடியாத நடவும் முடியாது. மலமும் சிறுநீரும் விசக்கும், வாயில் நீரூறி அருவருப்பையுண்டாக்கும்.

(ஏடு 601-67)

அதிக நீர் வேட்கை ஏற்படும். உடலில்/கை, கால்களில் வேர்வை அதிகமாக ஏற்படும். உடனே வெதுப்பேற்படும். கண்கள் பார்க்க முடியாத படி தாழும். நாக்கு, வாய் இடைகளில் நீர் வரண்டுபுண்ணாகும். நாவெடிப்பு, நீராகக் கழிதல், முகத்திலும் புறங்கை, புறங்காலில் அதிக வியர்ப்புக் காணும் ஆ மயக்கம் உண்டாகும். உடலில் சோர்வு ஏற்படும்நீங்காத வயிற்று நோயுண்டாகும். சோகமாக இருக்கும். முதலில் சிறு சூடுண்டாகி பின் அச்சுரமானது அப்படியேவிட்டு விட்டுக் காயும். ஆகிய/இக்குறிகுணங்கள் நீர்க்கணையினுடையவை. (பு. 477-141), (பு. 476-78)

ணை/ சாரப்க்குடிநீர் :-

சாரணைக்காய், மூக்கிரட்டைக்கமூல், பொடுதலைக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கைசிங்கலை, சீரகம் ஆகிய சரக்குகளை வகைக்கு 4 கி. எடுத்து இடித்து/ சட்டியிலிட்டு 170 மி.லி. தண்ணீர் விட்டு 65மி.லி. ஆகக் குறுகக் காய்ச்சிக் கொடுக்கவும். இவ்விதம் வேளைக்கு வேளை புதிதாகப் போட்டு 3 நாளைக்கு காலையிலும், மாலையிலும் கொடுத்து வந்தால் நீர்க்கணம் தீரும்.

(ஏடு 362-38) (477-141) (482-67)

<u>ஒதம்:-</u>

பூ சட்டடியில, ஆவாரைவேர், உள்ளி விதைகளை எடுக்க, கொடுப்பை, கொடோதோலடை, மருதந்தோல், கடுதோல், கள்ளிப்பழை, நாவலை, ஆகிய இவைத்-தின் சாறு வகைகளை 675 மி.லி. எடுத்துக் கொள்க.

ஏலம், அதிமதுரம், சாதிக்காய், கோட்டம் , சதகுப்பை , கொத்த-மல்லி, சீரகம், கிராம்பு, கருஞ்சீரகம், திரிகடுகு, இலவங்கம், ஆகிய இவற்றை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. நன்றாக அரைத்து நல்லெண்ணெய் 1.3லி எடுத்து ஒன்று சேர்த்துக் காய்ச்சி நன்றாகக் காய்ச்சி நீர்க்கனை உள்ள குழந்தைகளுக்கு கொடுக்க நீங்கிப்போகும். (ஏடு 601-67-68)

<u>நீர்க்கனத்திற்கு மருந்து:-</u>

ஆல், ஆவாரை, வெட்பாலை, கருவேல் ஆகிய இவைகளின் தோலுரித்துப் பட்டை அகத்திப்பட்டை, தென்னம் மொக்கு, இவைகளைச் சம அளவு எடுக்க. சுக்கு அதிமதுரம், கிராம்பு, சாதிக்காய் இவைகளைத் தீயில் வாட்டிக் கொள்க. பொரித்த பொடிக்க வாயில் பசும்பால் எடுத்துப் பொடித்துக் கொள்க. மேற்கண்டவற்றை ஒன்று சேர்த்துப் போட்டு கஷாயம் எட்டிலொன்றாகக் காய்ச்சிக் குடிக்க நீர்க்கனம் நீங்கிப்போகும். -(ஏடு 941-31-32)

<u>நீர்மாந்தகணம் குறிகுணம்:-</u>

மூக்கில் நீர் வடியும், இருமல் இருக்கும், விட்டு விட்டு காய்ச்சல் இருக்கும் வயிறு பொருமி இரையும், பலவீனமாகப் பேதியாகும், கண் சொருகும், உடம்பு முகம் சோர்ந்து காணும், தலைபுரட்டலும் மயக்கமுண்டாகும் இக்குறிகுணங்கள் காணப்பட்டால் அது நீர்மாந்த கணமாகும். -(477-142)

<u>நீர் மாந்த கணத்திற்கு அமிர்தாதிக் குளிகை:-</u>

அதிமதுரம், சண்பகப்பூ, ஏலம், கோரோசனம், சாத்திரபேதி, வெட்டிவேர், கோட்டம், மாசிப்பத்திரி, விலாமிச்சம் வேர், ஆகிய இவைகளைச் சரியளவு எடுத்து இடித்து ஆடாதொடைச் சாறு விட்டு 3 மணி நேரம் அரைத்து 130 மி.கி. அளவு மாத்திரை செய்து வேளைக்கு ஒரு மாத்திரையாக முலைப்பாலில் கலந்து காலை, மாலையுமாக மூன்று நாள் கொடுக்கவேண்டும். அவ்விதம் கொடுத்து வந்தால் கணத்தால் பெருநீர், மாந்தகணம் நீங்கிப் போகும்.

(477-142)

<u>பட்சிக்கணம் குறிகுணம்:-</u>

உடல் வற்றிப்போகும், கண்ணில் சக்கரம் (வெள்ளைப் பூ) உண்டாகும். அடி நன்றி கறுப்புடன்சலம் விழும், வயிறு இரைச்சலும், இத்தகைய குறிகுணங்கள் ஏற்படில் அது பட்சிக் கணமெனப்படும். (ஏடு 601-62)

செண்பகப்பூ மாத்திரை :- செண்பகப்பூ, வால்மிளகு, உள்ளி, ஓமம், அசம்பு கிராம்பு இவற்றை வகைக்கு 5 கி எடுத்து பொடித்தவைச் சாற்றால் 1½ மணி நேரமரைத்து சுண்டைக்காய் அளவு மாத்திரை செய்து கொள்க. நொச்சி, துளசி, மொசுமொசுக்கை ஆகிய மூலிகைகளின் இலைகளை வகைக்குப் பிடி எடுத்து இடித்து பிட்டவித்து சாறு பிழிந்து அவற்றை அச்சாற்றில் ஒரு மாத்திரையை அரைத்துக் கொடுக்க பாண்டு நீங்கும். (527-40)

பாண்டு கணம் குறிகுணம்:-

உடல் வெளுத்துப் போதல், நடக்கப் பாதம் தங்காது, நெஞ்சம் [illegible] தோன்றும். உடல் நிறம், மொழி ஆகியவை வேறுபாட்டடையும், தூக்கம் வரும், கண் வெப்பமாகவிருக்கும், இத்தகு குறிகுணங்கள் பாண்டு கணத்திற்குடையவை.

(ஏடு 601-69)

பித்தகணத்தின் குறிகுணம்:-

உடல் தகதகவென எரியும், நாளாக ஆக உடலுலரும், மார்பிடிக்கும், நாக்கிலும் கடைவாயிலும் புண்ணுண்டாகும், சுரமிக்கும், அதனால் உடல் எரியும் மஞ்சள் நிறமாய் வயிறு மலம் கழியும், மயக்கம் அடிக்கடி உண்டாகும். தலை கனத்தின் கிறுகிறுப்புமிருக்கும், இவையனைத்தும் அழல் (பித்த) கணத்தின் குறிகுணங்கள்.

(482-63), (477-132), (476-60)

[illegible] ஏற்படும் (ஏடு 7313-22), (ஏடு 798-24)

பித்தகண - குறிகுணம்:-

உடலில் வெறுப்பாய் இருக்கும், உடல்வெளுக்கும், வாய் கசக்கும், வயிறு பொருமி குத்தி வலிக்கும் குடலைப்புரட்டியெடுக்கும், வாந்தி ஏற்படும், வயிறு கடாவி-க்கும் உடலும் கடாவிருக்கும். (ஏடு 435-44)

பித்தகணத்துக் குடிநீர்:-

முத்தக்காசு, வில்வவிலை, முடியோர்கூந்தல், அசி, வல்லாரை, கொடுப்பை, மருதம்தோல், நந்தைச்சூரிவேர் ஆகிய மூலிகைகளின் வேர்களை வகைக்கு ஒரு கைப்பிடியளவு எடுக்க. ஏலம், சீரகம், சுக்கு, செண்பகப்பூ, கோட்டம் அதிமதுரம், விளாமிச்சு, சிறு தேக்கு, ஆகிய சரக்குகளை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. அனைத்தையும் பொடித்து தண்ணீரில் கலந்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்க பித்தகணம் நீங்கிப் போகும். (ஏடு 435-44-45)

பித்தகணத்துக்குக் குடிநீர்:-

சிறுதேக்கு, வாய்விடங்கம், கால் விரை, கடுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, இலவங்கம், தாளிசக்கோலம், கசகசாப்பால் ஆகியவற்றை வகைக்கு 9கி. எடுத்துக்கொள்க. இச்சரக்குகளைப் பொடித்துக் கொள்க. 2.6லி தண்ணீர் எடுத்து காய்ச்சி எட்டொன்றாகக் குறுக்கிக் கொடுக்கப்பித்தகணம் விட்டோடும்.

(572-51)

இரண்டத்தைலம்:- ஆமணக்கெண்ணெய் 165 மி.லி எடுத்து அதில் கருஞ்சீரகம் கடுகுரோகணி, காட்டுமல்லிகையிலை, ஈரவெண்காயம் இவற்றை வகைக்கு 5 கி எடுத்து இட்டுப்போட்டு நன்கு காய்ச்சி 5-10 மி.லி அளவெடுத்து தாய்ப்பாலில் கலந்து கொடுக்க பித்த கணம் நீங்கும் (527-39-40)

பித்தகணத்துக்கு நெய்:-

பொன்னாங்காணி, சிறுகீரை, சிலசி, மாதளை, கூவை, மொசுமொசுக்கை, வல்லாரை, தாமரை, அமுகவல்லி ஆகிய இவற்றின் சாறுகளை வகைக்கு 325 மி.லி. எடுத்துக் கொள்க. வெங்காயத்தின் சாற்றினை 325 மி.லி எடுக்க.

சுக்கு, ஏலம், சன்னலவங்கப்பட்டை, திரிப்பி, சாதிக்காய், மாயக்காய், அரத்தை, வசுவாசி ( ) அதிமதுரம், சாத்திரபேதி, சதகுப்பை, நெல்லி, க்ஷாரபருப்பு ஆகிய இவற்றை வகைக்கு 5 கி. எடுக்க. மேற்சொன்ன சாறுகளின் கலவையில் இம்மருந்துச் சரக்குகளை அரைத்துக் கொள்க பிறகு 1.3லி. நெய்யைக் கூட்டி காய்ச்சிக் கொள்க. அதனை மெழுகுபதத்தில் வடித்துக் கொள்க. அதில் சிறிதிட்டு பித்த கணையுள்ளவர்க்குக் கொடுக்க நீங்கிப் போகும்.

(ஏடு 601-35-36)

எண்ணெய்:-

கடுக்காய், வெங்காயம், நீலி, கூவிளைவேர், ஆகிய இவற்றை வகைக்கு 15கி. எடுத்துக் கொள்க. விளக்கெண்ணெய் 1.3லி. எடுக்க மேற்சொன்ன சரக்குகளை நீர்விட்டரைத்துக் கொள்க. பிறகு எண்ணெயில் கலந்து காய்ச்சி இறக்கிப் பதமாய் வடித்துக் கொள்க. அதனைக் காசெடை ( ) குழந்தைக்கு கொடுக்க பித்த கணம் நீங்கிப்போகும். (கை.பி. 98-167), (ஏடு 798-24)

(ஏடு 7313-22)

பிரளிகணம் - குறிகுணம்:-

வயிறு பொருமும், வீங்கும், ஏப்பமுண்டாகும், சில சமயம் மலச்சிக்கலேற்படும். சில வேளை இடித்தமாவைப்போல கழியும். உடல் புண் போல் நோகும். உடலில் அங்கங்கு துடிக்கும். அத்துடன் துடித்துத் துடித்து மயங்கி அழும், தவிக்கும், குடலைப் புரட்டி வலிக்கும், பால் உண்ணாது, உடம்பு வெளுத்துக் கெடுக்கும், வாயுவும் மேல்மூச்சுண்டாகும், கண்கள் கழலும், மனம் திகைக்கும் உடல் இளைக்கும், அடிக்கடி முக்கும், மூக்கிலிருந்து முத்துப்போல் நீர் வடியும், இத்தகைய குறிகுணங்கள் பிரளி கணத்திற்குரியவையாகும். (482-69), (கை.பி. 98-174-175)
(477-142), (476-82-83)

முகத்தில் மஞ்சள் போல் மஞ்சளுண்டாகும், மலம் கட்டும்.
(கை.பி. 98-174-175)

தும்மட்டிக்காயெண்ணெய்:-

1.3லி. சித்தாமணக்கெண்ணெயில் 4 தும்மட்டிக்காயையும் 2.6 லி. வெங்காயத்தையும் சிறுக அரிந்து போட வேண்டும். அத்துடன் மாசிக்காய் பணவெடை ( ) கருஞ்சீரகத்தையும் அரைக்கால் பணவெடை ( ) கடுகுரோகணியையும், மனோசிலைப் பணவெடை ( ) கஸ்தூரி மஞ்சளையும் சேர்த்திடித்துப் பொடியாக்கிப் போட்டுக் கொள்ள வேண்டும். பிறகு அடுப்பேற்றிக் காய்ச்சிப் பதமாக இறக்கி நோய்வன்மைக்குத் தக்க அளவு தட்டெடை ( ) (அல்லது) 16மி.லி. அளவு எடுத்

-காலையில் மட்டும் 3 நாள் கொடுக்க வேண்டும். இவ்வெண்ணெயால் கழிச்சலாகும் மாமிசம் இறைச்சி கொடுக்கக்கூடாது. பத்தியம் கொள்ளல் வேண்டும்.

(476-83), (477-143), (482-69)

பிரளி கணத்திற்கெண்ணெய்:-

சிற்றேரண்டெண்ணெய் 1.3லி. எடுக்க. பேய்க்குமட்டிக்காய் 4, வெங்காயம் 2 எடுத்து இடித்துப் போடுக. கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றை வகை மாகாணி பலம் (←→) எடுக்க. கடுக்ரோகணி 4½ பலம் எடுத்துக் கொள்க. இவற்றை பொடித்து மேற்சொன்ன எண்ணெயிலிட்டுக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது இறக்கிக் கொள்க. அதனைத் தட்டைட ←→ 3 நாள் அந்தி சந்தி கொடுக்க பிரளி கணம் நீங்கும் கஞ்சி குடித்தல் பத்தியம். (கை.பி. 98-175-176)

பிறக்கணம்:-

வயிறுப்பி உப்பி பச்சைநிறமாவது, கட்டியும் நீருமாகவாவது, வெள்ளைநிறமாகவாவது கழியும், நன்றாகத் தோய்ந்த தயிர் போல வெள்ளை நிறமாகவாவது கழியும், நாசிகம் அதிகமாகும். பால் நன்றாகக் குடிக்கும் பிறகு அதைக் கக்கிவிடும், உடல்காயும், கண்சொருகும், கண்கள், கால்கள் சில்லென்றாகிவிடும், தலைபுரட்டல் ஆகியவை திரிக்கணத்தின் குறிகுணங்கள். (477-151) - (476-83)

பிறக்கணத்திற்கெண்ணெய்:-

வல்லாரை, கோழியவரை, கஞ்சாங்கோரை, சாலக்கிப்பூண்டு, ஒன்றைப் பேய்மிரட்டி, இரட்டைபேய்மிரட்டி, குடசி, சிறுபுள்ளடி, ஆகிய மூலிகைகளின் சாறுகளை எடுத்துக் கொள்க. சாற்றின் அளவாகவே சிற்றாமணக்கெண்ணெயை எடுத்துச் சேர்க்க அதில் உள்ளி, கருஞ்சீரகம், வசம்பு ஆகிய சரக்குகளை வகைக்கு 5கி. எடுத்து இடித்துப் பொடித்து அதில் சேர்த்து காய்ச்சி காசெட ←→ மூன்று நாள் காலைக்குக் கொடுக்க பிறக்கணம் நீங்கிப் போகும்.

(477-152) (476-83-84), (482-69-70), (482-69),
(482-69), (476-83-84)

பிறக்கணத்திற்கெண்ணெய்:-

வல்லாரை, கோரியவரை, சாலகியிலை, வேளை, தும்பை, நெருஞ்சில் பெருட்டை பிநாறி, இரட்டை பேய்மிரட்டி, உப்பிலிக்கொடி, சிறு புள்ளடி ஆகியவற்றின் சாறுகளை 280 மி.லி. எடுத்துக்கொள்க. ⊗ எண்ணெயையும் சாற்றையும் சேர்த்து மருந்துச் சரக்குகளின் பொடியைக் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ளவும். (ஏடு 619-9)

பேராமகணம் எண்ணெய்:-

தும்பை, தொழுதலை, கொடிஞ்சி ஆகியவற்றின் வேர், சீரகம், அதிமதுரம், இந்துப்பு. திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 5கி. எடுக்க. பசுவின் மோர் 1.3லி. எடுத்து அதில் மேற்சொன்னவற்றை அரைத்துக் கலக்கி காய்ச்சிக் கொள்ள பேராமக் கணம் நீங்கிப் போகும். (கை.பி. 98-182)

⊗ வசம்பு கருஞ்சீரகம் வெண்டாலுச்சத்திர ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுத்துக்கொள்க. எண்ணெய் 280 மி.லி. எடுத்துக் கொள்க.

(மகாரக்கனம்) மகாரகனம் குறிகுணம்:-

முகம், புறங்கால், பிறங்கை இவைகள் வீங்கியிருக்கும், வீக்கம் அமுக்கம் குழிவிழுக்கும். உறங்க கண்களும்வெளுத்துக் காணும். நஞ்சுண்ட போன்ற மயக்கம் உண்டாகும். உடம்பில் மந்தமாகச் சுரம் ஏற்படும். நாவும்உதடும் வெடித்துப் புண்ணாகும். இவைகள் மகாகனத்தின் குறிகுணங்களாம்.

(வை.பி. 98-174) (482-69) (476-82), (477-147)
(ஏடு 941-23), (ஏடு 362-29)

மகாகனத்திற்குச் சிகிச்சை வேர்க்குடிநீர்:-

சிறுகாஞ்சொறிவேர், விட்டுணுக்கிராந்திச்சமூலம், கீழாநெல்லிச்சமூலம், சிறுபீளையிலை, பசுமுட்டை பீநாறியிலை, சீந்திற் கொடி, ஆடாதோடையிலை. இவற்றின் இலை வகைகளை வகைக்கு 1.3கி. எடுத்துக் குகை அரிந்து இளவறுப்பாய் வறுத்துக் கொள்க. சீந்திற்கொடி 9கி. சிறுசறை வேர் 9கி., எடுத்து நறுக்கிப் போட்டு 650மில்லி. தண்ணீர் விட்டு 85 மி.லி. யாகக் காய்ச்சி காலையிலும், மாலையிலுமாக 3 (அல்லது) 5 நாள் கொடுத்தால் மேற்படி மகாகனம் நீங்கிப் போகும். (வை.பி. 98-174) (482-69) (476-82) (477-147)
(ஏடு 941-23), (ஏடு 362-29)

மகேந்திரகனையின் குறிகுணம்:-

மாலைக்கண் போல் தோற்றமளிக்கும். மதியத்தில் மந்தமாக இருக்கும். சீதக்கழிச்சல் ஏற்படும், சோர்வாக இருக்கும், கண்ணில் நீர் வடியும், வரிவிழும். உடல் இளைக்கும். உடல் காய்ந்து சுரம் வரும், கண்கள் பாழாகி விடும், வயறு மிகவும் பருக்கும், கருவுசிக்கு தீர்க்க பிறை போல வளர்ந்துவரும், சீக்கிரம் வந்தால் மரணம் ஏற்படும். (ஏடு 601-45-46) (ஏடு 601-59)

மகேந்திர கனைக்கு நெய்:-

மகிழம்பட்டை, வில்லை, நன்னாரி, கருவேலிலைப்பட்டை, சித்தாமுட்டியின் வேர், ஆகிய இவர்றை 35கி. எடுத்துக் கொள்க. இவற்றை இடித்துச் ஜலத்தில் நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி எடுத்துக் கொள்க. துளசி, கீழாநெல்லி தண்ணீர் விட்டான், நற்சோலை, கொடுபவை, வல்லாரை, விஷ்ணு பழம்பாசி ஆகிய மூலிகைகளின் சாறு 325மி.லி. எடுத்துக் கொள்க. மேற்கூறிய குடி நீரையும் சேர்த்து கொள்க.

கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, சீரகம், மதுரம், கல்நார், திப்பிலி, ஆகிய சரக்குகளை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. இவற்றை பொடித்துக் கொள்க. நெய் 1.3கி. எடுக்க. அனைத்தையும் ஒன்று சேர்த்து காய்ச்சி மெழுகு பதமாக ஆகிவரும்போது இறக்கி காசெடை கொடுக்கமகேந்திரகனை நீங்கிப் போகும்.
(ஏடு 435-40-41-59)

குணக்கு நெய்:-

மாதளை இலையும் பிஞ்சும், அத்தி, ஆல் மொட்டுகள், நா தளை, இலகி, வல்லாரை, பருப்பிஞ்சு, பழம்பாசி, கொடுப்பை, மொசுமொசுக்கை, நத்சோளை, தண்ணீர்விட்டான் ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 325 மி.லி. எடுக்க. மதுரம், சாதிக்காய், சீரகம், சாதிபத்திரி, ஏலம், கல்நார், கெருடப்பச்சை, ஆகிய இவற்றை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. நெய் 1.3லி. எடுக்க. அனைத்தையும் ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது வடித்துக்கொள்க காசெடை கொடுக்க தீரும். (எடு 435-41-42)

மந்தாரகனம்:-

கனமும் மாந்தமும் ஒன்றுசேர்ந்தால் மாலை நேரங்களில் சுரம், மயக்கம் விடாமேல்மூச்சு, வயிறுப்புதல் எனும் குறிகள் ஏற்படும். இவை மந்தார கனத்தினுடைய வையாகும். (பு. 476-87) (477-153)

மந்தாரகனத்திற்கு நாயுருவிவெண்ணெய்:-

நாயுருவி, கரிசாலை, வல்லாரை, கலிந்தும்பை, கண்டங்கத்திரி, கருநொச்சி ஆகிய இம்மூலிகைகளின் சாற்றை 325மி.லி. எடுத்துக் கொள்க. வெள்ளுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய்த்தோல் ஆகிய வற்றை 35கி. எடுக்க. வசம்பு, இலவங்கம் இவற்றை 8கி. எடுக்க. பதக்கு நீர் விட்டு மேற்சொன்ன கடைச்சரக்குகளை இடித்துப் போட்டு காய்ச்சி குடிநீராக்கிக் கொள்க. சிந்தாமணக்கு எண்ணெய் 1.3லி. எடுத்து மேற்கூறிய சாறுகளையும் குடிநீரையும் சேர்த்து காய்ச்சி கருட்டு பதத்தில் சிவந்து வரும்போது பக்குவத்தில் வடித்துக் கொள்க. இதைக் காலையில் ஒரு தேக்கரண்டி அளவு கரண்டி வீதம் கொடுக்க மந்தார முதலிய கனங்கள் நீங்கும். -(பு. 477-153) (பு. 476-87)

மசூரிகை

ஊர்த்தகனம் - உதிரகனம்:-

தாயானவள் தலைக்கு எண்ணெய் தேய்ந்துச் சுத்தநீரில் முழுகி உணவு உண்டவுடன் மயக்கம், கோபம், தாகம் முதலியவைகளால் படுத்துறங்கிவிட்டால் அதன் காரணமாக மேல் நோக்குங்கால் விருதிப்பட்டு மிகுந்த விரக தாபம் நேரிடும். இதன் காரணமாகப் புதிட சையோகஞ் செய்வதால் உடல் நொந்து கடுக்கால் வெளிப்பட்டு உதிரம் புகுந்து குளிர்ச்சியையுண்டாக்கும். அதன் காரணமாக ஏழு நாள் வரை தலையிடிப்பு, கபாலகுலை உண்டாகும். அதன் பிறகு ஏழு நாள் கழிந்தால் உடல் வெளுக்கும். வயிறு நோவும். இதைச் 'ஊர்த்தக நோய்' என்றும் பாசி போல் நாவில் அழுக்கு சேர்ந்து இடுப்பெல்லாம் அமர்ந்திட்டால் உந்தி முதல் வெந்து போன நோயெல்லாம் தந்திவாயுவால் உண்டான சந்தி என்றும் கூறலுர்.

இப்படிப்பட்ட காலத்தில் தங்கிப் பிறக்கும் குழவிக்குப் பத்து நாள் வரை பால் கிடைக்கும். பிறகு முலைச் சூட்டால் பாலானது கல்போல் கட்டும். இப்பாலைப் பருகிய குழந்தைக்கு உடம்பு இளைத்தல், தலைவலி, வாந்தி, வாய்நீர் பெருகுதல், தலைச்சுற்றுண்டாகும்.

இரண்டு ஆண்டு கழிந்தபிறகு அப்பிள்ளை தேங்காய் வாழைப்பழம், தித்திப்பு, வடை, பாயாசம், பலாப்பழம், மீன், அரிசி, அடை இவைகளை சாப்பிடுவதால் கண நோயுண்டாகும்.

மாந்தநோயால் கணம் பற்றிய குழந்தை அந்நோய்கண்ட எட்டு நாளைக்குள் வாந்தி பண்ணும், வயிறு இரைச்சலுடன் பச்சையாகக் கழியும், விழி சுழலும் நாக்கு உலரும், நடப்பதில் அசதி, அழுதல், அதிக தாகம் ஏற்படுவதால் வருந்தும். இவைகள் முதல் நான்கு நாட்கள் கொடுமையாயிருக்கும். (ஏடு 477-135)

<u>மாந்தகணத்தின் குறிகுணம்</u>:-

தாகம், இளைப்பு ஏற்படும், பொருமலொடு வாந்தி, தலை சுற்றல், வயிறிரைதல், பாசம், போல் கழிதல் நாக்கு உலர்தல், போன்ற குறிகுணங்கள் ஏற்படின் அது மாந்தகணம். (ஏடு 7313-23)-(கை.பி. 167-168)

<u>பச்சிலைச்சாறு</u>:-

நொச்சியிலை, சிறுதும்பையிலை, மூக்கிரட்டையிலை ஆகிய இம்மூன்றையும் வகைக்கு ஒரு பிடி வீதம் எடுத்துப் பிட்டவியலாகச் செய்து சாறு பிழிந்து அதைக் காலையிலும், மாலையிலும் ஒரு சங்களவு வீதம் கொடுத்து வர மாந்தகணம் நீங்கும். -(477-137)

<u>ஊட்குறை காந்தீகுத நீர் !</u>

<u>புங்கு ஈர்க்கு முடிக்குடிநீர்</u>:-

புங்கு, புளி, நொச்சில் மா, வேம்பு, கருவேப்பிலை, நாரத்தை, பொன்னவரை இவைகளின் ஈர்க்கு பொடுதலை, வெலிப்பருத்தி, சங்கன், அவுரி இவைகளின் இலை வகைக்குப் பிடியொன்று சட்டியிலிட்டுக் கொள்க. அதில் கருஞ்சீரகம், ஓமம், இந்துப்பு, ஆகியவைகளை வகைக்கு 4கி. வீதமெடுத்துச் சீலையில் முடிந்து வைத்துக் கொள்க. அதில் 1.3லி. நீர் விட்டுச் சுண்ட எரித்தபின் சீலை முடிச்சியை எடுத்து அதனுள் வெந்திருக்கும் மருந்தை அரைத்து மீதமுள்ளகுடிநீரில் கரைத்து வேண்டிய நாளளவு வேளைக்கு 2 சங்களவு கொடுத்தால் மாந்த கணம் நீங்கும். (477-140-141)

<u>நன்னாரிக்குடிநீர்</u>:-

நன்னாரி, சிறுகீரை, காட்டு மல்லிகை ஆகியவற்றின் வேர்கள், நாவற்பட்டை, ஈயத்திண்டு, சங்கம்வேர், பாவட்டைவேர், அவுரிவேர், நொச்சி வேர்ப்பட்டை, வட்டக்கிலுகிலுப்பை ஆகிய 10 சரக்குகளையும் வகைக்கு 9கி. வீதமெடுத்து இடித்து ஒரு மண் சட்டியில் 650 மி.லி. தண்ணீர்விட்டு அதிலே மேற்படி இடித்து வைத்திருக்கும் சரக்குகளைப் போட்டு அதை 85 மி.லியாக வற்றக் காய்ச்சி அதை வேளைக்கு 2 சங்களவு 3 அல்லது 5 நாட்கள் கொடுத்து வந்தால் மாந்தகணம் நீங்கும் (477-

மாந்தகணத்துக்குக் குடிநீர்:-

அளசி, செம்முள்ளி, தும்பை, கஞ்சாங்கோரை, தைவேளை ஆகியவற்றின் இலைகளை எடுத்துக் கொள்க. நற்சீரகத்தையும் சேர்த்துப் போட்டு வேகவைத்துக் கொண்டு சாறு பிழிந்து கொடுக்க மாந்தகணம் தீரும்.

சாரணை வேர்ப்பட்டை, தேசாபுரம் ஆகிய இவற்றைச் சமமாய் எடுத்து தண்ணீர் விட்டு குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க மாந்த கணம் நீங்கும்.

(482-77)

ஒருதலைப்பூடு 35கி., வசம்பு, அரத்தை வகைக்கு 4கி., எடுத்து இவையனைத்தையும் தட்டி, நசுக்கி, ஒன்றாய்க் கலந்து காய்ச்சி 16மி.லி. வீதம் மூன்று நாட்கள் கொடுக்க மாந்த கணம் நீங்கும். (482-78)

வால்மிளகுக் கற்கம்:-

வால்மிளகு, வெள்ளைப்பூண்டு, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், கிராம்பு, சண்பகப்பூ ஆகிய இவ்வேழு சரக்குகளையும் வகைக்கு 1கி. வீதமெடுத்து அதைப் பொடுதலைச் சாற்றால் 12மணிநேரம் சுண்டைக்காயளவு அரைத்து காலையிலும், மாலையிலும் தேவையின் அளவில் 3 (அல்லது) 5 நாள் (அல்லது) நோய் வன்மைக்குத் தக்க கொடுத்தால் மாந்த கணம் நீங்கும். (கை.பி. 98-168-169) (477-139)

(ஏடு 7313-25)

வெள்ளாட்டுப்பால் நெய்:-

வெள்ளாட்டுப்பால் 2.6லி., ஆமணக்கு நெய் 1.3லி., திருகுகள்ளிப்பால் 35கி., இண்டங் கொழுந்து ஒரு பிடி செண்பகப்பூ, அதிமதுரம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வசம்பு, இலவங்கம், ஏலரிசி, ஓமம், வெள்ளுள்ளி, சீரகம், கருஞ்சீரகம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், நன்னாரி வேர், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு, கடுக்காய்த் தோல், கடுரோகணி, கோட்டம், பச்சிலை, சுக்கு இவைகளை வகைக்கு அரைக் கா்செட்டை சேர்த்திடித்து வெள்ளாட்டுப் பாலால் அரைத்துக் கலக்கிக் கொள்க. அத்துடன் கோரோசனையைத் தூள்செய்து சட்டி அடுப்பில் வைத்து எரித்துப் பக்குவமாகக் காய்ச்சி வடித்துக் கொள்க. குழந்தைகளுக்கு ½மி.லி. தாய் முலைப்பாலுடன் கலந்து காலையில் மாத்திரம் 3 (அல்லது) 5 நாள் கொடுக்க வேண்டும். அதனால் மாந்த கணம் நீங்கிப் போகும். (ஏடு 477-135-136)

வேலிப்பருத்தி நெய்:-

175கி. எருமை வெண்ணெயைச் சட்டியிலிட்டு அது காய்ந்து வரும் நேரத்தில் உத்தாமணிச் சமூலம், வெள்ளைச்சாரணைவேர், குட்டிவிளாவேர், புண்டு வேளைவேர், சட்டி வசம்பு வெள்ளை வெங்காயம், கொம்மட்டி ஆகிய இவற்றை வகைக்கு 5கி. எடுத்து அரைத்து சேர்த்துப் பதமாய் காய்ந்தபின் வடித்து வைத்துக் கொண்டு ஒன்று முதல் இரு துட்டெடை ஒரு சங்கு முலைப்பாலில் கட்டி நோய் வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்தால் மாந்த கணம் நீங்கும். (ஏடு 7313-24) (கை.பி. 98-168), (477-13

மாந்த கணைக்கு நெய்:-

வசம்பு, கடுக்காய், திப்பிலி, கருஞ்சீரகம், அரத்தை, அசமதாகம், செங்கொட்டை, பூலாவிருட்சம், சந்தனம், கொடிவேலி, பருத்தி, மாவிலை, ஆவாரை-யின் கொழுந்து, சாரணையின் வேர் ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்துக் கொள்க. இவையனைத்தையுமரைத்து நல்லெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. இதனைக் காசளவு கொடுக்க மாந்த கணம் நீங்கிப் போகும். (ஏடு 601-73)

மாந்தகணப் பொருமலுக்குச் சாரணை ஊறல்:-

சாரணை வேர்ப்பட்டையும் திப்பிலி மூலமும், சமனெடை எடுத்து இடித்து வடிகட்டி இருக முறைப்படி போதுமானதேன்விட்டு ஊறமாக்கி நோய் வன்மைக்குத் தக்க அளவு குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் மாந்தகணப் பொருமல் நீங்கிச் சுகமாகும். (477-141)

வல்லாரை வெண்ணெய்:-

பொன்னாங்காணி, வல்லாரை, புளியாரை ஆகிய கீரை வகைகள், கீழா-நெல்லி, துளசியிலை, சிறுபுள்ளடியிலை, வரட்பூலாயிலை, தகரையிலை, ஓரிதழ்த்தாமரை, பூளை, கோழியாவரை, தூதுவளை, அம்மான்பச்சரிசி, அவுரி, பீர்க்கு நுரை, வெண்ணொச்சி, அவரை, செந்நாயுருவி, முட்காய்வேளை, நிலைக்கடம்பு, ஆருதின்னாப்-பாளை, உத்தாமணி, மணத்தக்காளி, ஆடாதோடை, கருநொச்சி, நாய்வேளை, சிறுசின்னி, வேம்பு, காவட்டம்புல், கணப்பூண்டு, சனா, முதியார் கூந்தல், சிறுகீரை, முசுமுசுக்கை, நருக்கை, பொன்முசுட்டை, அத்தி நிலக்குமிழ், ஆவாரை, சுரை, விட்டுணுகிராந்தி, சங்கங்குப்பி, பீச்சங்கு, தாளி, நாவல்தளிர், கண்டங்கத்திரி, வில்வம், குட்டிவிளா ஆகியவற்றின் இலைகள், நரிப்பயற்றங்கொடி, சீந்தில் கொடி ஆகிய சரக்குகளைச் சரி கட்டிப் பிழிந்து அதிலிருந்து 1.3 லி. சாறு எடுத்துக் கொள்க அதனுடன் 2.6லி. சிந்தாமணிச் நெய் கலந்துக் கொள்க. அதில் சீரகம், கிராம்பு, வசம்பு ஆகியவற்றை 4கி. எடுத்து 335மி.லி. நீர்விட்டு 85மி.லி. குடிநீர் செய்து கொள்க. அதனைச் சங்களவு வீதம் காலையிலும், மாலையிலும் கொடுத்து வந்தால் மாந்தக கணம் தீரும். (477-136-137)

வல்லாரை வெண்ணெய்:-

வல்லாரை, பிரமி, சிறுசெருப்படை, நீர்முள்ளி, மணத்தக்காளி, பெரிய தக்காளி, துளசி, கோழியவரை, நெய்ச்சிட்டி ஆகிய பத்தையும் வகைக்கு ஒரு பிடி எடுத்து இடித்துப் பிழிந்து 325 மி.லி சாறு எடுத்துக் கொள்க. 650மி.லி. சிந்தாமணிக்கெண்ணெய், ஒருகைப்பிடி வெங்காயச்சாறு, ஒரு சிறங்கை தும்மட்டிக்காய்ச்-சாறு, ஆகிய சாறுகளை எடுத்து ஒன்று சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. கடும பதத்தில் வரும் போது கார்போகி, பூண்டு, கருஞ்சீரகம், சட்ட வசம்பு ஆகிய நான்கையும் வகைக்கு 4 கி. எடுத்துப் பொடித்துச் சேர்த்து மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்க. அதனை 16மி.லி. வீதம் காலையில் கொடுத்துவர மாந்தகணம் தீரும்.

(கை.பி. 98-168) (477-140) (ஏடு 7313-23-24)

புள்ளடி எண்ணெய்:-

புள்ளடி, பொடுதலை, தகரை, மிளகுத்தக்காளி, கருநொச்சி, பழம்பாசி, வெள்ளுள்ளி, வசம்பு, வெங்காயம் ஆகிய இலைகளின் சாறு வகைக்கு 170 மி.லி. எடுத்து சித்தாமணக்கு எண்ணெய் 1.5லி எடுத்து இரண்டையும் ஒன்றாய்க் கூட்டி எரித்துப் பக்குவ பாகத்தில் வடித்துக் காலையில் மாத்திரம் உச்சிக் கரண்டியளவு (16 மி.லி) அளவு எடுத்து குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். அத்துடன் மாலையில் சுக்கு, ஏலம், வட்டத்திருப்பி, வெள்ளைவேர், ஏலரிசி, சித்திரமூல வேர்ப்பட்டை, திப்பிலி இவ்வேழும் வகைக்கு 1 கிராம் விதம் சமமாக கூட்டிக் குடிநீர் செய்து கொடுக்க வேண்டும்.
(477-138)

மருள் எண்ணெய்:-

மருட்கிழங்கும், வெள்ளுள்ளியும் வகைக்கு 35லி. விதமெடுத்து அத்துடன் எலுமிச்சம் பழச்சாறு 170 மி.லி. சித்தாமணக்கெண்ணெய் 325 மி.லியும் சேர்த்து காய்ச்சி வடித்த எண்ணெயில் காலையில் மட்டும் 16மி.லி. விதம் வேண்டிய நாள் வரைக் கொடுத்து வர மாந்தகணம் விட்டுப் போகும். (477-140)

நுணா எண்ணெய்:-

1.3லி. சித்தாமணக்கெண்ணெயும், 1.3லி. நுணா இலைச்சாறும், 1.3லி. வெங்காயச்சாறும் எடுத்து சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சிக் கொள்க. காய்ந்து வரும் நேரத்தில், வில்வக் கொழுந்து 2 பிடி, பொரித்த வெண்காரம், சீரகம் இவற்றை 8 கிராமும் கடுக்காய்த்தோல் பொடி ஆகியவற்றைச் சேர்த்துப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு 1 சங்களவு வீதம் கொடுக்கத் தீரும். (477-140)

மாந்தகணத்திற்கெண்ணெய்:-

தூதுவளை, நாயுருவி, கரிப்பான், வல்லாரை, தும்பை, நொச்சி, கண்டங்கத்திரி ஆகியவற்றின் சாறு வகைக்கு 325 மி.லி. சித்தாமணக்கெண்ணெய் 1.3லி. எடுத்து இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெள்ளுள்ளி, வசம்பு ஆகியவற்றை வகைக்கு 15கி. வீதம் அரைத்து மெத்தொள்ள கலவையில் போட்டுக் காய்ச்சி 16மி.லி. கொடுக்க மாந்தகணம் நீங்கும். (482-77)

மாந்தகணத்திற்கெண்ணெய்:-

செப்பு நெருஞ்சி, தகரை, பழம்பாசி, ஓரிலைத்தாமரை, நன்னாரி, சங்கு, நொச்சி, சாரணை, ஆடாதோடை, சிவதலை, இம்பூரல், பற்படாகம், கற்றாழை, நாயுருவி, சங்கன்குப்பி, வேலிப்பருத்தி, சீதா செங்கழுநீர், முக்குரண்டி, சிற்றாமுட்டி, தூதுவளை, கண்டங்கத்திரி, மிளகு தக்காளி ஆகிய இவைகளின் வேர் வகைக்கு 9கி. எடுக்க. மிளகுத்தக்காளி வல்லாரை, கரிப்பான், அவரி, வெள்ளுள்ளி, வில்வப்பத்திரி அகத்தி, முசுமுசுக்கை, முடக்கொத்தான், சங்கு, விஷ்ணுகிரந்தை, கருவேல், தகரை, வெதுப்படக்கி, பேய்மருட்டி ஆகிய இலைகளின் சாறு வகைக்குப் படிமாகாண் எடுக்க.

திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், கடுகு ரோகணி, வசம்பு, சீரகம், மாசிக்காய், அரத்தை ஆகிய இவற்றை வகைக்கு 12கி. திப்பிலி மூலம், செவியம், சித்திரமூலம், தேசாபுரம், ஓமம், கருஞ்சீரகம், சாதிக்காய், கடுக்காய், கிராம்பு, வகைக்கு 4கி. பூடு 20கி., வெங்காயம் 70கி., எடுத்து இவையெல்லாவற்றையு மரைத்தெடுத்துக் கொள்க. அரைத்ததைச் 1.3லி. சிற்றாமணக்கெண்ணெயிற் போடுக. மேலே கூறப்பட்டுள்ள சாறுகைகளையும் கலந்துக் கொள்க. அக்கலவையைப் பதமாய்க் காய்ச்சிக் கொண்டு மாதம் மூன்று முறை கொடுக்க உப்பு, புளி, தள்ளிப் பத்தியமாய் இருக்க மாந்தகணம் நீங்கிப் போகும். (482-82)

பாலசஞ்சீவி மாத்திரை:-

பால்துத்தம், வெங்காரம், கோரோசனம், கொஸ்குக்காய்வேளைவேர், கடுகுரோகணி இவைகளை வகைக்கு 15கி. எடுத்துக் கொள்க. அகத்திக்கீரைச்சாறு விட்டு 3 மணிநேரமரைத்துச் சிறுபயறளவு உண்டை செய்து கொள்க. அதனை வெந்நீரிலுரைத்துக்கொடுக்க மாந்த கணம் நீங்கிப் போகும். மாந்தசனத்தை நீக்க வல்ல சில இலைகள் பிட்டவித்த நீரில் அல்லது முலைப்பாலில் வேளைக்கொரு மாத்திரையாகக் காலை, மாலை இரு வேளையும் 3 நாள் கொடுக்கமாந்த கணம் விட்டுப் போகும்.

(482-77) -(477-137)

~~பாலசஞ்சீவி மாத்திரை:- சுக்கு, சிறுதிப்பிலி, வெங்காரம் இவைகளைச் சரி எடை~~

பாலசஞ்சீவி மாத்திரை:-

தோல்சீவின சுக்கு, மிளகு, சிறுதிப்பிலி, வெங்காரம் இவைகளைச் சரி எடை எடுத்து இடித்துத் துணியில் வடிகட்டிக் கொள்க. அதனுடன் சாதிலிங்கத்தூள் கூட்டிக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 3 மணிநேரம் அரைத்து அரைப்பயறளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. துளசியிலை, செம்முள்ளி, ஆடாதோடை துளசி, விட்டுணுகாந்தி, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கிலை, நொச்சியிலை, இவைகளைச் சரி எடை கூட்டிப் பிட்டவித்துச் சாறு பிழிந்து வேளைக்கொரு உச்சிக் கரண்டியளவில் (16மில்லி) திரிகடுகுத்தூள் 165மி.லி. கூட்டி அதில் வேளைக்கொரு மாத்திரையும் சேர்த்து 3 நாள் கொடுக்க வேண்டும்.

(477-138)

முக்கு கணம் - இரும்பு கணம்:-

நாக்கு வெந்த புண்ணாகும், சோகமாயிருக்கும் சுரத்துடன் தலையைத் தொங்கவிடும், தாகத்துடன் வயிறு கடுத்து சீதமும் இரத்தமுமாக விழும், உறுப்பு தள்ளும், வாந்தியுடன் பொருமல் ஏற்படும், சுரம், தலைவலி, நாவறட்சி, சந்து பொருத்துகளில் உளைவு ஏற்படும், வயிற்றுக் கடுப்புடன் உடல் கறுத்து ஆசனவாயும் கடுத்து வலிக்கும். இரத்தம் அதிகமாய்ப் போய் உடல் இளைக்கும்.

தாய்ப்பாலை உண்ணாது, அப்படியே குடித்தாலும் வாந்தியெடுத்துவிடும், கை, கால் குளிர்ந்து விடும், உடல், கண் இவை சோர்ந்து வரும், ஆசனவாய் நெருப்பு பட்டாற் போல் எரியும்.

அபானத்தில் வலி ஏற்படும், மலம் நீயும், நீரைல், முக்கல், பிரட்டல் இவை அதிகமாகயிருக்கும். இவையனைத்தும் முக்கு கணத்தின் குறிகுணங்கள்.
(ஏடு 424-23), (ஏடு 362-39), (ஏடு 941-30), (பு. 477-156)
(கை.பி. 98-183) (பு. 572-6)

<u>கந்தாழைச்சாறு:-</u>

ஏழு தடவை கழுவின கந்தாழைச் சோறு 35கி., 4கி. வெந்தயம், 35கி. பதிச்சாறு ஆகிய மூன்றையும் சேர்த்து காய்ச்சி வடித்துக் குழந்தைக்குக் காலையில் மட்டும் 16மி.லி. கொடுக்க வேண்டும். இவ்விதம் 3 (அல்லது) 5 நாள் கொடுக்க முக்குக்கணம் நீங்கும். (572-6-7), (477-157)
(பு. 476-92) (பு. 476-93-94)

<u>உண்டக்குடிநீர்:-</u>

மாலையில் 35கி. சீரகத்தைப்பொரியவிட்டு அது பொரியும் போது 35கி. உண்டத்தண்டைத் தட்டித்த தூள், நறுக்கி அதிற்போட்டு 325 மி.லி. தண்ணீர் வார்த்து எட்டொன்றாய்க் காய்ச்சி வேளைக்கு ஒரு சங்களவாக 3 (அல்லது) 5 நாள் கொடுக்க முக்கு கணம் நீங்கும். (பு. 477-156-157) (572-6-7)

<u>குடிநீர்:-</u>

ஆல், ஆவாரை, விடத்தலை, கருவேல் ஆகியவற்றின் கொழுந்தும் பட்டையு மெடுத்துக் கொள்க. அகத்திப்பட்டை, தென்னை மொக்கு ஆகியவற்றைச் சமனாய் எடுக்க. இவற்றைச் சேர்த்து குடிநீராக்கிக் கொள்க. சீரகம், அதிவிடையம், மாசிக்காய், கிராம்பு, சாதிக்காய், ஆகியவற்றை இளவறுப்பாய் வறுத்துக் கொடியாக்கிக் கொள்க. விளாம்பிசினையும் பொடியாக்கி மேற்சொன்ன நீரில் சேர்த்துக் கொள்க. அச்சட்டி-யின்கீழ் மத்தொன்றிற்கு மாற்று. அதனைக் குழந்தைகளுக்குக் கொடுக்க முக்கு கணம் நீங்கும். (ஏடு 362-39)

<u>முக்குகணத்திற்குக் குடிநீர்:-</u>

மிளகு, வசம்பு, வெதுப்படக்கி ஆகிய மூலிகைகளை எடுத்து இடித்துச் சாறு பிழிந்து கொள்ள வேண்டும். அதனை சூடேற்றி மூக்கில் இதமாக விட முக்குக் கணம் நீங்கிப்போகும். (ஏடு 424-23)

<u>முக்குகணத்திற்குக் கஸ்தூரி எண்ணெய்:-</u>

கோரோசனை, கோட்டம், அதிமதுரம், சீரகம், திப்பிலி, தேவதாரம், சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கஸ்தூரி, வசம்பு, கடுரோகணி, [illegible] பச்சைத்தோல் ஆகிய இவற்றை வகைக்கு 4கி. எடுக்க இவற்றை எருமுட்டை பீநாறிச் சாற்றில் அரைக்க. அரைத்ததனை வடித்த விளக்கெண்ணெய் 1.3லி. எடுத்து அதில் விழுதைக் கலந்து எரித்து பக்குவமாக இறக்கிக் கொள்க. இதனைக் குழந்தையின் நோயின் தன்மையறிந்து கொடுக்க முக்குக் கணம் நீங்கிப்போகும்.
(476-56)

<u>வில்வ எண்ணெய்:-</u>

1.3லி. எண்ணெய், 325 மி.லி. கற்றாழைச் சாறு, 325 மி.லி. முலைப்பால், 85 மி.லி. பழச்சாறு ஆகிய இந்நான்கையும் ஒரு சட்டியிலிட்டுக் கலந்து கொள்க. அதில் வில்வவேர், விலாமிச்ச வேர், விட்டுணுகிரந்தி வேர், கோரைக்கிழங்கு ஒரிதழ்த்தாமரை வேர், முருங்கை வித்து, தாளி வித்து, கோங்கிலவம் பிசின், ஆவாரம் பிசின், கோட்டம், அதிமதுரம், அக்கரகாரம், தாளிசபத்திரி ஆகிய இப்பதின்மூன்று பொருட்களையும் வகைக்கு 35கி. எடுக்க. அதனை வறுத்து இடித்து அச்சட்டியிலுள்ளவைகளையோடு சேர்த்துக் கரு பதத்தில் எண்ணெய் வடித்து அதை ஒரு காசெடை ( ) வீதம் குழந்தைகளுக்கு 3 நாள் காலையில் மட்டும் கொடுக்க வேண்டும். (572-6-7) (477-156-157)

<u>மூக்குக்கணத்திற்கு எண்ணெய்:-</u>

இஞ்சி, தூதுவளை, குப்பைமேனி, சங்கங்குப்பி, பூளை, கண்டம் ( ) பூவரசு, ஆடாதோடை, கற்றாழை, பருத்தி, சாரணை, பிரமி, வேளை, நரிப்பயறு ஆகிய இலைகளின் சாறுகளை வகைக்கு 1.3லி. எடுக்க. எரண்டெண்ணெய் 2.6லி. எடுக்க. வசம்பு, உள்ளி, ஓமம், கோரோசனை, செண்பகப்பூ, சாதிக்காய், நாள்றி, கரியசீரகம் ஆகியவற்றை வகைக்கு 18கி. எடுத்துக் கொள்க. இவற்றை அரைத்து ஒன்று சேர்த்து கலக்கி அடுப்பிலேற்றிக் காய்ச்சிப் பதமாயிறக்கிக் கொள்க. பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வைக்க. அதனைக் குன்றியளவு ( ) கொடுக்க மூக்குக்கணம் நீங்கிப் போகும்.

(கை.பி. 98-183-184)

<u>மாத்திரை:-</u>

மாந்துளிர், இலுப்பை, நாகல், மாதுளை, கீழ்க்காய் நெல்லி, நீர்ப்பூலா, நெல்லி, சிறிய புள்ளடி, வல்லாரை, பேய்மிரட்டி, கருப் பூலா, ஞாழல் ஆகியவற்றைத் தளிரும் கொழுந்துமாக எடுத்துக் கொள்க. இவற்றை நன்கு இடித்துப் புட்டவியலாக்கிக் கொள்க. சிறு நாகப்பூ, தக்கோலம், சுக்கு, லவங்கப்பட்டை, கிராம்பு, ஏலம், தாளிசபத்திரி, சாதிக்காய் ஆகிய சரக்குகளை இடித்து வைத்துக்கொள்க. கிழிகட்டி நடுவில் வைத்து புட்டவியலாக்கிக் கொள்க. அவ்வாறு செய்து பிழிந்தெடுத்த சாற்றால் முன் சொன்ன மருந்துகளையரைத்துக் கொள்க. அரைத்த விழுதை 130மி.கி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்க. பிறகு அதனை அரைத்த புட்டவியல் சாற்றிலரைத்து குழந்தைகட்குக் கொடுக்க மூக்குக் கணம் போன்ற அனைத்து கணங்களும் நீங்கிப் போகும்.

-(சுரு 424-24-25)

<u>முட்டிலோகக்கணயின் குறிகுணம்:-</u>

தலைகனத்திருக்கும், மூச்சடைத்துக் கொள்ளும், மூக்கில் நீரோடும், உடலில் மலம் சேரும், சுரங்காயும், இவையே முட்டிலோகக் கணயின் குறிகுணமாகும்.

-(சுரு 601-71)

54

மூலக்கனம் குறிகுணம்:-

(இந்நோய் 10 ஆண்டுவரை தொல்லை தரும்.) 476,90)
வளியும் பித்தமும் மிகுந்து எழும்பிச் சேர்ந்தது. அதனால் மூலத்தில் கொதிப்புண்டாய் புண்பட்டு சீழும் சீதமும் இரத்தமுமாய் கழியும், வயிற்றுளைச்சல், ஆசனத்தில் சாற்ற சேர்ந்து கொண்டு படபட என்ற ஓசையுடன் வெளிப்படும், சுரம் வயிற்றிரைச்சல், மிகுதியாகத் தலைநோதல் ஆகிய குறிகள் காணப்படில் மூலகனமாகும். முகங்கறுக்கும் சிவக்கும், பல்லிதமாய் இளைக்கும், அடித்தலும்.

(476-11) (சு 941-32) (477-157) (482-73) (சு 362-40)
(572-13) (476-90)

சாறு:-

கற்றாழையைக் கொண்டு வந்து அதன் சாறெடுத்துக் கொள்க. வெந்தயம், எலுமிச்சம் பழச்சாற்றையும் ஒன்று சேர்க்க. இக்கலவையைக் காய்ச்சிக் கொடுக்க குழந்தைகட்கு வரும் மூலரத்தமும், இரத்தக் கடுப்பும் நீங்கிப் போகும்.
(சு 362-41)

மூலக்கனத்திற்கு குடிநீர்:-

ஆலங்கொழுந்தும் பட்டையும், ஆவாரம் கொழுந்தும் பட்டையும், விடத்தாரி கொழுந்தும் பட்டையும் நாவல் கொழுந்தும் பட்டையும், கருவேலங் கொழுந்தும், பட்டையும், அத்திப்பட்டை தென்னை மொக்கு ஆகியவை பொருட்களையும் ஒரு வேளைக்கு வகைக்கு 9கி. எடுத்து இடித்து ஒரு மண் சட்டியிலிட்டு 650 மி.லி. தண்ணீர் விட்டு 170மி.லி.யாகக் காய்ச்சி வடித்து அதில் சீரகம், அதிமதுரம், மாசிக்காய், கிராம்பு, சாதிக்காய் விளாம்பிசின் ஆகிய இவ்வேழு பொருட்களையும் வகைக்கு 1கி. வீதமெடுத்துப் பொடி செய்து ஆலி நீரில் கரைத்து வேளைக்கு 20 மி.லி.யாக இரண்டு வேளையும் 3 (அல்லது) 5 நாள் கொடுக்க மூலகனம் நீங்கிப் போகும். மறுசட்டியில் மாற்றிக் கொடுக்க வேண்டும். (476-91) (477-159)

பெருமரம், பருத்தி, ஒதி, மாதளைக் கஷாயங்கள்:-

ஒரு வேளைக்கு 18கி. பெருமரப்பட்டையை 80மி.லி. வெள்ளாட்டுத் தயிரில் அரைத்துக் கரைத்துக் கொடுக்கலாம்.

ஒரு வேளைக்கு 80 மி.லி. பசும்பாலில் 9கி. பருத்திப் பிஞ்சையும் 9கி. சீரகத்தையும் சேர்த்தரைத்துக் கொடுக்கலாம்.

ஒரு வேளைக்கு 18கி. ஒதியம்பட்டையை 80மி.லி. பசுவின் மோரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கலாம்.

மாதளம் பிஞ்சைத் தயிரிலரைத்துக் கொடுத்தாலும் மூலகனம் தீரும்.
(476-91) - (477-158)

55

[illegible]:-

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, லவங்கப்பட்டை, [illegible] (—)
[illegible]
-([illegible] 38?-41)

[illegible]:-

[illegible] சாதிபத்திரி, சாதிக்காய், கிராம்பு [illegible]
(477-182) (476-29) ([illegible] 362-50)

[illegible]:-

[illegible] ([illegible] 362-49) (477-159) (476-91)

[illegible]:-

[illegible] 7 [illegible] (572-14) (482-73) (477-157)
(476-90)

[illegible]:-

1. 3[illegible]. [illegible] 2. 3[illegible]. [illegible], 325 [illegible] [illegible] 35[illegible] [illegible] (16[illegible].) [illegible]

நாள் காலையில் [illegible]. [illegible] நீங்கிப் போகும்.
(477-158)

[illegible]:-

[illegible] 1.3கி. [illegible] 3மி.லி. [illegible] 4மி.லி. [illegible] 3 (மூன்று) 5 நாள் கொடுக்க வேண்டும் அப்படி செய்தால் [illegible] நீங்கும். (476-81) (ஏடு 362-40) (ஏடு 541-52)
(482-73) (477-158)

[illegible]:-

[illegible], [illegible], கிராம்பு, [illegible], [illegible], [illegible] (சாறு) [illegible]. [illegible] கொடுக்க [illegible] நீங்கிப்போகும்.
-(ஏடு 362-40)

[illegible]:-

[illegible], நெல், பால், (ஆடாதொடைப் பட்டை) [illegible], [illegible], [illegible], [illegible], [illegible] [illegible], [illegible] [illegible] நீங்கிப் போகும். (ஏடு 362-41)

[illegible]:-

[illegible] 1.3கி., [illegible], [illegible], [illegible] 325 மி.லி. [illegible] கொள்க. [illegible] 675 மி.லி., (மொத்தம் 675மி.லி.) (476-95) [illegible] கொள்க. [illegible], [illegible], [illegible], [illegible] 9கி., [illegible] 35கி. [illegible] கொள்க. [illegible] கொள்க. [illegible] [illegible] நீங்கிப்போகும்.
(477-162) (476-95) (482-81)

<u>மேகக்கணைக்கு நெய்:-</u>

தேங்காயெண்ணெய், எள்ளெண்ணெய், பசுவின் நெய் ஆகியவற்றை முறையே 1.3லி., 325 மி.லி., 675 மி.லி., எடுத்துக் கொள்க. ஒன்றாகச் சேர்த்த அக்கலவையில், அமுதவள்ளி, விஷ்ணுகிராந்தி, பேய்ப்புடோல், முசுமுசுக்கை, ஆனையடி, சிறுபுள்ளடி, வெண்குடங்கல், கருங்குடங்கல், கைதோன்றி, தாமரையின் வளையம் ஆகிய சரக்குகளை 35கி. எடுத்து சாறு பிழிந்து நெய்யில் கலந்து கொள்க. எலுமிச்சம்பழம் 12 எடுத்து சாறு பிழிந்து கலக்கிக் கொள்க. சடை அதிகமான கோழியெடுத்து இரத்தத்தை கீழே விடாது உயிரைப்போக்கி இடித்துக் கொள்க. தேங்காய்ப்பால் 2.6லி. எடுத்து அதில் நன்றாகப் பிழிந்தெடுத்துக் கொள்க. இவை அனைத்தையுமொன்றாகச் சேர்த்துக் கொள்க.

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, [illegible] கிராம்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், கார்போகரிசி, வாலுளுவையரிசி, திப்பிலியரிசி, வெட்பாலையரிசி, மூங்கிலரிசி, ஏலரிசி, ஆகிய சரக்குகளை வகைக்கு 5கி. எடுக்க. சித்திர மூலத்தைச் சுத்திசெய்து 35கி. எடுத்து அரைத்துக் கொள்க. இதனைக் கலவையில் சேர்த்து காய்ச்சிக் கொள்க. காய்ச்சி வரும்பொழுது சர்க்கரையை 35கி. போட்டுப்பதமாகும்வரை காய்ச்சி இறக்கிக் கொள்க. காய்ச்சிய நெய்யை குழந்தைகள்நோயின் தன்மையறிந்து, வயதறிந்து அளவறிந்து மூன்று நாள் காலை, மாலையில் கொடுக்க மேகக்கணை தீர்ந்து போகும்.

(கை.பி. 98-46-47)

<u>வரட்டுக்கணையின் குணம்:-</u>

நாக்கு உலர்ந்திருக்கும், கண்கள் வெளிப்படலத்தில் கிராம்பு இருப்பது போல பற்றிக் கொண்டிருக்கும். (ஏடு 601-63)

<u>நெய்:-</u>

வல்லாரைச்சாறு 1.3லி., புளியாரைச்சாறு, இஞ்சிச் சாறு ஆகிய மூன்றையும் கலந்துக் கொள்க. பசுவின் நெய்யையும் 1.3லி. எடுத்து கலக்க. சீரகம், ஏலம், அதிமதுரம், கல்நார் ஆகிய சரக்குகளை 5கி. எடுத்து அரைத்து முன் சொன்ன கலவையில் கலந்து காய்ச்சி வெந்தபின் பக்குவமறிந்து இறக்கிக் கொள்க. 5கி. நெய்யில் இம்மருந்தைக் கலந்து இரண்டு பொழுதில் அருந்த வரட்டுக்கணை தீர்ந்து போகும். (ஏடு 601-63)

<u>வறட்கணம் (வறட்சிக்கணம்) - குறிகுணம்:-</u>

மார்புதுடித்தல், புகைந்து புகைந்து இருமுதல், உடல் நிறம் மாறுதல் வறண்டிருக்கும், நாக்கு கறுப்பு நிறமடைதல், சில சமயங்களில் சுரம் காய்தல், சில சமயங்களில் புகைந்திருமுதல் புகைச்சலின்றி அதிகமாக இருக்கும். வயிற்றிரைச் சலுண்டாகும். உடம்பு மெலிந்து வன்மையும் குறைந்துவிடும். [illegible]விடும், எலும்பைப் பற்றிய சுரக்குறி காணும், உடற் கொதிப்பினால் உமிழ்நீர்க்கோளம் வற்றி நீர் வேட்கை எடுக்கும். உடல் வெதுக்கும் எரிச்சலுண்டாம். நாக்கு கருகும், நெஞ்சு அடிவயிறு எரியும்

சிறுநீர் வெண்மை நிறமடையும், சிறிதுநேரம் வயிறு நொந்து திடீரென்று வன்மையாகக் கடுக்கும். உடம்பு முழுமையும் வற்றும், உஷ்ணமாகும், மஞ்சள் நிறமான முள்ளைப் போலவும் வெள்ளை நிறமுள்ளைப் போலவும் ஒரு கை முள் தோன்றும். அதனுடன் மூன்று சீதமாக அடிப்புண்டாகும். பிள்ளைகளின் இயற்கைநிலை கெடும். உடம்பு பருக்காமல் இளைக்கும். மூக்கில் சளி மிகுந்து மூக்கை அடைக்கும், சிலசமயம் முகம் மஞ்சள் பூத்தது போலிருக்கும், தாகம் அதிகமாகும், மயக்கமுண்டாகும், சோர்வு ஏற்படும். ஆகிய உக்குறிகுணங்கள் ஏற்பட்டால் வறட்சணமென்று அறியவும்.

(கை.பி. 98-177) (ஏடு 601-39) (ஏடு 169-39) (ஏடு 941-26)
(476-84) - (477-149) (482-70)(ஏடு 362-33)
(ஏடு 6218-26)

பூசணிக்காய் நெய்:-

பூசணிக்காய்ச்சாறு, இளநீர், பசுவின் பால் நெய், தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு ஆகியவற்றை வகைக்கு 1.3லி. எடுத்துக் கொள்க. கடுகுரோகணி செண்பகம், வெட்டிவேர், கடல்பச்சை, அதிமதுரம், லவங்கம், இருமட்டி திப்பிலி, சந்தனம், ஏலம், இலாமிச்சை, கோட்டம், இலாம்பிசின் பொன்முசட்டை, ஆகிய சரக்குவகைகளைக் காசெடை எடுத்து அரைத்து அக்கலவையில் கலந்துக் கொள்க. பின்பு காய்ச்சி பதமாகும் போது இறக்கி வடித்துக் கொள்க. இதனைக் குழந்தைகட்கு நாள்தோறும் கொடுக்கவறக்கணம் நீங்கிப் போகும்.

(ஏடு 362-37) (ஏடு 6218-30)

வறட்சிக் கணைக்கு நெய்:-

பொன்னாங்காணிச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, பாசி 325மி.லி. எடுக்க. சிற்றாமணக்கெண்ணெய் 325மி.லி. எடுக்க சாறுகளைக் கலந்து கொள்க. பிறகு தான்றிக்காய் ஈருள்ளி, கிராம்பு, வசம்பு, கோட்டம், வெந்தயம், கொடுப்பச்சை, அதிமதுரம், ஆகியசரக்குவகைகளை வகைக்கு 9கி. எடுக்க. இவற்றையரைத்து அக்கலவையில் ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும் போது இறக்கி வடித்துக் கொள்க. அதனை அரை கரண்டி (8மி.லி) அளவு கொடுக்க குழந்தைகட்கு வரும் வறட்சிக்கணை நீங்கும். (ஏடு 601-39-40)

பருத்திக்காய் நெய்:-

சாத்திரபேதி, கோட்டம், சந்தனம், ஏலம், சீரகம், கொல்லைக்காய், பிசின், உருத்திராக்கம், சங்கம், பருத்திப்பூ, கலைமான் கொம்பு, நெல்லிக்காய் வற்றல், செண்பகப்பூ, கொத்தமல்லி, விலாமிச்சு, ஆகியவற்றைக் காசளவு (4.4கி.) எடுத்தரைத்துக் கொள்க. பாத்திரத்தில் நெய் 1.3லி. ஊற்றிக் கொள்க. பருத்திக்காய்ச் சாறு, பொன்னாங்காணிச்சாறு ஆகியவற்றை வகைக்கு 325 மி.லி. எடுக்க. இக்கலவையில் அரைத்த விழுதைக் கலந்துக் கொள்க. அடுப்பெரித்து காய்ச்சிக் கொள்க. சிவ்விட்டு பதமாக வரும்போது 325 மி.லி. சர்க்கரையைத் தூவி மேலும் கிளறி அதனைக் குழந்தைகட்குக் கொடுக்க வறட்கணம் நீங்கி விடும்.

(ஏடு 6218-28),(477-294),(ஏடு 362-35)

எண்ணெய்:- ஆவாரம்பால் / தைலம்

கற்றாழைச்சாறு விஷ்ணுகிரந்திச்சாறு, இளநீர் ஆகியவைகளை வகைக்கு 1.3லி. எடுக்க. எலுமிச்சம் பழச்சாறு 675 மி.லி. எடுக்க. சித்தாமணக்கெண்ணெய் 3.9லி. எடுக்க மூன்றையும் கலந்துக் கொள்க. சந்தனம், இலவங்கப்பூ, கலைக்கொம்பு 35கி. எடுக்க. செண்பகப்பூ, 18கி. எடுக்க, எச்சைப்பூல ஏலம், இரண்டு வாசவேர் (விலாமிச்சு, வெட்டிவேர்) நன்னாரி, சாதிக்காய், சாதிபத்திரி, கொத்தமல்லி, அதிமதுரம், கோட்டம், கடுகுரோகணி, கிராம்பு, முத்தக்காசு ஆகியவற்றை 18கி. எடுக்க. சன்னலவங்கப்பட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, ஆகிய சரக்குகளைக் காசெடை (4.4கி.) அளவெடுக்க இவைகளை இவற்றை அரைத்து எண்ணெயில் கலந்து பக்குவமாய் எரித்துக் கொள்க. பதமான பிறகு புல்லுருவியைக் காசளவு (~~) தூவி விடுக. பிறகு அவ்வெண்ணெயைக் காசெடை (~~) குழந்தைக்கு ஒருநேரமும் கொடுக்க வதட்கணம் நீங்கி விடும். (ஏடு 6218-28-29) (482-109)(ஏடு 362-36-37) (482-100)

செம்முள்ளி எண்ணெய்:-

முள்ளிவேர், செவ்வள்ளிக்கொடி, தண்ணீர்விட்டான் கிழங்கு, முசுமுசுக்கை-வேர், ஆதவளைவேர்; கண்டங்கத்திரிவேர், திருகள்ளிவேர், மணித்தக்காளிவேர், கம்பிப்பிசின், கருஞ்சீரகம், நற்சீரகம், வெள்ளுள்ளி, வசம்பு ஆகிய இப்பதின்மூன்று
௭/ பொருட்களையும் வகைக்கு 4கி. இடித்துப் பொடியாக்கிக் கொள்க. 455கிராம் சித்தாமணக்கு எண்ணெய் எடுத்து அதை ஒரு மண்சட்டியில் ஊற்றி அதில் மேற்சொன்ன சரக்குப் பொடியைச் சேர்த்துப் பக்குவமாய்க் காய்ச்சி வடிக்க வேண்டும். பின் அதை 16மி.லி. வீதம் காலையில் மாத்திரம் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு 3 (அல்லது) 5 நாள் கொடுக்கவேண்டும். அத்துடன் மேலுக்குத் தடவ வேண்டும். இவ்வாறு செய்ய வதட்கணம் நீங்கிப் போகும்.
(482-70),(476-85),(477-150),(கை.பி. 98-177-178)

வதட்கணத்திற்குச் சீழாநெல்லியெண்ணெய்:-

ஆமணக்கு நெய் 1.3லி., பசம்பால் 1.3லி., பொன்னாங்காணிச்சாறு 325 மி.லி., நெல்லியின் சாறு 325 மி.லி. எடுத்துக் கொள்க. அதிமதுரம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், தோல்சீவின சுக்கு, விஷ்ணுகிராந்தி
௮/ வேர், ஊசியிலை, ஆதவளைவேர், பசலைக்கீரை ஆகியசரக்குகளை எடுத்து இளநீரில் அரைத்துக் கொள்க. அவ்விழுதை மேற்சொன்ன கலவையில் சேர்த்தெரித்து குழந்தைகளின் வன்மை, நோயின் தன்மையறிந்து கொடுக்கவதட்கணம் நீங்கும். உணவுக்குப் பிறகு இதனைக் கொடுக்க பேதி ஆகும். இந்நோய் சரியாகும்.
(கை.பி. 98-177),(ஏடு 169-39),(ஏடு 6218-26)
(ஏடு 362-33-34), (பு.477-149) (பு. 476-84-85)
(பு. 482-70)

வாதகணம் (அல்லது) வளிக்கணம்:-

வயிறிரையும், மந்தமாகி உள் மலம் கருகி விழும், நாவரளும், புகைச்சலும் இருமலுண்டாகும். அதிகத்தாகமேற்படும், உடல் முழுதும் சுரமிருக்கும். பசியுண்டாகாது. நீர்ச்சுருக்குண்டாகும், இவைகள் அனைத்தும் வாத (வளி)க்கணத்தின் குறிகுணங்களாகும். குழந்தையின் உடல் கனத்திருக்கும் இரைப்பேற்படும் மலம் கருகும்.

(கை.பி. 98-166) (ஏடு 798-23), (482-63) (476-60)
(477-132)

வாய்வுக்கணையின் குணம்:-

வயிற்றைப் புரட்டி வலியெடுக்கும், வாய்நீர் கசந்து வாந்தியெடுக்கும், உடம்பு வற்றிவிடும், உண்ட உணவு செரிக்காது, வயிறு பொருமிக் கொள்ளும், ஊதிவிடும், ஆகிய இக்குறிகுணங்கள் ஏற்படின் அது வாய்வுக்கணையென்று சொல்லப்படும்.

(ஏடு 601-68)

வாதகணத்திற்குக் குடிநீர்:-

வெங்காயம், வெந்தயம், வில்லபத்திரி, ஆகியவற்றைச் சமமாக எடுத்து இடித்துப் போடுக. அதில் நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்க வாத கணம் நீங்கிப் போகும். (கை.பி. 98-166)

வாதகணத்துக்கு எண்ணெய்:-

கருஞ்சீரகம், கருகுரோகணி, உசிலிலை, வெங்காயம், சாதிபத்திரி, வில்வபத்திரி, காட்டுமல்லி, கடுக்காய் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமமாய் எடுத்துக் கொள்க. ஆமணக்கு நெய்யில் மேற்சொன்ன சரக்குகளைப் பொடித்துப் போட்டு காய்ச்சிக் கொள்க. பிறகு அதனில் தாய்ப்பால் சேர்த்து குழந்தைகட்குக் கொடுக்க வாதக்கணம் தீர்ந்து போகும்.

(ஏடு 798-24) (கை.பி. 98-166)

வளிகணைக்கு எண்ணெய்:-

ஒட்டுவேர், இண்டங்கொழுந்து, நாய்வேளைவேர், இலை, வசம்பு, வெள்வெங்காயம், கருஞ்சீரகம், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. சிற்றாமணக்கு எண்ணெயில் மேற்சொன்ன சரக்குகளைப் பொடித்துப் போட்டு வேகவைக்க. பதமாய் ஆன பிறகு இறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஒரு தட்டுக் காசளவு குழந்தைகட்குக் கொடுக்க வளி கணை சரியாய்ப்போகும். இவ்வெண்ணெயைச் சூரிய உதயத்திற்கு முன் கொடுக்கவும்.

-(ஏடு 612-7)

திரியபுத்தைலம் :- பொன்னாங்காணி வேர் புளியிலை [illegible]யின் நுனி, வேப்பயிலையின் நுனி இவற்றை வகைக்குப் பிடி எடுக்க. கோழியவரை வேர் [illegible] எடுக்க. அனைத்து சரக்குகளையும் இடித்து ஆமணக்கெண்ணெய் 325 மி.லி ல் போட்டு திரிய புடம் வைத்து 5-10மி.லி தினம் காலை மாலை கொடுக்கவும். (527-39)

கணைக்கு வயிறு கழிய எண்ணெய்:-

பேய்க்குமட்டிப்பழம், அந்நிலைச்சாறு, கருஞ்சீரகம், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், கரு கோரசனை, தேசாபுரம், அக்கிராகம், நீர்வள்ளி, சிற்றரத்தை, கிராம்பு ஆகிய சரக்குகளை ஒக்க சேர்த்துக் கொள்க. பொடித்த விளக்கெண்ணெயில் போட்டு வேக வைத்துக் கொடுக்கவும் குழந்தைகளுக்கு இதை உண்ட பிறகு பேதி யாகும் பேதியான பிறகு மோருஞ்சோறும் கொடுக்கவும்.

-(ஏடு 612-7)

ஊய்வு கணைக்கு :- சூரணம்:-

தாளிசபத்திரி, சீரகம், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், வால்மிளகு, கருஞ்சீரகம், கடு கோரோசனை, தாளிசபத்திரி ஆகிய மருந்துச் சரக்குகளை 5கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துக் கொள்க. அவற்றைப் பொடியாக்கிக் கொள்க. பொடிக்குச் சமமாய் சர்க்கரை சேர்த்துக் கொள்க. அப்பொடியைக் குழந்தையின் நோயின் தன்மையறிந்து வெந்நீரில் கலந்து கொடுக்கவாய்வுக்கணை கணை நீங்கிப்போகும்.

(ஏடு 601-69)

வாலேந்திரக்கணை - குணம்:-

உடம்பு காயும், நாக்கு வறுவறுக்கும், கண்களில் சிலாம்பிருப்பது போலிருக்கும் வயிறு மிகவும் கடுத்துலவும், சீறும் விழும், கபிச்சலேர்படும். முகமானது வீங்கி மார்பு வத்தி வயிறு பொருமி, எலும்பின் சந்துகள், புறங்கை, கால்கள் வீங்கும், உடலானது மெலியும், இக்குணங்கள் எப்படில் அது வாலேந்திர குணம் என்று கண்டறியலாம்.

உடல்காயும், எலும்புக்குள்ளே அடிக்கும், கண்ணில் மீன் சிராம்பிருப்பது போல் பற்றிக் கொள்ளும் தீரம் கறுப்புடன்விழும். உடலானது வற்றிவிடும். வயிறு பொருமும், வெப்பமாக இருக்கும், மலந்தள்ளும், முதுகுத்தண்டெலும்பு, சூடாயிருக்கும், கை, கால்கள் குளிர்ச்சியடையும், இவை வாலேந்திரக் கணையின் குறிகுணங்கள். இதை வாத்தணமிக்க தெய்வை அகத்திச் சரி செய்து கொள்ளலாம்.

(ஏடு 601-40-41)

வாலேந்திரம் - சாத்திய குணம்:-

தாய், தந்தையிர் வெப்பமாகிய நோயாலும், தாய் நீராடி முடித்த நான்காம் நாளில், எத்தன்மையான குணங்களைப் பெற்றுள்ளாரோ அதே அக்குழந்தையைச் சென்றடையும். (ஏடு 601-41)

<u>வாலேந்திர கணைக்குக் குடிநீர்:-</u>

வாழைப்பூ, இலி ( ) வல்லாரை, முசுமுசுக்கை, கீழ்க்காய் நெல்லி, கொச்சங்காய், கொடுப்பை, பழம்பாசி, பசலை, ஆகிய சரக்குகளை எடுத்து 1.3லி. தண்ணீர் விட்டு எட்டொன்றாய் காய்ச்சி இறக்கிக் கொள்க. அதில் பசுவெண்ணெய் பாக்களவு (2.20கி.) விட்டு 5 நாள் இருபொழுது குடித்தால் வால் சந்திரன் வரையும் இரு மாரும் நெய்குடித்தாசம் மாறிவிடும்.

(ஏடு 601-44)

<u>வாலேந்திரத்துக்கு நெய்:-</u>

சிறுபீளை, மணத்தக்காளி, திருத்தாளி, தொட்டால்வாடி, அறுகு, கரிசாலை, நிலப்பனை, சீதேவி மழுப்பலம் (ஒட்டொடிப்புல்) பிரமி, எழுத்தாணிறலி வல்லாரை, சிறுடக்கால், பொன்னாங்காணி, ஆகியவற்றை எடுத்துச் சாறெடுத்துக் கொள்க. வகைக்கு (325 மி.லி.) எடுத்த சாற்றிற்குப் பாதியளவு நெய்யைச் சேர்த்துக் கொள்க. பின்பு சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, தேவதாரம், கொடுப்பச்சை, கல்நார், கோட்டம், வசம்பு, ஏலம், அதிமதுரம், வசுவாசி, இலவங்கப்பத்திரி, அலிஸ், அக்கிரா ஆகிய மருந்துச் சரக்குகளை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. அவற்றைப் பொடித்து முன்கூறிய சாறுவிட்டரைத்துக் கரைத்துக் கொள்க.

அரைத்ததனை அடுப்பேற்றிப் பதமாய்க் காய்ச்சி மெழுகு பதமாக இறக்கி வடித்து வைத்துக் கொள்க. இறக்கி நெய்யை ஒரு கரண்டி அளவு குழந்தைகட்குக் கொடுக்க வாலேந்திரக்கணை தீரும்.

(கை.பி. 98-56)

<u>வாலேந்திர கணைக்கு வேறு நெய்:-</u>

தெற்றிப்பூ, பருத்திப்பிஞ்சு, மாதளம்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, கதலிப்பிஞ்சு, பொன்னாவரை, வல்லாரை ஆகியவற்றின் கொழுந்து ஆகிய மூலிகைகளின் சாறுகளை வகைக்கு 325 மி.லி. வீதம் எடுத்துக் கொள்க. சுதாயின் நெய்யை 1.3லி. எடுத்து சாறுடன் சேர்த்துக் கொள்க. பசுவின் பால் 1.3லி. சேர்க்க.

அதிமதுரம், கொடுப்பச்சை, இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், மாயக்காய், சாத்திரபேதி வசுவாசி, கிருஉஞ்சாதி நற்சீரகம், பெருஞ்சீரகம், கல்நார் ஆகிய மருந்துச்சரக்குகளை வகைக்கு 5கி. வீதமெடுக்க. இவற்றைப் பசுவின் பால்விட்டரைத்துக் கொள்க. அரைத்த விழுதை முன்சொன்ன கலவையில் சேர்த்து நெய்யை வார்த்து அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொள்க. மெழுகு பதமாக வரும் போது இறக்கிக் கலசத்தில் வடித்துக் கொள்க. அதனைக் காசெடை (4.4கி.) அளவு இரு போதும் குழந்தைகட்குக் கொடுக்க வாலேந்திரக் கணை தீர்ந்துவிடும்.

(கை.பி. 98-57)

வாலேந்திரத்தலைக் முழுக எண்ணெய்:-

அத்திக்தோல் 175கி., இத்திப்பட்டை 175கி., எடுத்து அரைத்து இடித்துப் பாத்திரத்திலிடுக. தண்ணீர்விட்டுக் காய்ச்சி எட்டொன்றாகக் குறுக்கி வடித்துக் கொள்க. கறிப் பால் சாறெண்ணெய் 1.3லி. எடுத்துக் கொள்க. அதிமதுரம் வேதவதாரம், கார்கோல், சந்தனம், மிளகு காயசீரகம், சடா- மாஞ்சில், நெல்லிமுள்ளி, கோட்டம், நற்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 5கி. எடுத்துக் கொள்க. இவற்றை இளநீர் விட்டரைத்துக் கொள்க. இவ்விழுதை எண்ணெயில் சேர்த்து காய்ச்சித் தலைமுழுக வாலேந்திரக் கணை நீங்கும்.

-(கை.பி. 98-59)

வாலேந்திர கணைக்கு:-

கோழிமுட்டையொன்றை எடுக்க. சடை அதிகமாகவுள்ள கோழி- யொன்றின் வயிற்றைப் பிளந்து குடலை எடுத்து விடுக. சுத்தம் செய்க. பித்தநீரலைக் களைந்து விடுக. நன்னாரி வேர் சமமாக எடுத்து நன்கு சேர்த்தரைத்துக் கொள்க.

(கை.பி. 98-58)

வாலேந்திர கணைக்கு இடை:-

பச்சரிசி மாவை எடுத்து அடை ஏழு செய்து வைத்துக் கொள்க. முருக்கிலையில் பொதிந்து கட்டிக் கொள்க. பறம்பாசி, குப்பைமேனி, குழி- மீட்டான், கீழ்க்காய் நெல்லி, சூரத்தாவிப்பச்சை, வல்லாரை (வெள்ளை, கருப்பு) சிறுதவிசெங்கழுநீர் ஆகிய மூலிகைகளை ஒரு பிடி எடுத்துக் கொள்க. அதில் கோட்டம், அதிவிடயம், மூமம், அதிமதுரம், ஏலவேலி, செஞ்சந்தனம், விலா மிச்சு கஸ்தூரி, மஞ்சள் ஆகிய இவற்றை 35கி. எடுத்து இடித்துப் பாத்திரத்திலிட்டுக் கொள்க. 5.2.லி. தண்ணீர் விடுக. அதன் மீது அவ்வடைகளை வைத்து மூடி அந்த சந்துகளுக்கு சீலை மண் செய்து அடுப்பிலேற்றுக. நீர் எரிந்து முக்காலாக வற்றும் போது நெருப்பை மாற்றி அடைகளையெடுத்து விடுக. காலை, மாலைக்கு ஓரடை வீதம் குழந்தைக்குக் கொடுக்க வாலேந்திரகணை நீங்கும். இதனை மூன்று நாட்களுக்குக் கொடுக்க நேத்திர நோய்கள் நீங்கிப்போகும்.

(கை.பி. 98,58-59)

வாலேந்திரத்துக்கு மை:-

இந்தம், சிலைக்காரம், பிரதாகணி, ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்க. குழிமீட்டான், கீழ்க்காய் நெல்லி, கையாந்தகரை, சித்திரப்பாலை, விஷ்ணுகிராந்தி, சிறுதவி உத்தமதாளி, சூரத்தாவி மூலி, செம்பொன்னெரிஞ்சி, வெற்றிலை, எருமைச்சம்பழம் ஆகிய மூலிகைகளின் சாற்றினையெடுத்துக் கொள்க. கோழிமுட்டைக்கருவையும்சேர்த்து முன் சொன்ன மருந்துடன் கலந்தாட்டிக் கொள்க. ஆட்டிய விழுதைவழித்தெடுத்து வெண்மையான சேலை, மாதவிடாயான சேலை ஆகிய இவ்விரண்டிலொன்றில் இட்டுக் கொள்க. அதனை நிழலிலுலர்த்தித் திரியாகத் திரித்துக் கொள்க. திரியை விளக்கில் விட்டு பசுநெய் வார்த்து விளக்கேற்றி எரித்து சேர்ந்து வரும் புகையை வழித்தெடுத்து தூய்மையான டப்பியிலடைத்துக் கொள்க.

விலாங்குத்தோல், தாரிசு ஆகிய இரண்டையும் ஆவின்நெய்விட்டு வறுத்துக் கரியாக்கிக் கொள்க. அதனை எடுத்தரைத்து முன் சொன்ன மைப்பையும் இதனுடன் சேர்த்துக் கொள்க. பசுவின் நெய்யில் இம்மையைக் குழைத்துக் கண்ணிலிட வாலேந்திரக் கணையால் குழந்தைக்கட்கு வரும் நோய்கள் நீங்கிப்போகும்.

(கை.பி. 98-55)

__வாலேந்திரத்துக் மை:-__

முயலின் உதிரத்தைப் பிடித்து வெள்ளைத் துணியிலிட்டு நிழலில் காயவைக்க வேண்டும். அதன் பித்து, ஈரல், (ஈரல்பித்து), அரிசி ஐந்து (புழுங்கலரிசி, பவா (அல்லது) வாற்கோதுமையரிசி, கோதுமையரிசி, சல்லரிசி, கருங்குறுவையரிசி) ஆகியவற்றை ஒன்று சேர்த்தரைத்து மூன்று முறை உருட்டி திரிவிலரைத்துத் திரியாக்கிக் கொள்க. அத்திரியைவிளக்கிலிட்டு விளக்கெண்ணெய் வார்த்து பற்ற வைக்க. எரிந்து வரும் மையைப்பிடித்து தூய்மையான பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

அதனை எடுத்து பசு நெய்யில் குழைத்து கண்ணிற்போட கணையினால் வந்த வாலேந்திரம் நீங்கிப் போகும். (கை.பி. 98-54)

__வாலேந்திரம் - சாத்திய குணம்:-__

விழியில் நீர் கோத்துக் கொள்ளும், நந்தைக்கிருக்கும்நோயாளவை பாலரை வந்தடையும்.

வேர்வை அதிகமாகும். மூக்கில் நீர் கோர்த்துக் கொள்ளும். கண்களில் சக்கிரன் ( ) வந்திடும். கழுத்தில் வந்து கைகால் வீங்கிக் கொள்ளும். சீதமும் இரத்தமுமாய் விழும், சீழ் மூலம் வெளித்தள்ளி நிற்கும். சோறினை வெறுக்கும். தாகம் அதிகமாக ஏற்பட்டு தண்ணீரை அதிகமாகக் குடிக்கச் செய்யும். உடல் மெலிந்து விடும். கண்ணில் சக்கிரன்வந்து பூ வெடித்து விடும். இவையேவால்சந்திரக் கணையின் குறிகுணங்கள். இது 1, 2, 3, 5ல் அறுதியாகத் தீர்ந்துவிடும். (ஏடு 601-42)

__வால் சந்திரக் கணை - குணம்:-__

உடலெல்லாம் சூடு காணும். கண்கள் வெளுக்கும் உடம்பு மெலியும், புறங்கை, கால்கள் வீங்கும். அன்னம், நீர் செல்லாது, முகம், கண் புருவங்கள் வெளுத்துக் காட்டும். கண்ணில் பீளை முற்றி விடும். உடல் கனக்கும். கண்ணில் கீழ்இமையிலிருந்து வரியில் பிறைபோல இருக்கும். (ஏடு 601-43)

__வால்சந்திரகணைக்கு நெய்:-__

பூலாத்தி, வெருகஞ்தோலி ஆகியசரக்கைக் கூட்டி அரைத்துக் கொள்க. அதனை ஆவின்நெய்யில் கலந்து கொள்க. நெய்க்கொட்டான், பழவுரையும் சமமாய் சேர்த்துக் கொள்க. அனைத்தையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும் போது வடித்திறக்கிக் கொள்க அதனைக் காசெடை (4.4கி.) அந்தி, சந்தி ஏழு நாள் கொள்ள வால்சந்திரன் தீரும். புளிப்பை நீக்க வேண்டும். (ஏடு 601-45)

விடக்கணத்தின் குறிகுணம்:-

வயிற்றில் சூடு அதிகமாகும். சுரம், தேகம் வெந்நிறமும், உடலில் குத்தலுண்டாகும். சரமேற்படும். அடிக்கடி சுவாசம் முட்டும். மேல் சுவாசமேற்படும். உடலிளைக்கும். இளைத்த நோய்நோக்கும். இந்நோய் மருந்துகளுக்கே அடங்கிடாத. இந்த நோய் குழந்தைக்குத் தோடமாகி விடும்.

(ஏடு 7313-27), (கை.பி. 98-170,171)

விடக்கணத்திற்குக் குளிகை:-

மாசிப்பத்திரி, அதிமதுரம், கோஷ்டம், ஏலம், செண்பகம், மாயக்காய், இலவங்கம், இலாமிச்சம், வெட்டிவேர், புஷ்பம் [illegible], கோரோசனை, கஸ்தூரி, ஆகிய சரக்குகளை எடுத்து [illegible] சாந்தாளாய்ச் செய்து கொள்க. [illegible] 130மி.கி. அளவு மாத்திரைகளாகச் செய்து கொள்க. மாத்திரையை திரிபலாதி மாசிப்பத்திரி குடிநீரில் உரைத்துக் கொடுக்க விடக்கணம் நீங்கிவிடும். (ஏடு 7313-28)-(கை.பி. 98-171)

விடநீர்க்கணத்தின் குணம்:-

சுரமானவை விட்டு விட்டுக்காயும், தண்ணீர்த்தாகம் ஏற்படும், கண்சிறிவம், குழந்தையானவன் பயந்து அலறும், தலை சுழலும், வயிறு வலிக்கும், கால், கைகள் சோர்ந்து விடும், குளிர்வரும், புத்தி, முகம், புருவம், கால் நகங்களை பளபளப்பாக விளக்கும். மேற்சொன்ன குணங்கள் விடநீர்க்கணத்திற்குடையவை.

(கை.பி. 98-171-172)

குடிநீர்:-

நாரத்தை, முசுட்டை, தவிப்பொருளைவிராகாய், சீரகம், மிளகு, சுக்கு, திப்பிலி ஆகிய சரக்குகளை வகைக்கு 5கி.எடுக்க. நாரத்தைச் சாறு விட்டுக் காய்ச்சிக் கொள்க. காய்ச்சிய பதத்துடன் வடித்துக் கொடுக்க விடநீர்க்கணநோய் தீரும்.

(கை.பி. 98-171-172)

விடபாகக்கணை - குறிகுணம்:-

உடலைத்தும் தந்தி விடும், எக்கிய பிறகு கண்ணில் வெள்ளைப்பூ விழும், தண்ணீர்த் தாகமேற்படும், சொல் மிகவும் மெலிதாகும், உடலானது வீங்கும். வெளுக்கும். இவை விடபாகக் கணையின் குறிகுணங்களாகும். (ஏடு 601-62)

விடமாந்த கணை - குறிகுணம்:-

கண் விழிக்காது, உடல் நடுங்கும், வெதும்பும் உதடு, நாக்கு காய்ந்தலும், தாகம் ஏற்படும். [illegible] (ஏடு 612-10)

விடமாந்தகணைக்கு குடிநீர்:-

சுக்கு, திப்பிலி, வசம்பு, பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், அதிமதுரம், அசமதாகம் (ஓமம்), பகலப்புத்தூ? பொன்முசட்டை வேர், நீர்ப்பூலாவேர், வாய்ப்பூலாவேர், சங்கம்வேர், கருஞ்சூரை வேர், நாய்க்-கருநெ வேர், முருந்தை வேர், செம்முள்ளி வேர், சிறு விளாவேர், வதவேளை வேர், நாய்க்கொட்டா வேர் ஆகிய மூலிகைகளைச் சமமாக எடுத்துக் கட்டி அவித்தைத்தட்டி வெப்பெண்ணெயில் போட்டு வேக வைத்துக் கொள்க. பதமான பிறகு இறக்கி வடிகட்டிக் கொள்க. இதனை விடமாந்த கணை உள்ள குழந்தைகட்கு உள்ளுக்குக் கொடுக்கவும். உடம்பில் மேலும் பூசிவிடவும் இதற்குப் பத்தியம் ஒன்றும் கிடையாது. விடமாந்த கணை நீங்கி நலமாகும். -(ஏடு 612-10)

விரத்திக்கணை – குறிகுணம்:-

சூத்திரப்பாவை போல் உடம்பு ஊதும். உணவு செல்லாது, செரியாது, தேகம் ஒளியற்றுப் போகும். பார்ப்பவர் சோகை என்று சொல்லத்தக்க அளவு முகம் வதங்கி கொள்ளும், இவையே விரத்திக் கணையின் குறிகுணங்கள்.

(ஏடு 601-70)

வீக்ககணம் – குறிகுணம்:-

உடம்பு முழுவதும் அதிகமாகக் காயும், உடம்பில் அங்காங்கு சிவந்து காணும், செரியாத மலம் கட்டும். சூடு அதிகமாயிருப்பதால் வீக்கம் ஏற்படும். இக்குறிகுணங்கள் காணப்படின் அது வீக்கக் கணம் என்றறியலாம். (477-151)

வீக்கக் கணத்திற்கு உள்ளியெண்ணெய்:-

உள்ளி, வசம்பு, ஓமம், அதிமதுரம், கோட்டம், கிராம்பு, சுக்கு, மிளகு, ஏலம், சுத்தன்குசம்பைவேர் ஆகிய இப்பத்துப் பொருட்களையும் வகைக்கு 4கி. வீதமெடுத்துப் பொடி செய்து கொள்க. 280கிராம் சிற்றாமணக்கு எண்ணெய் ஒரு மண் சட்டியிலூற்றிக் கொள்க. இவ்வெண்ணெயில் மருந்துப் பொடியைக் கலக்கிக் கொள்க. அக்கலவையை 6 மணிநேரம் கதிர்ப்புடத்தில் வைத்து அதனைச் சிறுகரண்டி ( ) அளவு காலையில் மட்டும் 3 (அல்லது) 5 நாட்கள் கொடுத்தால் குழந்தைகட்கு வரும் வீக்க கணம் நீங்கும்.

(482-78).(476-86). (477-151)

வீங்குகணம் – குறிகுணம்:-

உடம்பு வெளுக்கும், தண்ணீர் அதிகமாகக் குடிக்கும், உடல் மிகவும் அதிகமாக வீங்கும், அங்ஙனம் வீங்கி உடலுக்கு அதிகமான துன்பத்தைக் கொடுக்கும்.

(ஏடு 601-52)

வீக்கு கணைக்கு நெய்:-

தென்னம்பூச்சாறு 325மி.லி., நகரைச்சாறு 325மி.லி., கற்றாழைச் சாறு 325 மி.லி., வல்லாரைச்சாறு (நாரிப்பத்திரி, சுற்பாசி) 325மி.லி., பழம் பாசி (கொடிப்பாசி, கொட்டைப்பாசி, வெண்பாசி) 325மி.லி., எடுத்துக் கொள்க. சிற்றாமணக்கு எண்ணெய் 1.3லி. எடுத்துக் கொள்க. இவைத்தையும் ஒன்று சேர்த்துக் காய்ச்சிக் கொள்க. லோம் 10கி. மலைக்கப்பட்டை 20கி., கோட்டம், சீரகம், அதிமதுரம் ஆகியவற்றை 5கி. எடுத்துக் கொள்க. இவைகளைத்-தையும் பொடித்து அதில் போட்டு காய்ச்சி பதமாக பிறகு இறக்கி வடித்துக் கொள்க. [illegible] வடித்த எண்ணெயில் காசெடை (4.4கி.) எடுத்து குழந்தைகட்கு கொடுக்க வீங்கு கணம் மாறுமென்று முனிவர்சொன்னார். (ஏடு 601-53)

வெப்புக்கணம் – குறிகுணம் :-

உடல் காயும், நாவறட்சி ஏற்படும், தண்ணீர் அதிகமாகக் குடிக்கும், உடலில் வீக்கமேற்படும், மலமேயெற்காது, உடல் சுருங்கும், கழிச்சல் பலவீதமாக ஏற்படும், வயறு ஊடாயிருக்கும். உட்சோறு செரியாது. சீதம் விழும், கரங்காயும், பசி ஏற்படாது. –(ஏடு 601-51)

வெப்புக் கணைக்குக் குடிநீர்:-

பெரிய பீர்க்கங்காயைப் பழுக்காமல் கொண்டு வந்து காய்க்குள்ளே இருக்கின்ற பஞ்சைச் சப்பிப்போட்டு எடுத்துக் கொள்க. அதனை முலைப்பாலிலே ஊறப்போட்டு பிழிந்துக் கொள்க. அந்தப்பாலை இரண்டு சங்கிலிலே விடவும் வெப்புக்கணை தீரும். (ஏடு 601-95)

கறுத்த குறிஞ்சிட்டானிலை ஒரு மாங்காயளவு பறித்துக் கொண்டு வந்து. அதைச் சட்டியிலிட்டுக் கொள்க. சிறாம்பு 12 எடுத்து நல்லு வெள்ளையாக தண்ணீரிலே சுத்தி அதிலே போடு. 3.9 லி. (390மி.லி.) தண்ணீர் அதிலே வார்த்து காய்ச்சுக. நன்றாகக் காய்ந்து அரைக்கால (165 மி.லி.) ஆனவுடனே இறக்கிக் கொள்க. அக்குடிநீரில் மேற்படி தண்ணீருக்கும் மத்தளை இனைத்து அதிலேயே கலக்கிக் கொள்க. சங்கிலே விட்டு மூன்று நாள் மூன்று வேளை கொடுக்க வெப்புக் கணம் தீர்ந்து போகும். (ஏடு 601-95)

வெப்புக் கணைக்குக் குடிநீர்:-

புளியாரை ஒரு தேங்காயளவு கொண்டு வந்து. அதை 1.3லி. தண்ணீர் விட்டு நீர் வற்றும் அளவு வேகவைத்துக் கொள்க. பிறகு அந்தப் புளியாரையை எடுத்து நல்லு பிசைந்துக் கொள்க. மீதமுள்ள நீரை வடிகட்டி வைத்துக் கொள்க. அதில் 165 மி.லி. வெள்ளாட்டுப்பால், 165 மி.லி. தண்ணீரும் சேர்த்துக் காய்ச்சுக. தண்ணீர் வற்றியவுடன் அப்பாலை இறக்கி ஆற வைத்துக் கொள்க. அதில் மேற்படி புளியாரையைப் போட்டெடுத்துக் கொள்க. நற்சீரகத்தை 488 மி.லி. எடுத்து வறுத்துப் பொடி செய்து போடுக. இம்மருந்தை மூன்று நாள் ஆறு வேளை கொடுக்க வெப்புக்கணம் குணமாகும். (ஏடு 601-99)

கற்பம்:-

வல்லாரைச்சமூலம் ஒருபிடிங்காயளவு அரைத்து எடுத்து அரைத்த 325மி.கி பசுவின்பாலில கலக்கிக் கொடுக்கவும். இப்படியாக மூன்று மாதத்திற்கு ஒரு வேளை கொடுக்கவும். வெப்புக்கணம் நீங்கும். (ஏடு 601-96)

வெப்புக்கணைக்கு எண்ணெய்:-

காராம்பசுவின் பால் 1.3லி., நெய் 1.3லி., கொக்கை, வல்லாரை, மொசுமொசுக்கை, ஆவின் கொழுந்து, தகரை, பழம்பாசி, சுவனை, கிச்சிலிகாய் நெல்லி, கரை, விழுது, பொடுதலை (   ) கிழங்கு, பொதியல் கிழங்கு, நாவல் தாமரை ஆகிய மூலிகைகளின் சாறுகளை வகைக்கு 325மி.லி. எடுத்துக் கொள்க. ஏலம் இலவங்கம், கடுகுப்பச்சை, கிராம்பு, சப்பு, தேற்றான், சதுரி, கோட்டம், நெல்லி, செண்பகம், திப்பிலி, சாத்திரபேதி, மாசிக்காய், சுக்கு, கோரோசனை சீனி ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்க. அரைத்தெடுத்துக் கொள்க. மேற்கூறிய நெய்யை இதனுடன் சேர்க்க. தீயெரித்துக் காய்ச்சி பதத்தோடு இறக்கி வடித்துக் கொள்க. இதனைக் காசெடை (4.4கி.) அளவு குழந்தைகட்குக் கொடுக்க வெப்புக் கணை நீங்கி விடும். (ஏடு 601-51-52)

வெப்புக்கணைக்குமருந்து ~~[illegible]~~:-

நாவல்பட்டை, குன்றிவேர், துளசி, வல்லாரை, கருஞ்சீரகம், முத்தக்காசு, ஆகிய மூலிகைகளை இடித்துப் பாத்திரத்திலிட்டுக் கொள்க. 1.3லி. தண்ணீர் விட்டுக் காய்ச்சுக. எட்டொன்றாய்ச் சுருக்கிக் கொள்க. அக்குடிநீரில் சாதிக்காயை யுரைத்துக் குடித்தால் வெப்புக் கணை தீரும் -(ஏடு 601-99)

சோற்றுக்காய், நன்னாரி, வாழைப்புளி, மருதம்பட்டை, சதுரி, நற்சீரகம், அதிமதுரம், சாதிக்காய், ஆகிய மூலிகைகளையெடுத்துக் கொள்க. தண்ணீர் விட்டு எட்டொன்றாய் சுருக்கிக் காய்ச்சிக் கொள்க. அக்குடிநீரில் வெந்த மருந்தையெடுத்துக் கொண்டு நன்கு கலக்கிக் குடித்துக் கொண்டால் வெப்புக் கணை நீங்கும். குழந்தைக்குக் குறைவாகக் கட்டிக் கொடுக்கவும். (ஏடு 601-100)

சாதிக்காயை மாத்திரம் எடுத்து மேற்படி குடிநீர் விட்டரைத்து குடிநீரில கலக்கிக் கொடுக்க தீரும்.

அத்தி, ஆல், அரச மொட்டுகள், மருதம்பட்டை, ஆல், அத்திப்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு, நந்நைச்சூர்வேர், முத்தக்காசு, ஆகிய மூலிகைகளை எடுத்து இடித்துக் கொள்க.

கிராம்பு, சீரகம், அதிவிடையம், சாதிக்காய், ஓமம் ஆகியவற்றை 5கி. எடுத்து தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டொன்றாகச் சுருக்கிக் குடிநீராக்கிக் கொள்க. குடிநீராக்கிய பிறகு சாதிக்காயையும் அதிவிடையத்தையும் குடிநீரில் இட்டு குடிநீர் விட்டரைத்துக் கொள்ள வேண்டும். அரைத்ததைக் குடிநீரில் கலக்கிக் கொடுக்க வேண்டும். குழந்தைகளின் வயது, நோயின் வன்மைதன்மையறிந்து மருந்தைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்க வேண்டும். (ஏடு 601-100-101)

தலையினால் வரும் வெள்ளை கலக்கரிச்சல், இரத்தக் கழிச்சலுக்கு உள்ளுக்குக் கொடுக்க நெய்:-

ஆவாரையிலையை நெல்கொள்கிற பெட்டிநிறைய கொண்டு வந்து ஆற்று மணலை வறுத்துக் கட்டி குவக்கி சிறிது நேரம் வைத்தெடுக்க. பிறகு மணலை தட்டிவிட்டு இலையை உரலிலேயிட்டு தண்ணீர் தெளித்திடித்து பிழிய சாறு வரும். இலையில் வழுவழுப்பு இருக்காது, அந்நெய்யை ஆறுநாள் பன்னிரண்டு பொழுது கொடுக்க குணமாகும். (ஏடு 601-102)

வெப்புக்கழலைக்கு மருந்து:-

பசுவின் வெண்ணெய் 325மி.லி., அத்திப்பிஞ்சு இடித்துச் சாறு 325மி.லி., பருத்திப் பிஞ்சு இடித்த சாறு 325மி.லி., செவ்விளநீர் கதம்பையிடித்த சாறு 325 மி.லி. ஆகிய இச்சாறுகளைத் தனித்தனியே இடித்துப் பிழிந்து வடிகட்டி ஒன்றாய்க் கலந்து கொள்க.

ஏலம், இலவங்கம், கொத்தமல்லி, நற்சீரகம், ஓமம், கோட்டம், அதிவிடையம், பெருங்காயம், மாயக்காய், வாய்விடங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிமதுரம், இவற்றை வகைக்கு 1½ கி. எடுத்துக்கொள்க. இவையனைத்தையும் மேற்சொன்ன சாறு வகைகளை விட்டரைத்துக் கொள்க. மேற்கூறப்பட்டுள்ள நெய்யில் சேர்த்துக் கொள்க. வங்கநத்தை 6, காட்டு நத்தை 6 இவை இரண்டையும் சேர்க்க. இதையெடுத்து நெய்யில் சேர்த்து வேகவைத்து மெழுகு பதமானவுடன் வடித்து வைத்துக் கொள்க. அதனை ஒரு ரூபாயளவு நெய்யை 5 நாள், 10 பொழுது கொடுக்கவும், வெப்புகழலை தீரும். அண்டந்தள்ளியிருப்பினும் உள்ளே வாங்கும். -(ஏடு 601-102)

வெப்பு கழலை - குறிகுணம்:-

மெய்வெளுத்து முகம் மிகவும் வீங்கும், கழுத்து திரந்து கண் வெளுக்கும், உடலுறுப்புகள் தளர்ந்து மயக்கமுண்டாகும். பழுத்த பழம் போல் உடம்பு வெளுக்கும், பச்சை நரம்பு அதிகமாகத் தெரியும், உடல் மிகவும் சாயும், உணவில் விருப்பு இல்லாது போகும். (ஏடு 601-53)

வெப்பு கழலைக்கு நெய்:-

நாயுருவி, சிறுகீரை, பொன்னாங்காணி, சீரகம், அதிமதுரம், ஏலம், மாசிக்காய், செருப்படைப்பச்சை, வெங்காயம், கிராம்பு, மஞ்சள், பெருங்காயம், மான்கொம்பு, இவைகளை 5கி. வீதமெடுத்துக் கொள்க. அனைத்தையும் அரைத்து வடித்துக் கொண்டு காசளவு (4.4கி.) உள்ளே கொடுத்தால் வெப்பு கழலை நில்லாது ஓடிவிடும்.

-(ஏடு 601-54)